MASTER NEGATIVE NUMBER

6166.98

நவசக்தி

சிலம்பு 6, பரல் 16

February 05, 1926

Record no. 2305

Navacakti

Cilampu 6, paral 16

February 05, 1926

Record no. 2305

Registered No. M. 1500. "NAVASAKTI" WEEKLY

நவசக்தி

வாரப்பதிப்புச் சந்தா விவரம்	ரூ.	அ.
வருட சந்தா	5	0
ஆறுமாத சந்தா	3	0
வெளிநாடு-வருட சந்தா ...	6	0

வாரப் பதிப்பு

வெள்ளிக்கிழமை தோறும் வெளிவருவது.

விளம்பர விகிதம்		
கலம் 1-க்கு வாரம் 1-க்கு ரூபா	7	0
சில்லரை விளம்பரம் 1 அங்.	0	8
முன்பணமின்றி விளம்பரஞ் செய்யப்படமாட்டாது.		

" வீடு பெறநில் " " மாற்ருனுக் கிடங்கொடேல் " " ஏற்பதிகழ்ச்சி "

சிலம்பு ௬ குரோதன௵ தைமீ ௨௩௨ (5—2—26) பரல் ௧௯

சிலம்பொலி

"மலைப்பொழிவு"

இவ்வாரம் இம்முதற்பக்கத்துக்கு என்ன எழுதலாம் என்று எண்ணிக்கொண்டிருந்த போது கிறிஸ்துநாதர் மலைமீதிவர்ந்துபொழிந்த அருண்மொழி நினைவிலுற்றது. இம்மொழி காந்தியடிகள் வாழ்வைச் சத்தியாக்கிரகத்தில் ஈர்த்தாண்டது என்பது கவனிக்கத்தக்கது. அது, காந்தியடிகளை மாத்திரமல்ல, மற்ற எத்துணையோ எத்துணையோ மக்களை அவ்வுண்மை நெறியில் நிறுத்தியாண்டிருக்கிறது. மனிதப் பிறவியின் நோக்கமும் முடிவும் அவை பெறுதற்குரிய வழியும் அச்சொற்பொழிவில் மிளிர்கின்றன.

தென்னாப்பிரிக்காவில் காந்தியடிகள் சத்தியாக்கிரகப்போர் தொடங்கியிருந்தபோது, அவரது வரலாறு எழுதப்புகுந்த அன்பர் ஜோஸப் டோக் என்பார் காந்தியடிகளை நோக்கி "தங்கட்கு இவ்வுணர்வு யாண்டிருந்து பிறந்தது" என்று கேட்டனர். அதற்குக் காந்தியடிகள் ஒரு குஜராத் பாட்டிலுள்ள ஒரு கூறும், கிறிஸ்து நாதரின் மலைப்பொழிவுமே காரணமென்று கூறினர். காந்தியடிகள் சத்தியாக்கிரக வாழ்விற்கு விதை விதைத்த மெய்யுரை தற்கால அரசியல் உலகத்தார்க்குரியதென்பது எமது கருத்து. இப்பொழுது நமது அரசியலுலகுக் குற்றுள்ள நோயைக் குணப்படுத்தும் மருந்து கிறிஸ்துவின் மலை மருந்தென்றே எமக்குத் தோன்றுகிறது.

நமது நாட்டில் சத்தியாக்கிரகப் போரில் தலைப்பட்ட நண்பர் சிலர் சின்னாளாகச் சாதிப்பூசலுக் கிரையாகிச் சினந்து நெறிபல்லா நெறி நின்று எழுதியும் பேசியும்வருவது எமதுள்ளத்துறும்போதெல்லாம் நாம் இளமை தொட்டுப் பொன்னேபோல் போற்றி வரும் இம்மலைமொழிமீது கருத்துச்செல்வது வழக்கம். அம்மறைமொழி, வாழ்வை நேர்மையில் நிறுத்தி ஆளவல்ல ஆற்றலுடையது.

மனிதப்பிறவி விலங்கிற்கும் தெய்வத்திற்கும் இடையில் நிற்பது. இக்காரணத்தால் மனிதன் மாட்டு வன்மம் வஞ்சம் பொருமை முதலிய விலங்கு நீர்மைகளையும் அன்பு இரக்கம் பொறுமை முதலிய தெய்வ நீர்மைகளையுங் காண்கிறோம். விலங்கு நீர்மை துராக்கிரகத்தையும் தெய்வ நீர்மை சத்தியாக்கிரகத்தையும் எழுப்பிக்கொண்டிருக்கும். இவ்வுலகில் பெரிதும் முழுச் சத்தியாக்கிரகிகளைக் காண்டல் அரிது. அந்நிலையெய்த ஒவ்வொருவரும்முயலல்வேண்டும். சத்தியாக்கிரகஉணர்வு பெருகித் துராக்கிரக உணர்வு சுருங்கி வரும்போழ்தும், சிற்சில சமயத்தில் துராக்கிரகம் முட்டி எழுதலுமுண்டு. அவ்வெழுச்சிக்கு இடந்தாராமல் அதை ஒடுக்க முயல்வது அறிவுடைமை. ஒரு வேளை அறியாமையால் துராக்கிரகம் எழுந்து விளையாடினும், அது குறித்துப் பின்னை வருந்தியும் விரதமிருந்தும் ஆண்டவனை வழுத்தியும் கழுவாய் தேடல் வேண்டும். குற்றங் குறித்து வருந்தும் மனமுடையான் உய்யு நெறி எளிதிற் காண்பவனவன். 'கொடிறும் பேதையுங் கொண்டது விடா' என்றபடி தான் செய்தது தவறென உணர்ந்தும் கழுவாய்தேட ஒருப்படாதவனைக் குறித்து இரங்கவேண்டுவதே.

உலகில் சத்தியாக்கிரகத்தில் விருப்புக்கொண்டு, அவ்வழியில் நிற்க முயல்வோரே பெரிதுஞ் சத்தியாக்கிரகிகள் என்று சொல்லப்படுகிறார்கள். அவர்கள் ஒல்லும் வகை தூயநிலையில் நிற்பதோடு தூய்மைக்கு ஊறு நிகழ்ப்போது வருந்தி வருந்திக் கழுவாய்தேடி சுழலும் மேலும் தூய்மையை வளர்த்துச்செல்லவேண்டும். "தன்னைப்போலப் பிறரைப் பார்த்தல்" என்னும் பேரறமே சத்தியாக்கிரகத்தின் உயிர் நாடி என்பதை யுணர்ந்து, எவர்க்கும் எவ்வழியிலுந் தீங்கு செய்யாப் பெருநெறி நிற்பது துராக்கிரகத்தைச்சிதைப்பதாகும். பிறர் துராக்கிரகத்தைப் போக்க எழுதற்கு முன்னர் ஒருவன் தன் பாலுள்ள துராக்கிரகத்தை யொழிக்கக் கடவன்.

காந்தியடிகள் தாம் பெற்ற சத்தியாக்கிரக இன்பத்தை நமதுநாடும் நாட்டுவாயிலாக உலகமும் பெறவேண்டுமென்னுங் கருணைமேலீட்டான் சத்தியாக்கிரக இயக்கத்தைப் பலமுறை எழுப்பினர். அவ்வாறெழுந்த கிளர்ச்சிகளுள் தலையாயது சத்தியாக்கிரகத்தின் ஒரு கூறாகிய ஒத்துழையாக் கிளர்ச்சியாகும். இக்கிளர்ச்சி நாட்டைத் தூய்மைப்படுத்த எழுந்தது என்பது மிகையாகாது. இவ்வியக்கம் இதுபோழ்து ஒடுக்கப்பட்டது. இவ்வேளையில் நாட்டின் அரசியல் நிலை எவ்வாறிருக்கிறது? குறை கூறல், சாதிப்பூசல், வசை மொழிதல் முதலியன அரசியல் ஞானத்துறைகளாகக் கருதப்படுகின்றன. இவைமலியும் இவ்வேளையில் கிறிஸ்துவின் மலைப்பொழிவு ஒவ்வொருவர் நினைவிலுறவேண்டுவது அவசியம். அது வருமாறு :—

மத்தேயு அதிகாரம் 5

"அவர் திரளான ஜனங்களைக்கண்டு மலையின்மேல் ஏறினர்; அவர் உட்கார்ந்தபொழுது, அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் வந்தார்கள்.

அப்பொழுது அவர் தமது வாயைத் திறந்து அவர்களுக்கு உபதேசித்துச் சொன்னது என்னவென்றால்:

ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பரலோக ராஜ்யம் அவர்களுடையது.

துயரப் படுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் ஆறுதலடைவார்கள்.

சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள்.

நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள்.

இரக்க முள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள்.

இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்.

சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப் படுவார்கள்.

நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; பரலோக ராஜ்யம் அவர்களுடையது.

என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள் பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களா யிருப்பீர்கள்;—

சந்தோஷப்பட்டு, களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியா யிருக்கும்; உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்களே.

நீங்கள் பூமிக்கு உப்பா யிருக்கிறீர்கள்; உப்பானது சாரமற்றுப் போனால், எதினால் சாரமாக்கப்படும்? வெளியே கொட்டப்படுவதற்கும், மனுஷரால் மிதிக்கப்படுவதற்குமே ஒழிய வேறொன்றுக்கும் உதவாது.

நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமா யிருக்கிறீர்கள்; மலையின்மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்க மாட்டாது.

விளக்கைக் கொளுத்தி மரக்காலால் மூடி வைக்காமல், விளக்குத் தண்டின்மேல் வைப்பார்கள்: அப்பொழுது அது வீட்டிலுள்ள யாவருக்கும் வெளிச்சங் கொடுக்கும்.

இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது.

நியாயப் பிரமாணத்தை யானாலும் தீர்க்கதரிசனங்களை யானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக்கொள்ளாதேயுங்கள்; அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேன்.

வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும், நியாயப் பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும் அதில் ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும், ஒழிந்து போகாது என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

ஆகையால், இந்தக் கற்பனைகள் எல்லாவற்றிலும் சிறிதானதொன்றையாகிலும் மீறி, அவ்விதமாய் மனுஷருக்குப் போதிக்கிறவன் பரலோக ராஜ்யத்தில் எல்லாரிலும் சிறியவன் என்னப்படுவான்; இவைகளைக் கைக்கொண்டு போதிக்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பெரியவன் என்னப்படுவான்.

வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால், பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

கொலை செய்யாதிருப்பாயாக என்பதும், கொலைசெய்கிறவன் நியாயத் தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான் என்பதும், பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள்.

நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; தன் சகோதரனை நியாயமில்லாமல் கோபித்துக் கொள்பவன் நியாயத் தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்; தன் சகோதரனை வீணனென்று சொல்லுகிறவன் ஆலோசனைச் சங்கத் தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்; மூடனே என்று சொல்லுகிறவன் எரி நரகத்துக்கு ஏதுவாயிருப்பான்.

ஆகையால் நீ பலிபீடத்தினிடத்தில் உன் காணிக்கையைச் செலுத்த வந்து, உன் பேரில் உன் சகோதரனுக்குக் குறை உண்டென்று அங்கே நினைவு கூருவாயாகில்,

அங்கேதானே பலிபீடத்தின் முன் உன் காணிக்கையை வைத்துவிட்டுப் போய், முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகி, பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்து.

எதிராளி உன்னை நியாயாதிபதியினிடத்தில் ஒப்புக் கொடாமலும், நியாயாதிபதி உன்னைச் சேவகனிடத்தில் ஒப்புக் கொடாமலும், நீ சிறைச்சாலையில் வைக்கப் படாமலும் இருக்கும்படியாக, நீ உன் எதிராளியோடு வழியில் இருக்கும்போதே சீக்கிரமாய் அவனுடனே நல்மனம் பொருந்து.

பொருந்தாவிட்டால், நீ ஒருகாசும் குறைவின்றிக் கொடுத்துத் தீர்க்குமட்டும் அவ்விடத்திலிருந்து புறப்படமாட்டாய் என்று, மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்.

விபசாரஞ் செய்யாதிருப்பாயாக என்பது பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள்.

நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ் செய்தாயிற்று.

உன் வலது கண் உனக்கு இடறலுண்டாக்கினால், அதைப் பிடுங்கி எறிந்து போடு; உன் சரீரம் முழுவதும் நரகத்தில் தள்ளப் படுவதைப் பார்க்கிலும், உன் அவயவங்களில் ஒன்று கெட்டுப் போவது உனக்கு நலமா யிருக்கும்.

உன் வலது கை உனக்கு இடறலுண்டாக்கினால், அதைத் தறித்து எறிந்து போடு; உன் சரீரம் முழுவதும் நரகத்தில் தள்ளப்படுவதைப் பார்க்கிலும், உன் அவயவங்களில் ஒன்று கெட்டுப் போவது உனக்கு நலமாயிருக்கும்.

தன் மனைவியைத் தள்ளிவிடுகிற எவனும் தள்ளுதற் சீட்டை அவளுக்குக் கொடுக்கப்படவேண்டும் என்று உரைக்கப்பட்டது.

நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; வேசித்தன முகாந்தரத்தினாலொழிய தன் மனைவியைத் தள்ளிவிடுகிறவன், அவளை விபசாரஞ் செய்யப் பண்ணுகிறவனாயிருப்பான்; அப்படித் தள்ளிவிடப்பட்டவளை விவாகம் பண்ணுகிறவனும் விபசாரஞ் செய்கிறவனா யிருப்பான்.

அன்றியும், பொய்யாணை யிடாமல், உன் ஆணைகளைக் கர்த்தர் முன்னிலையாய்ச் செலுத்துவாயாக என்று பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள்.

நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; பரிச்சேதம் சத்தியம் பண்ணவேண்டாம்; வானத்தின்பேரில் சத்தியம் பண்ணவேண்டாம், அது தேவனுடைய சிங்காசனம்.

பூமியின் பேரிலும் சத்தியம் பண்ணவேண்டாம், அது அவருடைய பாதபடி; எருசலேமின் பேரிலும் சத்தியம் பண்ண வேண்டாம், அது மகாராஜாவினுடைய நகரம்.

உன் சிரசின்பேரிலும் சத்தியம் பண்ணவேண்டாம், அதின் ஒரு மயிரையாவது வெண்மையாக்கவும் கறுப்பாக்கவும் உன்னால் கூடாதே.

உள்ளதை உள்ளதென்றும், இல்லதை இல்லதென்றும் சொல்லுங்கள்; இதற்கு மிஞ்சினது தீமையினால் உண்டாயிருக்கும்.

கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல் என்று, உரைக்கப் பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்:

நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; தீமையோடு எதிர்த்து நிற்கவேண்டாம்; ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால், அவனுக்கு மறு கன்னத்தையும் திருப்பிக் கொடு.

உன்னோடு வழக்காடி உன் வஸ்திரத்தை எடுத்துக் கொள்ள வேண்டுமென்றிருக்கிறவனுக்கு உன் அங்கியையும் விட்டுவிடு.

ஒருவன் உன்னை ஒருமைல் தூரம் வரப் பலவந்தம் பண்ணினால், அவனோடே இரண்டுமைல் தூரம் போ.

உன்னிடத்தில் கேட்கிறவனுக்குக் கொடு, உன்னிடத்தில் கடன் வாங்க விரும்புகிறவனுக்கு முகங் கோணாதே.

உனக்கடுத்தவனைச் சிநேகித்து, உன் சத்துருவைப் பகைப்பாயாக என்று சொல்லப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்.

நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப் படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்.

இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்குப் புத்திரரா யிருப்பீர்கள்: அவர், தீயோர் மேலும் நல்லோர் மேலும் தமது சூரியனை உதிக்கப் பண்ணி, நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யப் பண்ணுகிறார்.

உங்களை சிநேகிக்கிறவர்களையே நீங்கள் சிநேகிப்பீர்களானால், உங்களுக்குப் பலன் என்ன? ஆயக்காரரும் அப்படியே செய்கிறார்கள் அல்லவா?

உங்கள் சகோதரரை மாத்திரம் வாழ்த்துவீர்களானால் நீங்கள் விசேஷித்துச் செய்கிறது என்ன? ஆயக்காரரும் அப்படிச் செய்கிறார்கள் அல்லவா?

ஆகையால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணரா யிருக்கிறது போல, நீங்களும் பூரண சற்குணரா யிருக்கக் கடவீர்கள்.

அதிகாரம் 6

மனுஷர் காணவேண்டுமென்று அவர்களுக்கு முன்பாக உங்கள் தர்மத்தைச் செய்யாதபடிக்கு எச்சரிக்கையா யிருங்கள்; செய்தால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவினிடத்தில் உங்களுக்குப் பலனில்லை.

ஆகையால் நீ தர்மஞ் செய்யும்போது, மனுஷரால் புகழப்படுவதற்கு, மாயக்காரர் ஆலயங்களிலும் வீதிகளிலும் செய்வதுபோல, உனக்கு முன்பாகத் தாரை ஊதுவியாதே; அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

நீயோ தர்மஞ் செய்யும்போது, உன் தர்மம் அந்தரங்கமா யிருப்பதற்கு, உன் வலது கை செய்கிறதை உன் இடது கை அறியாதிருக்கக் கடவது.

அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா தாமே உனக்கு வெளியரங்கமாய்ப் பலனளிப்பார்.

Roja Muthiah Research Library
3rd Cross Road, C P T Campus
Taramani, Chennai 600 113.

Best copy available

அன்றியும் நீ ஜெபம் பண்ணும்போது மாயக்காரரைப்போலிருக்க வேண்டாம்; மனுஷர் காணும்படியாக அவர்கள் ஜெப ஆலயங்களிலும் வீதிகளின் சந்திகளிலும் நின்று ஜெபம் பண்ண விரும்புகிறார்கள்; அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

நீயோ ஜெபம் பண்ணும்போது, உன் அறை வீட்டுக்குள் பிரவேசித்து, உன் கதவைப் பூட்டி, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம் பண்ணு; அப்பொழுது, அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பலனளிப்பார்.

அன்றியும் நீங்கள் ஜெபம் பண்ணும்போது, அஞ்ஞானிகளைப் போல வீண்வார்த்தைகளை அலப்பாதேயுங்கள்; அவர்கள், அதிக வசனிப்பினால் தங்கள் ஜெபம் கேட்கப்படுமென்று நினைக்கிறார்கள்.

அவர்களைப் போல நீங்கள் செய்யாதிருங்கள்; உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் வேண்டிக் கொள்ளுகிறதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்திருக்கிறார்.

நீங்கள் ஜெபம் பண்ணவேண்டிய விதமாவது, பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக.

உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறது போல பூமியிலேயும் செய்யப்படுவதாக.

எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்.

எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்.

எங்களைச் சோதனைக் குட்படப் பண்ணாமல், தீமையினின்று எங்களை ரக்ஷித்துக்கொள்ளும், ராஜ்யமும், வல்லமையும், மகிமையும், என்றென்றைக்கும் உம்முடையவைகளே, ஆமென், என்பதே. மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரம பிதா உங்களுக்கும் மன்னிப்பார்.

மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார்.

நீங்கள் உபவாசிக்கும்போது, மாயக்காரரைப் போல முகவாடலாய் இராதேயுங்கள்; அவர்கள் உபவாசிக்கிறதை மனுஷர் காணும் பொருட்டாக, தங்கள் முகங்களை வாடப் பண்ணுகிறார்கள்; அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

நீயோ உபவாசிக்கும்போது, அந்த உபவாசம் மனுஷர்களுக்குக் காணப்படாமல், அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவுக்கே காணப்படும்படியாக, உன் தலைக்கு எண்ணெய் பூசி, உன் முகத்தைக் கழுவு.

அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா உனக்கு வெளியரங்கமாய்ப் பலனளிப்பார்.

பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்க வேண்டாம்; இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும்; இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள்.

பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவையுங்கள்; அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை; உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்.

கண்ணானது சரீரத்தின் விளக்காயிருக்கிறது; உன் கண் தெளிவாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் வெளிச்சமாயிருக்கும்.

உன் கண் கெட்டதாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் இருளாயிருக்கும்; இப்படி உன்னிலுள்ள வெளிச்சம் இருளாயிருந்தால், அவ்விருள் எவ்வளவு அதிகமாயிருக்கும்!

இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ் செய்ய ஒருவனாலும் கூடாது; ஒருவனைப் பகைத்து, மற்றவனைச் சிநேகிப்பான்; அல்லது ஒருவனைப் பற்றிக்கொண்டு, மற்றவனை அசட்டை பண்ணுவான்; தேவனுக்கும் உலகப் பொருளுக்கும் ஊழியஞ் செய்ய உங்களால் கூடாது.

ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம் என்று உங்கள் ஜீவனுக்காகவும்; என்னத்தை உடுப்போம் என்று உங்கள் சரீரத்துக்காகவும் கவலைப்படாதிருங்கள் என்று, உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஆகாரத்தைப் பார்க்கிலும் ஜீவனும், உடையைப் பார்க்கிலும் சரீரமும் விசேஷித்தவைகள் அல்லவா?

ஆகாயத்துப் பட்சிகளைக் கவனித்துப் பாருங்கள்; அவைகள் விதைக்கிறதுமில்லை, அறுக்கிறதுமில்லை, களஞ்சியங்களில் சேர்த்துவைக்கிறதுமில்லை; அவைகளையும் உங்கள் பரம பிதா பிழைப்பூட்டுகிறார்; அவைகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்கள் அல்லவா?

கவலைப்படுகிறதினாலே உங்களில் எவன் தன் சரீரஅளவோடு ஒரு முழத்தைக் கூட்டுவான்?

உடைக்காகவும் நீங்கள் கவலைப் படுகிறதென்ன? காட்டுப் புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்று கவனித்துப் பாருங்கள்; அவைகள் உழைக்கிறதுமில்லை, நூற்கிறதுமில்லை;

என்றாலும் சாலொமோன் முதலாய் தன் சர்வ மகிமையிலும் அவைகளில் ஒன்றைப் போலாகிலும் உடுத்தியிருந்ததில்லை என்றும், உங்களுக்குச் சொல்லுகிறேன்.

அற்ப விசுவாசிகளே! இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படும் காட்டுப் புல்லுக்குத் தேவன் இவ்விதமாக உடுத்துவித்தால், உங்களுக்கு உடுத்துவிப்பது அதிக நிச்சயமல்லவா?

ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று, கவலைப்படாதிருங்கள்.

இவைகளையெல்லாம் அஞ்ஞானிகள் நாடித் தேடுகிறார்கள்; இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார்.

முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்.

ஆகையால், நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள்; நாளையத்தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும்.

அதிகாரம் 7

நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதபடிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்.

ஏனெனில், நீங்கள் மற்றவர்களைத் தீர்க்கிற தீர்ப்பின்படியே நீங்களும் தீர்க்கப்படுவீர்கள்; நீங்கள் மற்றவர்களுக்கு அளக்கிற அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும்.

நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை உணராமல், உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப் பார்க்கிறதென்ன?

இதோ, உன் கண்ணில் உத்திரம் இருக்கையில் உன் சகோதரனை நோக்கி: நான் உன் கண்ணிலிருக்கும் துரும்பை எடுத்துப் போடட்டும் என்று நீ சொல்வதெப்படி?

மாயக்காரனே! முன்பு உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை எடுத்துப்போடு; பின்பு உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுத்துப்போட வகை பார்ப்பாய்.

பரிசுத்தமானதை நாய்களுக்குக் கொடாதேயுங்கள்; உங்கள் முத்துகளைப் பன்றிகள் முன் போடாதேயுங்கள்; போட்டால் தங்கள் கால்களால் அவைகளை மிதித்து, திரும்பிக்கொண்டு உங்களைப் பீறிப்போடும்.

கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்;

ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக் கொள்ளுகிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும்.

உங்களில் எந்த மனுஷனாவது தன்னிடத்தில் அப்பத்தைக் கேட்கிற தன் மகனுக்குக் கல்லைக் கொடுப்பானா?

மீனைக்கேட்டால் அவனுக்குப் பாம்பைக் கொடுப்பானா?

ஆகையால், பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?

ஆதலால், மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்; இதுவே நியாயப் பிரமாணமும் தீர்க்க தரிசனங்களுமாம்.

இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசியுங்கள்; கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது; அதன் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர்.

ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்.

கள்ளத் தீர்க்க தரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்டு உங்களிடத்தில் வருவார்கள்; உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள்.

அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்; முட்செடிகளில் திராட்சப்பழங்களையும், முட்பூண்டுகளில் அத்திப்பழங்களையும் பறிக்கிறார்களா?

அப்படியே நல்ல மரமெல்லாம் நல்ல கனிகளைக் கொடுக்கும்; கெட்ட மரமோ கெட்ட கனிகளைக் கொடுக்கும்.

நல்ல மரம் கெட்ட கனிகளைக் கொடுக்கமாட்டாது; கெட்ட மரம் நல்ல கனிகளைக் கொடுக்கமாட்டாது.

நல்ல கனிகளைக் கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு, அக்கினியிலே போடப்படும்.

ஆதலால், அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்.

பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானே யல்லாமல், என்னை நோக்கி கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை.

அந்நாளில் அநேகர் என்னை நோக்கி, கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள்.

அப்பொழுது, நான் ஒருகாலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னை விட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்.

ஆகையால், நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன்.

பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின்மேல் மோதியும், அது விழவில்லை; ஏனென்றால், அது கன்மலையின் மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது.

நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்யாதிருக்கிறவன் எவனோ, அவன் தன் வீட்டை மணலின் மேல் கட்டின புத்தியில்லாத மனுஷனுக்கு ஒப்பிடப்படுவான்.

* பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின்மேல் மோதின போது, அது விழுந்தது; விழுந்து முழுவதும் அழிந்தது என்றார்.

பிரிட்டிஷாரின் தாராளம்

நம்புவதில் பயனில்லை

ஸ்ரீமான் சீனிவாசசாஸ்திரியாரின் கூற்று

இந்தியா சட்ட சபையைத்திறந்து வைக்கையில் இராஜப்பிரதிநிதி நிகழ்த்திய சொற்பொழிவைப்பற்றி மகாகனம் ஸ்ரீமான் வி. எஸ். சீனிவாசசாஸ்திரியார் "சர்வண்ட் ஆப் இந்தியா" பத்திரிகையில் எழுதியுள்ள நீண்ட கட்டுரையின் ஒரு பகுதி பின் வருமாறு:—

பிரிட்டிஷ் காரனுயினும் இந்தியனுயினும் தன்னுடைய நற்குணத்தைப் பற்றித் தானே புகழ்ந்து கொள்ளுதல் அழகன்று. அதிலும் இல்லாத குணங்களை இருப்பதாகச் சொல்லித் தற்புகழ்ச்சி செய்வதாயின் அதை ஆட்சேபிக்கவே வேண்டும். பிரிட்டனுக்கும் இந்தியாவுக்கும் நீண்ட காலமாய் நிலைபெற்றுள்ள தொடர்பில் ஒளிவீசும் பாகங்களும் இருளடர்ந்தபாகங்களும் இருக்கவே செய்யும். மொத்தத்தில் இத் தொடர்பினால் நலமே விளைந்திருக்கிறதென்னும் எனது உறுதியான அபிப்பிராயத்தை இங்கு மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறேன். ஆயினும் சுயராஜ்யக்கட்சியார் சென்ற வருஷமே திடமான ஒத்துழைப்பாளராயிருந்தால், கன்சர்வேடிவ் மந்திரிசபையார் இந்தியாவுக்குச் சுயராஜ்ய திட்டமொன்றை அளித்திருப்பார்களென்று யாரேனும் சொன்னால், அறிவுடைய இந்திய அரசியல்வாதி கூட அதை நம்புவது கடினந்தான்.

ஏன்? சுதந்த நேர்மையான நம்பிக்கை கொள்வதற்கு ஆதாரங்கள் எத்தனையோ இருக்கின்றனவே! மகாயுத்தத்தின் போது இந்தியா செய்த உதவியையும், யுத்தம் முடியும் வரையில் நம்மீது சொரியப்பட்டு வந்த புகழுரைகளையும் நாம் மறந்து விடவில்லை. ஆனால் இந்தியா செய்த உதவிக்குப் பிரதி உதவி செய்யவேண்டுமென்று சொல்லப்பட்டபோது தான் பேச்சில் தாராளத்துக்கும், செயலில் தாராளத்துக்கும் அதிக வேற்றுமையுண்டென்று தெரிய வந்தது. நிஷ்காம கர்மத்தின் மேன்மையைப்பற்றி நமக்கு உபதேசம் செய்யவும் தலைப்பட்டார்கள்! தென்னாப்பிரிக்காவில் சாத்வீக மறுப்புப் போராட்டம் நடந்துகொண்டிருந்தபோது, நடுவில் தொழிலாளர் கலவரம் ஒன்று நேரிடவே, ஸ்ரீ காந்தி அரசாங்கத்துக்கு அச்சமயத்தில் தொந்திரவு கொடுக்கக்கூடாதென்று தமது இயக்கத்தை நிறுத்தி வைத்தார். பின்னர் நடந்த போயர் சண்டையில், தம்மைக் கொடுமைப்படுத்தின வெள்ளைக்காரர்களுக்கு வேண்டிய உதவிகள் செய்தார். இப்படிப்பட்டவரைப் பின்னல் எவ்வாறு நடத்தினார்கள்?

கெனியாவில் இந்தியர் வியாபாரம் செய்து கொண்டிருந்ததன் காரணமாகவே பிரிட்டிஷார் அங்குவந்தனர். இந்தியரின் உழைப்பினால் அங்குள்ள பெரிய ரயில் பாதை கட்டப்பட்டது. இந்தியர்களின் அறிவைக் கொண்டே பிரிட்டிஷ் நிர்வாகம் நடைபெற்றுவந்தது. பிரிட்டனுக்குக் கெனியாவைக் காப்பாற்றிக் கொடுத்ததோ இந்தியத்துருப்புகள். இருந்தும் என்னபயன்? 1923-ம் ஆண்டில் நிகழ்ந்த பெருந் துரோகம் நடைபெற்று நிற்கிறது? அடுத்தாற் போல் மெஸபடோமியாவை எடுத்துக் கொள்வோம். அங்கு பிரிட்டிஷார் தாங்க வேண்டிய சுமையை நாம் தாங்கினோம். நமது சைன்யங்கள் பிரிட்டிஷ் கொடியைத் தாழாது காப்பாற்றிவந்தன. நமது குமாஸ்தாக்கள் நிர்வாகத்தை நடத்தினர். ஆனால் சீக்கிரத்தில், அராபியர் பொறுமை படுகிறார்கள் என்னும் வியாஜத்தை வைத்துக் கொண்டு "இந்தியர் வேண்டியதில்லை" யென்று எங்கும் விளம்பரம் போட்டார்கள். பர்மாவில் சமீபத்தில் நிறைவேறி இராஜப் பிரதிநிதியின் அங்கீகாரம் பெற்ற இந்தியருக்கு விரோதமான சட்டங்கள் நமது நிலையை நன்கு புலப்படுத்தி யிருக்கின்றன.

உள்நாட்டு அரசியலைப் பற்றிய வரையில், ஒத்துழையாமை மேகம் வானத்தை இருளடையச் செய்திருந்த காலத்தில் பிரிட்டிஷார் இந்தியரிடம் எத்தகை இணையற்ற நட்பும், சகோதரபாவமும் காட்டினர்கள் என்பதை நினைவுகூரவேண்டும். வெள்ளைக்காரர் கறுப்புமனிதர் என்ற வேற்றுமைகள் ஒழிக்கப்பட்டன. அடக்குமுறைச் சட்டங்கள் ரத்து செய்யப்பட்டன. லாண்ட் ஹார்ஸ்டையும், ஆல்விச்சையும் விரைவில் இந்தியாவில் காண்போம் என்ற நம்பிக்கைக்கு இடமுண்டாயிற்று. ஐரோப்பியர்கள்—உத்தியோகஸ்தர்களும், உத்தியோகஸ்தரல்லாதார்களும் ஒருமுகமாய்— 1929ம் ஆண்டுக்கு முன்னதாகவே நமது அரசாங்க அமைப்பை மாற்றவேண்டுமென்று சிபார்சு செய்தார்கள். ஆ! நமது இலட்சியம் அப்போது எத்தனை அருகாமையில் வந்திருந்தது! ஆனால் அரசியல் வானம் இருள் நீங்கப் பெற்றதும், அதிக நம்பிக்கை படைத்த மிதவாதிகள் கைவிடப்பட்டார்கள். லாண்டு ஹார்ஸ்ட் (இராணுவக் கலாசாலை) முதலிய வாக்குறுதிகள் காற்றிலே பறக்கவிடப்பட்டன. அரசியல் அமைப்புத்திருத்தத்தைப்பற்றிய இந்தியா சட்ட சபையின் தீர்மானத்தைச் சபையின் முகத்திலேயே பீல் பிரபு திருப்பி எறிந்தார். ரௌலட்சட்டம் அதன் எல்லாக் கொடுமைகளுடனும் வங்காள அவசரச் சட்டமாகப் புத்துயிர் கொண்டு தளிர்த்தது.

இந்நிலையில், பிரிட்டிஷாரின் தாராள சிந்தையில் எளிதாக நம்பிக்கை வைக்கவேண்டாமென்று தேசத்தாருக்கு நான் எச்சரிக்கை செய்தல் தவறுதமா? இந்தியாவில் பிரிட்டிஷாரின் சரித்திரத்துக்கு ஒளியுள்ள ஒரே புறம் தான் உண்டு என்று "வங்காளி" பத்திரிகை நம்மை நம்பும்படி சொல்வது சரியா? நமது குறைகள் எல்லாவற்றிற்கும் சுயராஜ்யக்கட்சியார்மீது பழி சுமத்துவது எளிது. பாவம்! அவர்களுடைய முறை அறிவீனமானதென்பதும், முற்றிலும் பயனற்றதென்பதும் உண்மையே. ஆனால் இதுகாரணமாக நம்மை நாம் ஏமாற்றிக் கொள்ள வேண்டாம். தற்போதைக்கு கிரேட் பிரிட்டனில் பழைய ஏகாதிபத்தியக் கொள்கையே மேலோங்கி நிற்கிறதென்பதற்குப் போதிய சாட்சியம் இருக்கிறது. இந்திய ஜனங்கள் ஒற்றுமைப்பட்டு, சட்ட அமைக்குட்பட்ட வழியில் பிரிட்டிஷ் முறையைப் பலமாக எதிர்த்து நின்றாலன்றி, அவர்கள் மீண்டும் மீண்டும் பயன்படுத்திக் கொள்ளப்பட்டுப் பின்னர் கைவிடப்படுவார்கள் என்பது நிச்சயம்.

ஸ்ரீ வாணிவிலாச புஸ்தக சாலையில்
எழுத்து மாறிய வார்த்தையில்
பரிசுபெற்றவர்கள்
கப. சா. முருகப்பசெட்டியார், சொக்கலிங்கம் புதூர்.
K. V. கந்தசாமி உடையார், குணவாசல், காட்டுமன்னார்குடிபோஸ்டு, C. Tq.
M பழனியாண்டி முதலியார், ஜவுளி வியாபாரம், கோட்டார்.

ஹஸ்தலக்ஷண
சாஸ்திரம்
விளக்கமான அநேக படங்கள் அடங்கிய இச்செந்தமிழ் வசனநூலினால்,

ஞானதிருஷ்டி, விவாகலாபம், ஆயுள், குணம், அதிர்ஷ்டம், அறிவு, சந்தானம், வலி, அபாயம், தயை, வியாதி, கண்டம், வஞ்சகம், பக்தி, ஐசுவரியம், சக்தி, சிற்றின்பம், புத்தி, பேரின்பம், வியாச்சியம், காரியசித்தி, சௌக்கியம் முதலியன அறியலாம்.
விலை ரூபா 2—0—0
V. S. தமாரசுவாமி முதலியார் & ஸன்,
(3) வேலூர் (North Arcot).

இனம்! இனம்!
தங்கசாலைத் தெரு
தாசியின் ரகசியங்கள்
நஞ்சங்கோடு தாசில்தார்
ஆகிய இரண்டு நாவல்களும் திருவள்ளுவர் படமடங்கிய 1926-ம் வருஷ காலெண்டருடன் பெப்ரவரி மீ 15உக்குள் 3 அணா ஸ்டாம்பு அனுப்புகிறவர்களுக்கு இனமாக அனுப்பப்படும்.
'ஒற்றுமை' ஆபீஸ்,
சைதாப்பேட்டை, மதராஸ்.

சூரிய ஒளியைப் பயன் படுத்தும் முயற்சி

இதுகாலை, நீராவியும், நீரும் மின்சாரமும் மனிதனின் வேலையாளர்களாய் அமர்ந்து பற்பல பணிகள் புரிந்து வருவது போல் சூரியனும் மனிதனின் வேலைக்காரனாகித் தொண்டு செய்யுங்காலம் விரைவில் வரலாமென்று மேனாட்டு விஞ்ஞானப் புலவர்கள் கூறுகின்றனர். அக்காலத்தில் தொழிற்சாலைகளில் இயந்திரங்களின் சக்கரங்கள் சூரிய கிரணங்களினால் ஓட்டப் பெறும். நெருப்பின் உதவியின்றி வீடுகளும், காரியாலயங்களும் போதிய வெப்பம் பெறும். நீராவியின்றி ரயில் வண்டிகள் ஓடும். மற்றும் இச் சூரிய கிரணங்கள் புதிய பெருங்காடுகளை வளர்க்கும். மலைகளைப் போன்ற புதிய மரங்கள் பல வளர்ந்து செழிப் படையும். சூரிய கிரணங்களின் உதவியால் நாட்டில் தூய்மையும் அமைதியும் நிலவும். இவ்வாறு அவர்கள் சொல்கிறார்கள்.

பூமியின் மேற் பரப்பில் பெரும் பகுதி அப் போது வடிவத்தில் மாறுதல் பெறுமாம். புகைப் போக்கிகளும், விகாரமான கட்டிடங்களும் ஆகாயத்தின் அழகைக் குலைப்பது போல் அன்றி, அப்போது எங்குப் பார்த்தாலும் கண்ணாடி மயமாக இருக்குமாம். கண்ணாடி ஸ்தூபிகளும், கண்ணாடி மண்டபங்களும், கண்ணாடிக் குழாய்களும் எங்கெங்குங் காணப்படுமாம். வயல்களின் மீதும், தோட்டங்களின் மீதும் கண்ணாடிக் கூரைகள் ஆயிரக்கணக்கான ஏகராக்கள் விஸ்தாரத்துக்குப் பரந்து கிடக்குமாம். இக்கண்ணாடிக் குழாய், கூரை முதலியவைகள் சூரியனுடைய கிரணங்களைப் பிடித்துப் பயன்படுத்துவதற்கான இயந்திரங்களாகும். இதற்கான முறைகளைக் கண்டுபிடிக்க விஞ்ஞான சாஸ்திரிகள் சிலர் முயன்று வருகின்றனர்.

முதன் முதலாக இப்படிச் சொன்னவர் பொலோனு நகரத்தைச் சேர்ந்த புகழ்பெற்ற விஞ்ஞானப் புலவரான டாக்டர் கியாகோமோ கியாமிஷியன் என்பவர். சில வருஷங்களுக்கு முன் நடந்த சர்வதேச விஞ்ஞான காங்கிரஸில் அவர் செய்த உபந்நியாசத்தில் இப்படிக்கூறினர். அவர் வெறுங்கனவு காண்கிறார் என்று அப்போது எல்லாரும் கூறினர்கள். ஆனால் இதுபோழ்து ஸ்மித் ஸானியன் சங்கத்தாரால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் விஷயங்களிலிருந்து, டாக்டர் கியாமிஷியனின் கனவு இந்தத் தலை முறையிலேயே ஓரளவு பலிக்கலாம் என்று நம்பிக்கையுண்டாயிருக்கிறது.

மேற்படிசங்கத்தைச் சேர்ந்த சில நிபுணர்கள், சூரியனுடைய கிரணங்களைப் பிடித்துப் பயன்படுத்தி அவற்றினின்றும் மின்சார சக்தியை உண்டாக்கும் முயற்சியில் அநேகமாக வெற்றியடைந்துவிட்டனர் என்று சொல்லப்படுகிறது. மற்றும் நியூயார்க் நகரின் விவசாயச் சோதனைச் சங்கத்தைச்சேர்ந்த டாக்டர் தாச்சர் என்பவர், செடிகள் சூரியனுடைய கிரணங்களை உட்கொள்ளும் முறைகளில் சிலவற்றைத் தாமும், தமது சகாக்களும் கண்டு பிடித்து விட்டதாகவும், அம்முறைகளைப் பயன்படுத்திச் செடிகளின் வளர்ச்சியை அதிகப்படுத்தக்கூடும் என்றும் சொல்கிறார்.

இதுவரை, சூரிய கிரணங்களின் சக்தி மனிதனுக்கு நேர் முகமாகப்பயன் பட்டதில்லை. நிலக்கரி, காய்ந்த சருகு, கட்டை முதலியவைகள் மூலம் மறைமுகமாகச் சூரியனுடைய சக்தி நமக்குப் பயன் பட்டுவந்திருக்கின்றன. ஆனால் நேர் முகமாகச் சூரிய கிரணங்கள் உபயோகிக்கச் செய்யப்பட்ட முயற்சி எதுவும் இதுகாறும் பலிக்கவில்லை. வெயிலில் நாம் குளிர் காயலாம். நாம் உணவாகக்கொள்ளும் பழங்கள், கறிகாய்கள் முதலியன வெல்லாம் சூரிய ஒளி உண்டு வளர்ந்தவையே. ஆனால் இவை இயற்கை நெறியின் பாற்பட்டன. மனிதனால் அவற்றைத் தடுக்கவோ, மிகுதியாக்கவோ இதுவரை முடியவில்லை.

உலகின் சில பாகங்களில் வெயிலில் தண்ணீரை வைத்து வெப்பமாக்குகிறார்கள். சில இடங்களில் முட்டைகளை வெயிலில் வைத்துப்பொரிப்பதாகக் கேள்விப்பட்டிருக்கிறோம். அவ்வளவுதான். சூரிய வெப்பத்தை வேறு வழியில் பயன் படுத்திக் கொள்ள முடியவில்லை. சூரிய வெப்பத்தினால் நீராவி உண்டாக்க எவ்வளவோ முயன்றும் பயன் படவில்லை.

ஒன்பது கோடி முப்பது லட்சம்மைல்களுக்கப்பால் அப்பெரிய தீப்பந்து சுவாலை வீசிச் சுழன்று கொண்டே யிருக்கிறது. சில சமயங்களில் அது வெப்பந்தருகிறது; சில சமயங்களில்தருவதில்லை. அதன் கிரணங்களைக் கட்டுப் படுத்தி வேலைவாங்க வழியுண்டா? இக்கேள்விக்கு விடையிறுக்க விஞ்ஞான சாஸ்திரம் முயன்று வருகிறது.

* மேலே குறிப் பிட்ட ஸ்மித்ஸானியன் சங்கத்தில் ஒரு சாரார் செடிகள் சூரிய சக்தியை எவ்வாறு பயன் படுத்திக் கொள்கின்றன என்பதைக் கண்டு பிடிப்பதில் கவனஞ் செலுத்தி வருகிறார்கள். மற்றொரு சாரார் இச்சக்தியிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்ய முயன்று வருகிறார்கள். புகைப் படம் எடுக்கும் கருவியில் உள்ள ப்ளேட் பிலிம் முதலியவற்றில் சூரிய வெளிச்சம் பட்டால் உண்டாகும் மாறுதலை யாதாரமாகக் கொண்டு ஆராய்ச்சி செய்ததில், சூரிய ஒளிக்கிரணங்களைப் பிடித்துப் பயன்படுத்தி ஏராளமான மின்சார சக்தியை உண்டாக்கலாமென்று தெரியவருகிறதாம்.

இது குறித்து டாக்டர் சார்லஸ் ஸ்டீன் மெட்ஸ் என்பவர் கூறுவதாவது:—"வருங்காலத்தில் உலகில் நிலக்கரியேயில்லாமற் போகும் தினம் ஒன்று வருமென்பது நிச்சயம். நீர்வீழ்ச்சிகளால் உண்டாகும் மின்சார சக்தி உலகம் முழுதிலும் உள்ள இயந்திரங்களை ஓட்டப் போதாது. இவையிரண்டையுமன்றி, ஏராளமான சக்திக்கு ஆதாரமாயுள்ளது சூரிய வெளிச்சம் ஒன்றே. இதன் சக்தி எக்காலத்திலும் வற்றாதது"

விஞ்ஞான ஆராய்ச்சி

செயற்கருந்திறங்கள் செய்த ஒரு வைத்தியர்

வைத்திய அபிவிருத்திக்காக அரிய தியாகங்கள் செய்தவர் அநேகர் உண்டு. சமீபத்தில் ஆங்கில டாக்டர் அறவர் பிளவைநோய்ச் சிகிச்சை சம்பந்தமாக ஓர் உண்மையைக் கண்டுபிடிக்கும்பொருட்டு தங்கள் உடல்களில் அந்நோய்ப்புழுக்களைவிட்டுக்கொண்டார்களாம். ஆனால் இதுபோழ்து கிடைத்திருக்கும் அமெரிக்கப் பாதிரி டாக்டர் ஒருவரின் அருஞ்செயலைப்பற்றிய விவரம் எல்லாவற்றினும் அற்புதமாயிருக்கிறது. டாக்டர் சி.எச்.பார்லோ என்னும் கிறிஸ்தவப் பாதிரியார் சீனதேசத்தில் மதப் பிரசாரம் செய்து கொண்டிருக்கும் போது ஒரு க்ஷயரோகத்தினால் பீடிக்கப்பட்ட சீனன் ஒருவனைக் காப்பாற்றும் முயற்சியில் தலைப்பட அவருக்கும் அந்நோய் தொத்திக்கொண்டது. பின்னர் அவர் அமெரிக்காவுக்குச் சென்று நியூயார்க்கில் சுகவாசஸ்தலம் ஒன்றில் சில காலம் வசித்து உடம்பைக் குணப்படுத்திக் கொண்டார். உடம்பு குணமானதும் ஒரு கணமும் தாமதியாது மீண்டும் சீனத்துக்குப்போனார். சீனர்களிடையே பரவியுள்ள ஒருவகைக் குடல்நோய் விஷயத்தில் இவர் இதுபோழ்து கவனம் செலுத்தினர். இந்நோய் குடல்களில் உற்பத்தியாகும் ஒருவகைப்புழுக்களால் உண்டாவது. ஆண்டு தோறும் இந்நோயினால் ஆயிரக்கணக்கானவர் சீனதேசத்தில்மாண்டு வந்தனர். இப்புழுக்களைப்பற்றிச் சோதனை நடத்துவதற்கு நல்ல சோதனைச்சாலை ஒன்றும் சீனத்தில் இல்லை. அப்புழுக்களை அமெரிக்காவுக்குக் கொண்டு போவதெப்படியென்று டாக்டர் பார்லோ யோசித்தார். அந்நோயினால் பீடிக்கப்பட்ட சீனத்தான் ஒருவனைக் கொண்டு போகலாமென்றால் அமெரிக்காவின் குடியிறக்கச்சட்டம் இடங் கொடுக்கவில்லை. இறுதியில் அவர் ஒரு முடிவுக்கு வந்தார்.

ஒரு ஞாயிற்றுக்கிழமை காலை அவருடைய சகாக்கள் எல்லாரும் கோவிலுக்குச் சென்றிருந்தபோது, அவர் ஒருநோயாளியிடம்சென்று அவனுடைய உடலிலிருந்து 32 நோய்ப் புழுக்களை எடுத்து ஒரு குவளை நீரில்போட்டு தனி அறை ஒன்றில் சென்று அப்படியே குடித்து விட்டார். தமது மனைவியிடமாவது, மற்றவர் களிடமாவது இதைப்பற்றி ஒரு வார்த்தையும் சொல்லவில்லை. பின்னர் உடனே கப்பலேறி அமெரிக்காவுக்குப் புறப்பட்டார். கொஞ்சகாலம் அப்புழுக்களை உடலில் வளரும்படி விட்டிருந்து, பின்னர் ஜான்ஸ் ஹாப்கின்ஸ் பல்கலைக் கழகத்தின் சோதனைச் சாலைக்குச் சென்றார். அங்குள்ள நிபுணர்கள் இவருடைய செயலைப்பற்றிக் கேள்விப்பட்டு அதிசய மடைந்தவர்களாய் அவருடைய உடலிலிருந்து புழுக்களை வெளிப்படுத்திச் சோதனை செய்தார்கள். வெளிப்பட்டவைகளில் ஒன்றே ஒன்றுதான் உயிருடன் மிஞ்சிற்று. டாக்டர் பார்லோ அதற்கும் ஏதேனும் ஆபத்துவரப் போகிறதே என்ற கவலையினால் சோதனைச் சாலையிலேயே தூங்கலாகஇருந்து அதைப் பாதுகாத்தார். பலவகை உணவுப்பொருள்களிலும் அப்புழுவை விட்டுச் சோதனை செய்துபார்த்தார். கடைசியாக, சீனர்கள் ஏராளமாகத் தின்றுவரும் ஒருவகை நத்தையினால் இது பெருகுவதாகத் தெரியவந்தது. ஆதலால் இந்த நத்தையிலேயே இருவகைகள் இருந்தபடியால் இந்நோய்க்குக் காரணம் எது வென்று திட்டமாகத் தெரியவில்லை. எனவே அவர் இவ்விரண்டில்ஒன்றை நோய்ப்புழுவுடன் விழுங்கி விட்டார். இச்சமயத்தில் டாக்டர் பிராங்ளின் என்பவர் இவரைக் கண்டு பேசிய போது, அவருடைய செயல் மிக அபாயகரமானதாயிற்றே என்று கேட்டாராம். "ஆம். விளையக்கூடிய நலத்தை நோக்கியே நான் இவ் வபாயத்துக்குத் துணிந்தேன்" என்று அவர் பதிலிறுத்தாராம். முடிவில் இந்த தீர வைத்தியர் அந்நோயின் மூலத்தைக் கண்டுபிடித்து, குறிப்பிட்ட வகை நத்தைகளை உண்ணாதிருக்கும்படி சீனர்களுக்குத் தெரிவித்திருக்கிறாராம். இத்தகைய தியாக மூர்த்திகளைப் புகழ்வதற்கு மொழிகள் கிடையாவென அஞ்சுகிறோம்.

நெற்றிக்கண் படைத்த மங்கையர்

ஜீன் லாபாடி என்பவர் பெயர் பெற்ற பிரஞ்சு விஞ்ஞானப்புலவர். கண் கட்டப்பட்டிருக்கும்போது பார்க்கும் சக்தி உண்டென்று வந்த பல மோசக்காரர்களை அவர் பார்த்திருக்கிறார். எனவே, பாரிஸிலுள்ள ஓர் இள மங்கை கண் கட்டப்பட்டிருக்கும் போதே பார்ப்பதாகச்செய்தி கிடைத்தபோது அவர் முதலில் நம்பவில்லை. ஆயினும் பாரிஸ் நகரத்துப் பெயர் பெற்ற வைத்தியர்கள் சிலர் இதற்கு அத்தாட்சி கூறினமையால் தாமே நேரில் சோதித்தறிய விரும்பி அநுமதியும் பெற்றார்.

மிகவும் எச்சரிக்கையுடன் அப்பெண்ணின் கண்களை அவரே மூடி இறுக்கிக்கட்டினர். பின்னர் அவர் தினம் ஒரு தாள் கிழிக்கும் காலண்டர் ஒன்றை எடுத்துக்கொண்டு இருட்டறை ஒன்றுக்குச் சென்று நடுவில் ஒருதாளைப் பிடித்துக் கிழித்தார். அதில் குறிப்பிட்ட தேதியை அவர் தாமும் பார்க்கவில்லை. ஏனெனில் அப்பெண்ணுக்கு "டெலிபதி" என்னும் மனதக் கதிர் சக்தி இருக்கக்கூடுமென அவர் எண்ணினர். தமது மனதுக்குத் தெரிந்திருந்தால் அச்சக்தியின் மூலம் அப்பெண் அறிந்து கொள்வாள். எனவே, தாமும் பாராமல் அவர் அத்தாளை அப்பெண்ணுக்கு எதிரில்காட்டி "இஃது என்ன?" என்று கேட்டார். "அஃது ஒரு காலண்டர் தாள். அதில் ஜூலை மீ 29உ குறிக்கப்பட்டிருக்கிறது" என்று அவள் உடனே மொழிந்தாள். தாளைத் திருப்பிப்பார்த்த போது அவள் கூறியது சரியாயிருந்தது கண்டு லாபாடே மிகவும்வியப்புற்றார். இவ்வாறே இன்னும் சில சோதனைகளும் செய்துபார்த்தார். எல்லாவற்றிலும் அவள் சரியாகச் சொன்னாள். நெற்றியிலுள்ள தோல் வழியாக அவள் பார்க்கிறாள் என்பதைத் தவிர வேறு காரணம் எதுவும் சொல்வதற்கில்லை.

இதனால் வியப்படைந்த அவ்விஞ்ஞானப் புலவர், தெற்கு பிரான்ஸில் கே என்னும் நகரத்தில் வசித்த மூன்று சிறுபெண்களுக்கு இத்தகைய சக்தி இருப்பதாகக் கேள்வியுற்று அவர்களையும் சோதனை செய்தார். இவர்கள் முறையே 11, 13, 14 வயதானவர்கள். கண் கட்டப்பட்டிருக்கையில் இவர்கள் புஸ்தகங்களைப் பார்த்துப் பக்கம்பக்கமாய்ப் படித்தார்கள். ஊசிகளில் நூல் கோத்தார்கள். துணிகளின் நிறங்களை அறிந்து சொன்னார்கள். ஆனால் இவ்வாறு செய்யும்போதெல்லாம் அவர்களுடைய மனம் பெரிதும் களைப்புற்றதாகத் தெரியவந்தது.

"நமது உடலில் கண்களுக்கடுத்தாற் போல் நுண்ணிய உணர்வு படைத்த தோல் நெற்றியில் இருக்கிறது. இப்பெண்களுக்கு இவ்வுணர்வு மிக நுட்பமாய் ஏற்பட்டிருக்க வேண்டும். எனவே அங்குள்ள நரம்புகள் ஒளியை ஏற்ற வடிவங்களாக மூளையில் கொண்டு போய்ச் சேர்க்கின்றன என்று பொதுவாகக் கூறலாம்" என்று லாபாடி கூறுகிறார். ஆனால் இவ்விநோத சக்தியின் உண்மை இதுதான் என்று தாம் திட்டமாய்க் கண்டுபிடித்து விட்டதாக அவர் கூறவில்லை. இதைப்பற்றி அவர் இன்னும் ஆராய்ச்சி செய்து வருகிறார்.

அதிசய நுண்ணுணர்வு

அமெரிக்காவின் தலைநகராகிய வாஷிங்டனில் நிறைக் கல்களையும், அளவு கோல்களையும் பரிசோதிக்கும் அரசாங்கக் காரியாலயம் ஒன்றிருக்கிறது. இக்காரியாலயத்தில் வேலை பார்க்கும் மிஸ்டர் ஜான் கிளாசி என்னும் நிபுணர் அதிசயமான நுண்ணுணர்வு படைத்தவராம். இவருக்குவயது 70 ஆகிறது. ஆயினும் தூரதரிசினி முதலிய கண்ணாடிக் கருவிகள் செய்வதில் ஓர் அங்குலத்தில் பத்து லட்சத்தில் ஒரு மடங்கு வேற்றுமை இருந்தாலும் கையாலுணர்ந்து கண்டுபிடித்துச் சொல்லிவிடுவாராம். இவர் வாலிப பருவத்தினராயிருந்தபோது தூரதரிசினி ஒன்று வாங்க ஆவல் கொண்டிருந்தார். ஆனால் போதிய பணம் கிடைக்கவில்லை. எனவே, தாமே கண்ணாடி தேய்த்துத் தூரதரிசினி செய்யக்கற்றுக்கொண்டார். இதிலிருந்து இவருக்கு இவ்வதிசய நுண்ணுணர்வு வளர்ந்துவந்தது. இப்போது உலகில் மிகவும் விலையுயர்ந்த அணுதரிசினிக் கண்ணாடிகளால் கண்டுபிடிக்கமுடியாத அளவு வேற்றுமைகளை இவர் கையால் உணர்ந்து கண்டுபிடித்துவிடுகிறாராம்.

ரேடியோவினால் நஷ்டமுறுவோர்

ரேடியோ மூலம் ஒலிபரப்புவதைப்பற்றி "நவசக்தி"யில் சில கட்டுரைகள் வெளிவந்திருக்கின்றன. இக்கருவியினால் பொதுஜனங்கள் பெறும் நன்மைகளைப் பற்றி அவைகள் கூறுகின்றன. ஆனால் "பிராட் காஸ்டிங்"கினால் நஷ்டமடைவோரும் இல்லாமற் போகவில்லை. உலகம் முழுவதும் ரேடியோ பரவி விட்டால் ரயில்களுக்கு ஓரளவு வருமானம் குறையும். பாட்டுக் கச்சேரி, உபந்நியாசம், தேர்தல் பிரசாரம் முதலியவைகளுக்காக ஓரிடத்திலிருந்து ஓரிடத்துக்குப் பிரயாணம் செய்தல்குறைந்துவிடும். எல்லாருக்கும் முதல் தரமான பாடகர்களின் பாட்டும், பிரசங்கிகளின் பிரசங்கங்களும் இருந்த விடத்திலேயே கிடைக்கு மாதலால், நடுத்தரமானவர்களுக்கும் கீழ்த்தரமானவர்களுக்கும் பிழைப்பின்றிப்போகும். எல்லாவற்றையும்விட பத்திரிகைகளின்பாடுதான் பெருந்திண்டாட்டமாகும். நிகழ்ச்சிகள் நடக்கும்போதே அவ்வப்போது செய்திகளைக் கேட்டறிவோர் பத்திரிகைகளை அதிகமாக நாட மாட்டார்கள். இந்தப் போட்டியை விலக்க இங்கிலாந்தில் யோசனை செய்துவருகிறார்களாம். தற்போது கல்விக்குப் புத்தகப்படிப்பு சாதனமாயிருப்பது மாறி வருங்காலத்தில் கேள்வியே கல்விக்குச்சிறந்த சாதனமாகி விடலாம். கற்றலிற் கேட்டலே நன்று அன்றோ? எனவே புத்தகம் அச்சடிக்கும் தொழிலுக்கும் அபாயந்தான்!

"பிராட்காஸ்டிங்"கில் புதிய யுக்தி

ரேடியோ மூலம் ஒலிபரப்புவதில் இப்போது ஓர் இடையூறு இருந்து வருகிறது. உதாரணமாக, இரண்டு இடங்களில்ஒரேகாலத்தில் முக்கியமான உபந்நியாசங்களோ, சங்கீதக் கச்சேரிகளோநடந்தால் ஒருவர் இரண்டிலொன்றைத்தான் கேட்கமுடியும். அவ்வாறின்றி அவ்வப்போது நடைபெறும் பிரசங்கங்களையும் கச்சேரிகளையும் ரேடியோமூலம் பிடித்துவைத்திருந்து வேண்டும்போது கேட்கக்கூடியவண்ணம் பர்லினில் ஒருசாதனம்கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இச்சாதனம்இன்னும் முழுதும் முற்றுப் பெறவில்லை. இது முற்றுப்பெற்றால் ரேடியோவின் உபயோகம் இன்னும் அதிகமாகுமென்று சொல்லவேண்டாம். உதாரணமாக வாஷிங்டனில் அமெரிக்க ஜனாதிபதியின்உபந்நியாசமும் பர்லினில் புகழ்பெற்ற சங்கீத வித்வானின் பாட்டும் ஒரே சமயத்தில் நிகழ்ந்தால் ரேடியோ கருவியுள்ளவன் ஒருவன் தன் விருப்பம்போல் ஒன்றின் பின் ஒன்றாய் முறையே இரண்டையுங்கேட்டு இன்புறலாம்.

ஓநாய் மனிதன்

சீன தேசத்தின் தெற்குப்பாகத்தில் சில விநோதமான பிராணிகள் இருப்பதாகத் தெரியவந்திருக்கின்றன. இது வரை இப்பிரதேசத்திற்குள் நாகரிக மனிதர்கள் அதிகமாகப் பிரவேசிக்கவில்லை. பறக்கும் பாம்புகளும் மற்றும் பல பயங்கரப் பிராணிகளும் இங்கு இருப்பதாக சீனர் நம்புகின்றனராம். டாக்டர் காலட்வெல் என்பார் இப்போது இப்பிரதேசத்துக்குள் நுழைந்து கண்டு பிடித்திருப்பதாகக்கூறும் விவரங்கள் சீனர்களின் நம்பிக்கை முற்றும் ஆதாரமற்றதன்று எனக் காட்டுகின்றன. நீலநிறமான புலிவர்க்கம் ஒன்று இங்கிருப்பதாக அவர் சொல்கிறார். வெள்ளாட்டுக்கும் கலைமானுக்கும் இடையில்வரும் ஒருவகைப் பிராணியும் இருக்கிறதாம். ஆனால் இவைகள் எல்லாவற்றையும்விட அதிசயமான பிராணி நாய் முகம்படைத்த மனிதன். இம்மனிதர்களின் உடல்முழுதும் நீண்டஉரோமத்தால் மூடப்பட்டிருக்கிறதாம். இவர்கள் மரங்களில் வசிக்கிறார்களென்றும், சிறிதும் நாகரிகம் எய்தாத காட்டு மிராண்டிகளென்றும் தெரியவருகின்றன.

மரத் தந்தம்

இயற்கையின் அற்புதப் பொருள்களில் மரத்தந்தமும் ஒன்று. மத்திய அமெரிக்காவிலும் தென் அமெரிக்காவிலும் வளரும் ஒருவகை மரத்தின் விதைகளிலிருந்து இது உண்டாகிறது. இம்மரம் தென்னை வர்க்கத்தைச் சேர்ந்தது. இதில் மனிதனுடைய தலையளவுள்ள பெரிய காய்கள் உண்டாகின்றன. ஒரு காய் முப்பது ராத்தல் வரை எடையுள்ளதாயிருக்கும். ஒவ்வொரு காயிலும் சுமார் 50 கொட்டைகள் இருக்கின்றன. இவை கெட்டியாயும், நல்ல வெண்ணிறமாயும் இருக்கின்றன. இக்கொட்டைகளிலிருந்து தயாரிக்கப்படும் தந்தத்துக்கு மெருகு கொடுத்துவிட்டால் யானைத் தந்தத்தை முற்றிலும் ஒத்ததாயிருக்குமாம். தற்போது இது பெரும்பாலும் பொத்தான்கள் செய்வதற்கு உபயோகிக்கப்படுகிறது.

எதிரொலி

ஜனத்திரள்களிடை வேற்றுமையில்லை

சமீபத்தில் கல்கத்தாவில் நடந்த ஒரு பொதுக் கூட்டத்தில் நகரசபையின் டிபுடி மேயரான ஜனப் ஷுஹ்ராவர்த்தி, ஹிந்து முஸ்லிம் வேற்றுமைகளெல்லாம் உத்தியோக வேட்டையாடும் உபத்தரவாதப் பிரிவினரிடையே காணப்படுகிறதேயன்றி ஜனத்திரள்களிடையே சிறிதும் இல்லை யென்று கூறினார். பாமரஜனங்கள் ஹிந்துக்களாயினும் முஸ்லிம்களாயினும் தினந்தினம் ஒருபடியாக வாழ்ந்து, துன்ப மனுபவித்து உயிர் விடுகிறார்கள். ஹிந்துவுக்கு நன்மை பயப்பது முஸ்லிமுக்கும் நன்மைபயக்கிறது. தீமையும் அவ்வாறே. ஏழை எளியவர்களான சகோதரர்களுக்காக உழைக்கும்படி அவர் இரு சமூகங்களையும் சேர்ந்த வாலிபர்களைக் கேட்டுக் கொண்டார். உண்மையான இருசமய ஒற்றுமைக்கு இத்தகைய சமூகத் தொண்டே சிறந்த அஸ்திவாரமாகு மென்று அவர் சொன்னார். ஜனப் ஷுஹ்ராவர்த்தி கூறியதில் நிரம்ப உண்மையிருக்கிறது. இத்தகைய அபிப்பிராயங்களை நாமும் அடிக்கடி வலியுறுத்தி வந்திருக்கிறோம். சமீபத்தில் கல்கத்தாபோந்த மௌலானா ஷௌகத் அலியும் இதே கருத்தைத் தெரிவித்துள்ளார்.

"அமிருத பஜார் பத்ரிகை"

ஹார்னிமானின் அரசியல்கொள்கை

பம்பாயில் பாந்திரா என்னுமிடத்தில் சமீபத்தில் ஸ்ரீமான் ஹார்னிமானுக்கு உபசாரணை நடந்தபோது, அவர் பரஸ்பர ஒத்துழைப்பு முறையைப் பலமாகக் கண்டித்ததுடன், கலப்பற்ற சுத்த ஒத்துழையாமையில் தான் தமக்கு நம்பிக்கை யுண்டென்றும் ஆயினும், தாம் காங்கிரஸ் மகாசபையின் அங்கத்தினராதலால் அதன் தீர்மானங்களுக்கு எப்போதும் கட்டுப்பட்டு நடப்பதாயும் கூறினார். அவர் பேச்சின் ஒரு பகுதி வருமாறு:—நாட்டிலே மாறுதல் வேண்டாதார் என்றழைக்கப்படும் ஒரு வலுவான கட்சியார் இன்னும் இருக்கின்றனர். நானும் இக்கட்சியைச்சேர்ந்தவனே. மகாத்மா காந்தி எக்கணத்தில் கட்டளையிடுகிறாரோ, அக்கணத்திலேயே அம்முறைக்குத் திரும்பிச் செல்வேன். ஆனால் மகாத்மா காங்கிரஸ் மகாசபைக்கு உண்மையாக நடக்கிறார். ஒவ்வொரு இந்தியனும் அவ்வாறே நடக்க வேண்டும். காங்கிரஸின் திட்டத்தை நிறைவேற்றி வைத்தல் தேசிய வாதி ஒவ்வொருவருடைய கடமையுமாகும். பரஸ்பர ஒத்துழைப்பு என்னும் புதிய 'குளறல்' திட்டத்துக்கு இங்குஆதரவு கிடைக்காதெனப் பூரணமாய் நம்புகிறேன்.

"பம்பாய் க்ரானிகல்"

சரித்திரபோதனையும் சர்வதேச சங்கமும்

சர்வதேச சங்கத்தில் இடம்பெற்றிருக்கும் ஐம்பத்தைந்து தேசங்களுக்குள்மிகச் சிறியது. மத்திய அமெரிக்காவிலுள்ள ஸால்வடார் என்னும் இராஜ்யம். இதற்கடுத்தாற் போல் மேலே வருவது மேற்கிந்தியத் தீவுகளில் ஒன்றான ஹைதிதீவு ஆகும். இத்தீவில் நீக்ரோக்களின் குடியரசு நிலைபெற்றிருக்கிறது. சர்வதேசச் சங்கத்தில் பெரிய தேசங்களுக்குள்ளது போல் இதற்கும் ஒருவோட்டு உண்டு. ஹைதிவிஸ்தீர்ணத்தில் பெல்ஜியத்தைவிடச்சிறியது. அதன் ஜனத்தொகை சிகாகோ நகரத்தினுடையதை விடக்கொஞ்சம் இச்சிறிய இராஜ்யத்தின் தூதர் ஜினிவா சர்வ தேச சங்கக் கூட்டத்தில் பேச எழுந்தபோது இவர் என்ன சொல்லப்போகிறார் என்று எல்லாரும் அதிசயப்பட்டார்கள். எனினும்மிஸ்டர் பிரடரிக் டாரட் அதுவரையாரும்சொல்லப்படாத ஒன்றைச்சொன்னார். சரித்திர புத்தகங்களையெல்லாம் வேறுமுறையில் திருத்தி எழுத வேண்டுமென்று அவர் கூறினர். அவர் பார்வையிட்ட சில அமெரிக்கச் சரித்திர பாட புத்தகங்களில், 100க்கு 70 பக்கங்களுக்கு மேல் யுத்தங்களைப் பற்றியும், அவற்றின் காரணங்களைப்பற்றியுமே கூறப்பட்டிருந்தன என்று அவரெடுத்துக் காட்டினர். சைன்யங்களைக் குறைப்பதைப் பற்றி அரசாங்கங்கள் உடன் படிக்கை செய்து கொள்வது போதா தென்றும், ஜனங்கள் தங்கள் அயல் தேசத்தினரை நண்பர்களாகக் கருதிப்பழக வேண்டுமென்றும், இதற்குத்தழந்தைப் பருவத்திலிருந்தே விதைவிதைக்கப்பட வேண்டு மென்றும் அவர் கூறி, எல்லாத் தேசங்களும் தங்கள் பள்ளிக் கூடங்களில் உபயோகிக்கப்படும் சரித்திரபாட புத்தகங்களில் யுத்தங்களைப் பற்றிய விவரங்களைக் குறைக்க முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று ஒரு தீர்மானங் கொண்டு வந்தார். இத்தீர்மானத்தைச் சங்கத்தார் அநுதாபத்துடன் ஏற்றுக் கொண்டு நிரந்தரக் கமிட்டி ஒன்றின் ஆலோசனைக்கு விடுத்திருக்கின்றனர்.

"ஸில்டர்ன்ஸ் நியூஸ் பேபர்"

வகுப்பு இயக்கங்கள்

பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வாதிகள் மிகவும் சமர்த்தர்களாகையால், அவர்களுடைய சூழ்ச்சியின் வன்மையால், சென்ற சிலவாண்டுகளாக தேசிய ஒற்றுமை சிதைந்து வருகிறது. வகுப்புவாரிப்பிரதிநிதித்துவம்வேண்டுமென்ற கூச்சல் அதிகமாயிருக்கிறது. என்றைக்காவது ஒரு நாளைக்கு இந்நாடு ராஜீய விடுதலை பெற வேண்டுமானால், வகுப்புவாரிப்பிரதிநிதித்துவம் அதற்கு முட்டுக்கட்டையாக நிற்குமென்பதே நமது அபிப்பிராயம். எல்லா வகுப்புகளினும் தேசபக்தர்களா யிருப்பவர்களும் கூட வகுப்புவாரிப்பிரதிநிதித்துவம் கேட்க ஆரம்பித்துவிட்டார்கள். ஜாதிப் போராட்டம் பெரிதாகி விட்டது. பிராமணியத்தை நாம் கண்டிப்பதின் கருத்து சகல மானிடர்களும் சமத்துவத்துடன் சுதந்தர வாழ்க்கை வாழவேண்டு மென்பதே. எச்சாதியின் உயர்வு தாழ்வையும் நாம் ஒப்புக்கொள்வதில்லை. தற்சமயம் நாட்டில் தோன்றியுள்ள வகுப்புக் கிளர்ச்சிகள், தங்கள் தங்கள் வகுப்பு பெரியது ; தீயிலும், பசுவிலும், ஜலத்திலும், சூரியனிலும், சந்திரனிலும் இருந்து உற்பத்தியானது என்று கூறிக் கொண்டு போட்டி போட ஆரம்பித்திருப்பதால் இந்திய தேசிய தர்மத்திற்கு சத்துரு இயக்கமாகும். ஆந்தரம், தமிழகம், கேரளம், வங்கம், மராட்டம் என்ற பூமிப் பாகுபாடு கட்சிகளும் கிளம்பி விட்டன. ஜாதிப் பள்ளிக்கூடங்கள் முஸ்லிம் பாடசாலை, ஹிந்து பாடசாலை, கிறிஸ்தவ பாடசாலை, நாயுடு, செட்டியார் போன்ற வகுப்புப்பாடசாலைகளும் ஏற்பட்டு வருகின்றன. பாஷாவாரியாக சர்வகலாசாலைகளையும் ஏற்படுத்த முயற்சிகள் நடக்கின்றன. உத்தியோகங்களிலும். ஜாதிவாரிப் பாகுபாடு வேண்டுமென்ற கூச்சலும் எழுகின்றது. மேலே, நாம் எடுத்துக் காட்டியவைபோன்ற பற்பல இயக்கங்கள், இந்தியாவின் விடுதலைக்கும் தேசிய உணர்ச்சியின் வளர்ச்சிக்கும் மிகவும் ஆபத்தானவைகளாகும். தேசிய இயக்கத்திற்கு விரோதமான சில்லரை இயக்கங்கள் வலிமை பெறுமானால், இங்கிலீஷ் ஆட்சியிலிருந்து இந்நாடு ஒருபோதும் மீட்சி பெறாது. ஒரு வேளை அப்படிப் பெற்றாலும், வேறெதோ ஒரு அன்னிய ஆளுகைக்கு உட்பட்டுவிடு மென்பதில் சந்தேகமில்லை. தேசபக்தர்கள் சாந்தமாக இவைகளைச் சிந்தித்துப் பார்க்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

"தமிழ் நாடு"

போலிக்கதர்

வெளிப்படையான விரோதம் நம்மைக் கெடுத்து விடாது. ஆனால் நமது நேசனைப் பலபேர் முன்னிலையில் நடத்தி இரகசியமாக நமது வீழ்ச்சிக்குப் பாடுபட்டு, உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுபவர் பகை பொல்லாதது. நமது கதர் இயக்கத்திற்குப் போலிக் கதரைப்போன்ற பகை வேறில்லை. அன்னிய ஆடை வியாபாரஞ் செய்பவர் நமது எதிரிகளின் காலாட்படை யென்றால் இப்போலிக் கதர் வியாபாரிகள் நமது எதிரிகளின் ஒற்றர்களாவர். இப்போலி வியாபாரத்தை நசுக்குவது தேசபக்தர்களின் முதற் கடமை......நூல் இயந்திரசாலைகளில் மெல்லிய நூல் நூற்கும்போது உதிரும் கழிவுப் பஞ்சைத் திரட்டி மறுபடியும் இயந்திரத்தில் நூற்றால் மொத்தமாகவும், வலுவில்லாததாகவுமுள்ள நூல் கிடைக்கும். இந்நூல் சாதாரண பஞ்சைக் காட்டினும் விலை மலிவுள்ளது. இந்நூலைச் சுலபமாக நெய்ய முடியுமாகையால் கதர் நெசவில் பாதிக்கூலி கொடுத்தால் போதும். ஆகவே இப்போலிக் கதரானது தூய கதரில் பாதிவிலைக்குக் குறைந்ததென்றே சொல்லலாம். இப்போலி சாதாரணமில் துணிகளையும்விட மிகமட்டம். பாவிலும் ஊடையிலும் இழை குறைவாயிருப்பதால் பார்ப்பதற்குக்கூடவிகாரமாயிருக்கும். ஆயினும் பாமர ஜனங்கள் இவ்வுண்மைகளை யறியார். பொதுஜனங்களை ஏமாற்றிப் பிழைப்பதே போலிக் கதர் வியாபாரிகளுக்குத் தொழிலாய்ப் போய்விட்டது....இவர்களில் சிலர் தங்கள் கடைகளில் போலி, சுத்தம் இரண்டையும் வைத்து வியாபாரஞ் செய்வதாகச் சொல்கிறார்கள். சுத்தக் கதர்தான் வேண்டுமென்று கேட்பவர்களுக்கு அதையே கொடுக்கிறார்களாம். கள்ளுக் கடைகளில் தோசை விற்கும் காட்சி சிலர் கண்டிருக்கலாம். பசித்தவர்களுக்கு உணவளிப்பதாக ஆசை காட்டிப் பிறகு அருகில் வந்தபின் மதுவென்னும் மாயவலையில் சிக்க வைப்பது கள் வியாபாரிகளின் தொழில். இப்போலி வியாபாரிகளின் நடத்தை மேற்சொன்னதைக் காட்டிலும் சிறந்ததல்ல. கதர் வியாபாரத்தில் லாபமில்லையென்று சிலர் சொல்கிறார்கள். தூய கதர் மாத்திரமே விற்று லாபமடைந்த அநேகரை நாம் காட்டித் தருகிறோம். வியாபார தோரணையில் கதரிலிருந்து லாபம் சம்பாதிக்க இவர்களுக்கு இயலாவிட்டால் தேசத்திற்குத் தீமை விளைவியாத மற்ற வியாபாரங்கள் செய்கிறது தானே. போலி வியாபாரஞ் செய்து ஏழைகளுக்கு உணவளிக்கும் கதரை ஏன் கெடுக்க முயலவேண்டும்?

"குடிநூல்"

முறையீடு

உண்மை உழைப்பு

தினம் ஒரு மணி நேரம் நூற்றால் 16-ம் நெம்பர் நூல் 7/32பலம் முடிகிறது. வருடத்தில்சராசரி 70 பலமாவது நூற்று நெசவுசெய்தால் 2½ அகலம் 4½ முழம் வேட்டி 24 கிடைக்கும். இதற்குப்பருத்திராத்தல் 50-க்கு விலை ரூ 6-4-0. கொட்டை ராத்தல் 36-க்கு விலை ரூ. 2-4-0. நீக்கி ரூ 4-ம் நெசவு கூலி ரூ. 10-ம் ஆக ரூ. 14 ஆகிறது. கடையில் விலை ரூ. 36 கொடுக்கவேண்டும் அதுவும் சுத்தக்கதர் தானென்பது சந்தேகம். இதில் ரூ. 22 மிச்சம் ஆகிறது. அதாவது தினம் 1 அணா கிடைக்கிறது. வெளிப்படையாக இந்த நன்மை நூற்க ஆரம்பித்து விட்டால், பொறாமை, விடாமுயற்சி, ஒழுக்கத்தில்பற்றுதல், தேக ஆரோக்கியம், நாடு விடுதலைபடைதல் இத்தனை இனிமையும் புலனாகும். எந்த வேலையுடையவர்களும் காலையில் அரைமணி நேரமும், நடுமத்தியானத்திலோ, மாலையிலோ, அரைமணி நேரமுமாக நூற்று வைத்து வருமுடிவில் விருப்பமிருந்தால் தீபாவளி சமயத்தில் கொடுத்து நெய்து வாங்கி உபயோகித்துக்கொள்ளலாம். தற்போதுள்ள அரசியல் நிலையில், தனியே கதர் அபிவிருத்தி செய்வதே நாட்டுக்குச் செய்த உண்மையான விடுதலை உழைப்பு.

சி. ச. அருணசலம்.

இந்தியாவிற்கு பொது உடைமைக் கட்சிவேண்டுமா?

ஏற்கனவே பலர் வயப்பட்டு அவஸ்தைப் படும் நம் நாட்டில் புதியதோர் "அரசியல் பாங்கு" நுழைந்திருக்கிறது. இதுதான் பொது உடைமைக் கொள்கை என்பது.

இக்கட்சியார் சொத்து சுதந்திரங்களை இரண்டு விதமாகப் பிரித்திருக்கின்றனர். அதாவது:—ஆடை, ஆபரணம், கடியாரம், வீடு வாசல், தட்டுமுட்டு சாமான்கள் முதலியவை அவரவர்களுக்குச் சொந்தமானவை. தோட்டந்துறவு, பூமி, கைத்தொழிற்சாலை, வியாபாரசாலை இவைகள் பொதுஜனங்களுக்குரியவை.

ஐரோப்பாவில் இக்கொள்கை, முதன்மையாக ருஷியாவிலும், மற்ற நாடுகளில் சிறிதளவும், பரவியிருக்கிறது. ஆனால் ருஷியாவில் இஃது அரசவம்சத்தை அழித்துநாட்டைஆளுகிறது. சில தினங்களுக்கு முன் இங்கிலாந்தில் இக்கொள்கைகளையுடைய சிலர் சிறையிலிடப்பட்டார் என்று கேள்விப்பட்டோம்.

ருஷிய தேசத்தில் செங்கோலற்றக்கொடுங்கோல் வலுத்திருந்தது. மன்னன் அதிகாரமதுவையுண்டு மனம்போனவாறுமதங்கொண்டிருந்தான். ஜனங்களின் க்ஷேமத்தைக் கவனிப்பார் யாருமில்லை. நாட்டின் அரசிறையெல்லாம் அரசனது செலவிற்கே போதுமாயிற்று. பிரமுகர்களும், தனிகர்களும் அரசாட்சியில்வேண்டிய அதிகாரங்களைப்பெற்று, எளியோருக்கு இடங்கொடுக்கவில்லை. பொது ஜனங்களைக் கவனிப்பார் யாருமில்லை. வியாபாரம். தொழில் முதலியவைகள் மெதுவாக நசித்தன. நாட்டில் தரித்திரம் மிகுந்தது. பொது ஜனங்களுக்கு நியாயங் கூடக் கிடைப்பது அரிதாயிற்று. தனவந்தர்கள் இட்டதே சட்டம். தனிகர்களுக்கும் ஏழைகளுக்கும் பரஸ்பர நேசமில்லை; நம்பிக்கை இல்லை. தான தர்மங்கள் மங்கின. இக்கொடுமைகளை அழிக்கவும், பொது ஜனங்களின் நிலைமையை அபிவிருத்திக்குக் கொண்டு வரவும் இக்கொள்கைகள் கையாளப்பட்டன. கொடுங்கோல் மன்னனும், கொடையற்ற தனிகர்களும் இக்கொள்கைகள் பரவ ஏற்கனவே நாட்டைத் திருத்தி உழுதிருந்தனர். எனவே அவை சீக்கிரம் முளைத்துக் கிளம்பித் தளிர்த்துப் பூத்துக் காய்த்தன.

இங்கிலாந்து முதலாளிகளால் ஆளப்படுகிறது. என்றாலும் பொது ஜனங்கள் வேண்டியவளவு அரசியலில் அதிகாரம் பெற்றிருக்கின்றனர். ஏழைக்குடும்பத்தினனும் தன்புத்தியின் வன்மையால் மேல் பதவிக்கு வரும் சந்தர்ப்பங்கள் அநேகமிருக்கின்றன. அரசரும், அவர் குடும்பத்தினரும் குடிகளின் விருத்தியை வெகு கவனத்துடன் பார்த்து வருகின்றனர். அரச குடும்பத்தில் அதிக டாம்பீகமும் வீண் செலவுகளுமில்லை. நாம் பட்சபாதமின்றி ஆங்கிலேயர்களின் குணங்களை எடுத்துரைக்க வேண்டுமாயின் நாம் அவர்களைச் சாமர்த்தியசாலிகள் என்று ஒப்புக்கொள்ள வேண்டும். சமயோசித புத்தியுடையவர்கள். காலத்தின் நடப்பை நன்றாய் அறியக்கூடிய புத்தி நுட்பமுடையவர்கள். சமயத்திற்கியன்றவாறு தம்மையும் தமது சட்ட திட்டங்களையும் மாற்றிக்கொள்ளும் இயல்புடையவர்கள். இத்தகைய குணங்களுடையவர்களாதலால் அவர்கள் ஆட்சியை சீர்குலையச் செய்வது அசாத்தியமானகாரியம். புதிய விஷயங்களில் ஆங்கிலேயர் திடீரென நுழையும் குணமுடையவர் அல்லர். ஒவ்வொன்றையும் நிதானித்துச் சீர்தூக்கிச்செய்யும் குணம் வாய்ந்தவர்.

"வேலைகளில்லை" என்ற கூக்குரல் இருந்த போதிலும் முதலாளிகளை அழித்து விடவேண்டும் என்ற துவேஷபுத்தி பொது ஜனங்களில் அதிகமாயில்லை. முதலாளிகளின் மீது துவேஷம் அதிகரிக்கா வண்ணம் அரசாங்கத்தாரும் முதலாளிகளும் தங்களால் இயன்றவரையிலும் பாடுபடுகிறார்கள். மற்ற ஐரோப்பிய நாடுகளைப்போல் முதலாளிகளுக்கும் கூலிக்காரர்களுக்கும் அதிக சச்சரவுமில்லை என ஒருவாறு சொல்லலாம். ஆதலால் இங்கிலாந்தில் இந்தப்பொது உடைமைக் கொள்கை பரவவில்லை.

இந்தியாவிற்கு இக்கொள்கை வேண்டுமா? அவசியமா? ஜனங்கள் விரும்புகின்றனரா? இவை நன்மை பயக்குமா? நாம் இவைகளுக்கு பதில் உரைக்க வேண்டிவரின், "வேண்டாம், இல்லை, பயவாது" என்ற எதிரிடை மொழிகளையே உபயோகிக்க வேண்டி வருகிறது.

நம் நாடு மற்றைய தேசங்கள் போன்றதன்று. பழைய வழக்கங்களை அநுசரிப்பதிலும், புதிய புதிய நடையுடை பாவனை, கொள்கைகள் இவைகளைத்தழுவுவதிலும் ஆங்கிலேயரைவிட அதிகமாய் நிதானித்துப்பார்க்கும் தன்மை யுடையவர்கள். நாம் செம்மறியாடுகள் அல்லோம்.

முன்னோர்களால் கட்டப்பட்ட வருணாசிரம தர்மமென்னுங் கற்கோட்டைமிகவும் வலிவுள்ளது. அக்கற்கோட்டை காலபேதத்தால்சிறிது பங்கப்பட்டிருப்பதாகக்காணப்பட்டபோதிலும்முற்றிலும் உடைத்துப்பிளவுபடுத்த முடியாதது.

அக்கோட்டையை உடைத்துத் தள்ளுவது, பிளவேற்படுத்துவது ஒரு சிரமமான வேலை. அநேக பீரங்கிகளுக்குத் தாங்கி நிற்கிறது. தர்மத்தையே சாந்தாகவும் நடு நிலைமையையே கற்களாகவும் உடையது. ஆதலால் மனிதர்களால் இலகுவாகஉடைக்கமுடியாதது.

இவ்வர்ணாசிரம தர்மம் சில விஷயங்களில் நமக்கு நன்மையை அளியாத போதிலும், பல விஷயங்களில் எண்ணுதற்கரிய முன்னேற்றத்துடன் கூடிய சவுக்கியங்களை அளிக்கிறது.

நம்முடை வருணாசிரம நியமனம் ஒவ்வொரு வகுப்பினருக்கும் அளவு மீறிய அதிகாரத்தைக் கொடுக்கவில்லை. ஒவ்வொரு வகுப்பினரையும் ஒருவித கட்டுக்குள் அடக்கியிருக்கிறது. பிராமணன் - மற்றைய மூன்று வகுப்பினர் மீதும், சூத்திரர் மற்றைய வகுப்பினர் மீதும் சாய்ந்து நிற்கவேண்டியிருக்கிறது. ஒவ்வொரு வகுப்பினரும் தம் மனதிற்கியைந்தபடி செய்யமுடியாது தாம் செய்யும் ஒவ்வொரு காரியமும் மற்றைய மூன்று வகுப்பினருக்கும் பயன்படக்கூடியதா அல்லது கெடுதியை விளைவிக்கக்கூடியதா என்று யோசித்தே செய்ய வேண்டியிருக்கிறது. ஒவ்வொருவருடைய நன்மையும் தயவையும் க்ஷேமத்தையும் மற்றொருவர் நாடவேண்டி யிருக்கிறது.

ஆகையினால் தானதருமங்களும்,பொதுஜன நன்மைகளும் நம் நாட்டில் மலிந்திருக்கின்றன. "வேலையில்லை" என்ற சச்சரவின் வலி குறைந்திருக்கிறது. மேனாட்டிலிருக்கும் முதலாளிக்கும் - தொழிலாளருக்கும் உள்ள சச்சரவுக்கு இந்நாட்டில் அதிகமாக உண்டாகவில்லை. பொதுஜனங்களுக்குள் மனக்கொதிப்பையும், துவேஷத்தையும் நாம் காண்கிறோமில்லை. மேனாட்டைப்போன்று வியாபாரமும், கைத்தொழில்களும் சிலர் வயப்பட்டு மற்றவர்களை நசுக்கவில்லை. நமது சமூகக் கட்டுப்பாடானது மேலையற்று அலையும் உற்றார் உறவினரையும் காப்பாற்ற இடங்கொடுத்திருக்கிறது. ஒவ்வொரு மனிதனும் தனக்குத்தான் என்ற கொள்கை நம்மிடத்தில் இல்லை. ஆதலால் பொது ஜனங்களின் கஷ்டத்தை ஒருவாறு இந்நிபந்தனை குறைக்கிறது.

இந்தியர்களின் கீர்த்தி-ஏழைகளுக்கு அன்னமளித்தலே. கலியாண நாட்களிலும், திருவிழாக்காலங்களிலும் மற்றைய சுப சுபங்களிலும் ஏழைகளுக்குத்தங்களாலியன்றவரையில் அன்னமளித்தலால், இவ்வழக்கம் பொது ஜனங்களின் எளிமையை ஒருவாறு குறைக்கிறது.

இந்துக்களுடைய பழக்க வழக்கங்கள் சமூக சம்பிரதாயங்கள் ஏறக்குறைய பொது ஜனங்களின் நன்மையின் பொருட்டே இருப்பதால், மற்றைய நாடுகளின் கொடுமைகள் இவ்விடத்தில் ஏற்படவில்லை. இவ்வழக்கங்கள் நம் நாட்டில் நிலைத்திருக்கும் வரையில் இந்தப் பொது உடைமைக் கொள்கை நம் நாட்டில் பரவாது வேண்டியது மில்லை.

இந்தியாவிற்குத் தற்காலத்தில் அத்தியாவசியமானது முதல். முதலாளிகளே நம் நாட்டின் விருத்திக்கு ஆதாரமானவர்கள். இவர்களை அழிக்க எண்ணுவது பேதமை. உலக அனுபவம் தெரியாத சிறுவர்கள், வாலிபச் செருக்கினால், பொதுஜன சமுதாயக் கொள்கைகளை விரும்பலாம். அக்கொள்கைகள் பரவ வேண்டியதற்குரிய சாமக்கிரியைகளைச் சேகரிக்கலாம். ஆனால் இந்திய வாலிபர்கள் நன்கு அறியட்டும். இக்கொள்கை நம் நாட்டிற்குதவாது. நன்மை பயவாது.

நம் நாட்டில்ஒவ்வொரு கிராமமும், பட்டியும் ஒருசிறியகுடியரசு. இந்தியர்களுக்கு இக்கொள்கைகளில் நம்பிக்கையில்லை.

க. வே. சுப்பிரமணியன். நிம்பால் M.S.M.

காந்தியடிகள்

உண்மையோடியைந்த வாழ்வு

துர்ச்சகவாசத்தின் பயன்

(தொடர்ச்சி)

காந்தியடிகளின் சுயசரிதத்தில் பின்வரும் பகுதி சென்ற வாரத்திய "எங் இந்தியா"வில் வெளியாகி யிருக்கிறது:—

குறிப்பிட்டநாள்வந்தது. அப்போது எனது நிலையை உள்ளபடி விவரித்தல் சிரமமான காரியம். சீர்திருத்தத்தில் உற்சாகமும், வாழ்க்கையில் ஒரு புதுமையைக் காணப் போகிறோமென்ற ஆவலும் ஒரு பக்கம் இருந்தன. மற்றொரு புறத்தில் திருடனைப்போல் ஒளிந்து காரியம் செய்ய வேண்டியிருக்கிறதே என்ற வெட்கம். இவ்விருவகை உணர்ச்சிகளில் எது மேலெழுந்து நின்றது என்று சொல்வதற்கில்லை. ஆற்றங்கரையில் தனிமையான இடமொன்றை நாடிச் சென்றோம். அங்கு என்வாழ் நாளில் முதன் முதலாக இறைச்சியைக் கண்டேன். அத்துடன் நண்பர் கடைரொட்டி கொஞ்சமும் கொண்டு வந்திருந்தார். இரண்டும் எனக்குப் பிடிக்க வில்லை. இறைச்சி தோலைப் போல் கடினமாயிருந்தது. என்னால் அதைத்தின்னவே முடிய வில்லை. அருவருப்பு அதிகமாகவே, முடியாதென்று விட்டுவிட்டேன்.

அன்றிர வெல்லாம் நான் உறக்கங் கொள்ளவில்லை. பலவகையான பயங்கரத் தோற்றங்கள் உண்டாகிக் கொண்டிருந்தன. உயிருள்ள ஆடு ஒன்று என் வயிற்றுக்குள் இருந்து பரிதாபமான குரலில் கத்துவதாகத் தோன்றும். தாக்கி வாரிப் போட்டு எழுந்திருப்பேன். நான் செய்ததை எண்ணிக் கழிவிரக்கங்கொள்வேன். ஆனால் அடுத்தாற் போல் மாமிசம் புசித்தல் ஒரு கடமை யென்பதை நினைவு கூர்ந்து மீண்டும் உற்சாகங் கொள்வேன்! மேலும் நண்பர் எடுத்த காரியத்தை இலகுவில் விட்டு விடுபவர் அல்லர். இறைச்சியைப் பலவகை உயர்ந்த பணியார வகைகளாகப் பாகம் செய்து பார்வைக்கு அழகாயிருக்கும்படியும் செய்து வைப்பார். மேலும் சாப்பிடுவதற்கு ஆற்றங்கரைக்குப்பதிலாக அரசாங்க மாளிகை யொன்றையும் பிடித்தார். இங்கிருந்த போஜன மண்டபத்தில் நாற்காலி, மேஜை முதலியவை இடப்பட்டிருந்தன. சமையற்காரர்களுடன் என் நண்பர் இதற்கு வேண்டிய ஏற்பாடு செய்திருந்தனர். இந்தத் தூண்டிலில் நான் விழுந்தேன். ரொட்டியில் வெறுப்பையும் ஆடுகளிடம் இரக்கத்தையும் எப்படியோ நிவர்த்தி செய்து கொண்டேன். இன்னும் இறைச்சி சுவைக்க வில்லையாயினும் இறைச்சிப்பணியாரங்களை சுவையுடன் உண்ணத்தொடங்கினேன். இவ்வாறு ஓராண்டு நிகழ்ந்து வந்தது. ஆனால் இந்த ஓர் ஆண்டில் ஆறுமுறை தான் இத்தகைய மாமிச விருந்துகள் நடைபெற்றன. முதலாவது அரசாங்க மாளிகை தினந்தோறும் கிடைப்பதில்லை. இரண்டாவதாக உயர்ந்த வகை மாமிசஉண்டிகளைத்தயாரிப்பதற்குப்பணம் நிரம்பவேண்டும். இச்சீர்திருத்தத்துக்குக் கொடுப்பதற்கு என்னிடம் பணமில்லை. எனவே பணச்செலவெல்லாம் நண்பரைப் பொறுத்ததாயிற்று. அவருக்கு எங்கிருந்து பணங் கிடைத்ததோ எனக்குத்தெரியாது. எப்படியோ பணம் மட்டும் கொண்டு வந்து கொண்டிருந்தார். என்னை மாமிசஉணவு கொள்வோனாகச்செய்வதில் அவருக்கு அவ்வளவு உறுதிஆயினும், அவருடைய வருவாயும் கணக்கானதாகவே இருந்திருக்க வேண்டும். இதனால் இவ்விருந்துகள் நீண்டநாளைக்கொரு முறையாகச் சிலவே நடைபெற்றன.

பொய் சொல்லாதிருக்கப் புலாலை விட்டேன்

இவ்வாறு இரகசிய விருந்துகளுக்குச் சென்ற தினங்களில் வீட்டில் சாப்பிடுவது இயலாத காரியம். தாயார் நிச்சயமாகக் காரணம் கேட்பாள். "இன்று எனக்குப் பசிக்கவில்லை. வயிற்றில் ஏதோ கோளாறு இருக்கிறது" என்று சமாதானம் சொல்வேன். இவ்வாறு சாக்குப் போக்குச் சொல்கையில் மனம் வருந்தாதிராது. நான் பொய் சொல்கிறேனென்பதும், அதிலும் அன்னையிடம் பொய் சொல்கிறேனென்பதும் எனக்குத் தெரிந்தே இருந்தன. நாம் மாமிசம் உட்கொள்ளும் செய்தி என் பெற்றோர்களுக்குத் தெரிந்தால் அவர்கள் திடுக்கிட்டு உயிரையும் விட்டுவிடுவார்களென்பதையும் நான் அறிந்திருந்தேன். எனவே இதைப்பற்றி நான் யோசித்ததாவது:- "புலால் உண்பதும், தேசத்தில் உணவுச் சீர்திருத்தம் செய்வதும் அவசியந்தான். ஆனால் புலால் உண்ணாமலிருப்பதை விடப் பெற்றோரிடம் பொய்சொல்லி ஏமாற்றுதல் கொடியது. ஆதலின் அவர்கள் உயிருடன் உள்ள வரையில் உண்ணுதல் கூடாது. அவர்களுக்குப் பிற்காலம் நான் சுதந்திரமடையும் போது பகிரங்கமாகப் புலால் உண்ணுவேன். அதுவரையில்பொறுத்திருப்பேன்." இவ்வாறு நான் செய்த முடிவை என் நண்பருக்குத்தெரிவித்தேன். பின்னர் எப்போதும் நான் புலால் தின்றதில்லை. நானும், என் சகோதரரும் மாமிசம் புசிப் போர்களான விவரம் என் பெற்றோர்களுக்குத் தெரியவே தெரியாது.

பெற்றோர்களிடம் பொய் சொல்லக்கூடாதென்னும் ஆவல்காரணமாகவே நான் புலால் உண்ணுதலைவிட்டேன். ஆனால் என் நண்பரின் சகவாசத்தைமட்டும் விடவில்லை. சீர்திருத்தத்தில் உற்சாகமே என்னைப்படுகுழியில் வீழ்த்துவதற்குக் காரணமாயிருந்தது. இதனால் இத்தகைய தீமைவிளையும் என்று அப்போது நான் கனவிலும் கருதவில்லை.

பாவக்குழியில் விழாது தப்பினேன்.

இந்நட்பின் காரணமாக என்மனைவிக்கும் நான் துரோகம் செய்ய விருந்தேன். எனது நல்லதிர்ஷ்டத்தால் இதினின்றும் தப்பினேன். இந்நண்பர் ஒருமுறை என்னை விபசார வீடொன்றுக்கு அழைத்துச்சென்றார். அங்கு நடந்துகொள்வதற்கு வேண்டிய புத்திமதிகளைக் கூறி என்னை உள்ளே அனுப்பினார். எல்லாவற்பாடுகளும் செய்தாகி விட்டன. பணமும் கொடுக்கப்பட்டு விட்டது. பாவக் குழியில் தலை கீழாக விழவிருந்தேன். இறைவன் தனது எல்லையற்ற கருணையின் வலிமையால் என்னைத்தடுத்தாட் கொண்டார். அந்தப் பாவக் குகையில் நுழைந்ததும் என் பார்வை மங்கிப் போயிற்று பேசுவதற்கு நாவெழவில்லை. படுக்கையில் அவள் அருகில் உட்கார்ந்தேன். ஆனால் ஒரு வார்த்தையும் என்னால் பேசக் கூடவில்லை. இதனால் அவள் பொறுமையிழந்து என்னைத் திட்டி வெளியே போகச் சொன்னாள். என் ஆண்மைக்கு இதனால் குறைவு வந்து விட்டதாக எண்ணினேன். தாங்க முடியாத அவமானம் நேர்ந்து விட்டதாக நினைத்து நொந்தேன். ஆனால், பின்னர் எப்போதும், என்னைக் காத்தருள் புரிந்ததற்காக இறைவனை மனதார வாழ்த்தி வருகிறேன்.

என் வாழ்க்கையில் இம்மாதிரி நிகழ்ச்சிகள் இன்னும் நான்கு நடை பெற்றிருக்கின்றன. அநேகமாக ஒவ்வொரு முறையிலும் எனது நல்லதிர்ஷ்டமே என்னைக்காப்பாற்றியது உயர்ந்த அறநெறியின்படி இவைகளை யெல்லாம் ஒழுக்கத்தவறுகள் என்றே கூறவேண்டும். சிற்றின்ப ஆசை இருக்கவே செய்தது. செயலினால் உள்ள தீமை அச்செயலின் ஆசையிலும் உண்டு. சாதாரணமனிதனுடைய நிலையினின்றும் நோக்கினால் பாவச்செயல் செய்யாதவன் காப்பாற்றப் பட்டவனாகக் கருதப்படுகிறான். இத்தக்கருத்தில் தான் நான் காப்பாற்றப்பட்டேன் என்று சொல்லலாம். சில செயல்களினின்றும் மனிதன் தப்புவது அவனுக்கும் அவனைச்சுற்றியுள்ளோருக்கும் அரிய வரப்பிரசாதமாகும். மனிதன் உண்மை நெறியை உணர்ந்ததும் தன்னைக் காப்பாற்றியதற்காக இறைவன் அருளைப்போற்றுகிறான். மனிதன் சில சமயங்களில் தான் எவ்வளவு முயன்றும் பயன்படாமல் சோதனையில் வீழ்ந்து விடுகிறான். சில சமயங்களில் தன் முயற்சியின்றியே அதிர்ஷ்ட வசத்தால் காப்பாற்றப்படுகிறான். மனிதன் தனது செயல்களுக்கு எவ்வளவு தூரம் எஜமானன், எவ்வளவு தூரம் சந்தர்ப்பங்களுக்கு அடிமை, சொந்த முயற்சி எந்த அளவுக்குப் பயன்படும், விதி எவ்விடத்தில் குறுக்கிடுகிறது,— முதலிய விஷயங்கள் நம்மால் அறியக்கூடாத இரகசியங்களாயிருக்கின்றன. என்றும் அவை மர்மமாகவே இருக்கும்.

இனி, கதையை விட்ட விடத்துக்கு வருகிறேன். எனது நண்பர் சகவாசத்தின் தீமையை இதனாலும் நான் உணரவில்லை. இன்னும் பல முறைகள் இத்தகைய கசப்பு மருந்துகளை விழுங்கியாக வேண்டியிருந்தது. கடைசியாக, நான் எதிர் பாராத குறைகள் அவரிடம் இருப்பதை நான் நேரில் பார்த்த போது தான் என் கண்கள் திறந்தன. இவைகளைப் பின்னால் உரிய இடத்தில் கூறுவேன்.

மனைவியிடத்தில் ஐயம்

அக்காலத்தில் நடந்த மற்றொன்றைப் பற்றி மட்டும் இங்கே குறிப்பிடவேண்டும். எனது மனைவிக்கும் எனக்கும் நேரிட்ட வேற்றுமைகளுக்குப்பெரும்பாலும் இந்நண்பரின் சகவாசமே காரணமாகும். என் மனைவியிடம் எனக்கு அளவுஅற்றஅன்புஉண்டு. அன்புள்ள இடத்தில் பொறாமை குடி கொண்டிருப்பது இயல்பல்லவா? இந்நண்பர் என் ஐயங்களை வளர்த்து வந்தார். இவருடையவார்த்தையை நான் முழுதும் நம்பினேன். இவருடைய செய்திகளை ஆதாரமாகக் கொண்டு என்மனைவியை நான் அடிக்கடி மனம் நோகச் செய்தேன். இந்த எனது ஹிம்சைச் செயலுக்காகப் பின்னால் நான்எப்போதும் வருந்திவருகிறேன். ஹிந்துப் பெண்மணிகளே இத்தகைய கஷ்டங்களைப் பொறுமையுடன் சகித்துவருகிறார்கள். இதனால் தான் பெண்மக்களைநான் பொறுமை அவதாரங்களாகப்போற்றுகிறேன். சந்தேகிக்கப்பட்ட வேலைக்காரன் தன் வேலையை உதறிவிடலாம். மகன் தந்தையின் வீட்டைவிட்டு வெளிக்கிளம்புதல் கூடும். நண்பன் நட்பைத் துறந்துவிடுதல் கூடும். மனைவி தன் கணவனிடம் ஐயங்கொண்டால் பொறுமையுடன் சகித்திருக்கிறாள். ஆனால் கணவன் அவளிடம் சந்தேகங்கொண்டாலோ, அவளுடைய வாழ்க்கை பாழாயிற்று. அவளுக்குப் போக்கிடம் எங்கே? ஹிந்து மனைவி ஒருத்தி விவாகப் பிரிவினைக்கு வழக்குத் தொடரமுடியாது. சட்டத்தில் அவளுக்கு எத்தகைய ஆதாரவும் இல்லை. இவ்வளவுதூரத்துக்கு அவளைத் தள்ளிய என்கொடுமையைநானே ஒருகாலும் மன்னிக்க முடியாது. அஹிம்சா தர்மத்தின் உண்மைகளைத் தெள்ளிதின் நான் உணர்ந்த போதுதான் இச்சந்தேகப்பேய் என்னைவிட்டுத் தொலைந்தது.

அப்போது பிரமசர்யத்தின் மகிமையையுள்ளபடி உணர்ந்தேன். மனைவியென்பாள் கணவனுக்குத் தொண்டுபூண்ட அடிமையல்லவென்றும், அவனுடைய உண்மை வாழ்க்கைத் துணைவியும், தோழியுமாவாள் என்றும் அறிந்தேன். கணவனுடைய இன்பதுன்பங்களில் மனைவிக்குச் சமமானபாகமுண்டு. கணவனுக்குத் தன்வழியைத் தெரிந்தெடுத்துக்கொள்ள எத்துணைச் சுதந்திரம் உண்டோ அத்துணைச் சுதந்திரம் மனைவிக்கும் உண்டு. சந்தேகங்களினால் இருண்டிருந்த அக்காலங்களை எண்ணும்போது, என்னுடைய தவறுகளும் காமாதுரக் குரூரச்செயல்களும் நினைவுக்கு வரும்போது என்னை நானே வெறுத்துக் கொள்கிறேன். எனது நண்பரிடத்தில் நான் கொண்டிருந்த குருட்டு நேசத்தை எண்ணி எண்ணி வருந்துகிறேன்.

அறியாப் பயல்கள்

[டால்ஸ்டாய் கதை ஒன்றைத் தழுவி ஸ்ரீமான் சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் எழுதியது.]

கரிசில் பாளையம்

கார்த்திகை இரவு : ஐந்து நாழிகைப் பொழுது

[சுப்பனும் பாவாயும் தங்கள் வீட்டிலிருந்து தெருவுக்கு வருகிறார்கள். சுப்பனுக்கு 12 வயது. பாவாய் 8 வயதுப்பெண். முருகன் (10 வயதுச் சிறுவன்) பக்கத்து வீட்டுத் திண்ணைமேல் நிற்கிறான். பாவாய் கண்ணைத் துடைத்துக் கொண்டு வருகிறாள்.]

முருகன் :— எங்கேடா போகிறீர்கள் ? இந்நேரத்தில் என்னடா வெளியே கிளம்புகிறீர்களா ? சோளக்காட்டுக்குக் காவலுக்குப் போகிறீர்களா ?

சுப்பன் :— ஐயோ ! குடிச்சுப்போட்டு எல்லாரையும் அடிக்கிறான் !

முருகன் :— யார் ! உங்கள் சித்தப்பனா ?

சுப்பன்:— ஆமாமடா, வேறு யார் ? இன்று வெகு ஜாஸ்தி வெறி, பயமாயிருக்கிறதடா !

பாவாய் :— ஐயோ ! அம்மாளைத் தொப்பு தொப்பென்று அடித்துக்கொல்லுகிறானே !

சுப்பன் :— நான் இன்று உள்ளே போக மாட்டேன்; என்னையும் அடித்துப்போடுவான்.

[வாசலில் உட்கார்ந்து கொள்கிறான்.]

சோறு இல்லாமல் போனால் போகுது. இரவெல்லாம் இங்கேயே இருந்து விடுகிறேன். வீட்டுக்குள் போக பயமாயிருக்கிறது.

[பாவாய் அழுகிறாள்]

முருகன் :—அழாதே, பாவக்கா ! அப்படித்தான் நடக்கும். இதற்கென்ன அழுகிறது. அழாதே ! நான் சொல்லுவதைக்கேள்.

பாவாய் :— நான் முட்டாதாரனாயிருந்தால், சித்தப்பனுக்குக் கள் கொடுக்கும் பாவிகளை யெல்லாம் பிடித்து ஜெயிலில்போட்டு மூடிவிடுவேன். கள்ளை எங்கும் விற்காமல் உத்தரவு போட்டு விடுவேன்.

முருகன் :—பைத்தியக்காரி ! முட்டாதாரன் என்ன செய்யலாம்? முட்டாதாரனுக்குமேல் இராஜா இருக்கிறான்.

பாவாய்:— இராஜா தான் ஆகட்டுமே! ஏன் அவன் கள் விற்கிறவனைக் கண்டுபிடித்து ஜெயிலில் பிடித்துப் போட்டுவிடக் கூடாது ?

முருகன் :— ஆ ! அப்படியா ? இராஜா தானே சாராயமும் கள்ளும் விற்கிறார்? இது உனக்குத் தெரியாதா ? வேறே யாராவது கடை வைத்தால் இராஜாவுக்கு ஆதாயம் குறையுமென்று அவரே விற்கிறார்.

பாவாய்:—சீ, சீ! பொய் சொல்லாதே! இராஜா எங்கேயாவது கள் விற்பாரா ?

முருகன் :—நான் சொல்லுவது பொய்யா ? நீ வேண்டுமானால் யாரையாவது கேள். என் மாமன் பழனிக்கவுண்டனை ஏன் பிடித்துப் போனார்கள், தெரியுமா? மாரியம்மன் திருவிழாவில் சாராயம் காய்ச்சி விற்றான். அதனால் இராஜாவுக்கு ஆதாயம் குறைந்து போயிற்று. பிடித்து ஜெயிலில் வைத்திருக்கிறார்கள்.

பாவாய் :— அப்படியா ! உங்கள் மாமன் என்னவோ குற்றம் செய்தான், சேவகர்கள் பிடித்துப் போனார்கள் என்றல்லவோ சொன்னார்கள்.!

முருகன் :— ஆமாம் ! சாராயம் விற்றான். இராஜாவினுடைய வியாபாரம் கெட்டுப்போயிற்று. அதுகுற்றம் தானே! பிடித்துப்போய் ஜெயிலில் வைத்திருக்கிறார்கள்.

சுப்பன் :— நீ சொல்லுவது வேடிக்கையாயிருக்கிறது. இப்படி இராது, முருகா! நாளை வாத்தியாரைக் கேட்கலாம். அவருக்குத்தெரியுமல்லவா ?

முருகன் :—சரி, சரி, அவரைக் கேட்கலாம்.

கிராம பள்ளிக்கூடம்

மறுநாள் காலை

[வாத்தியார் திண்ணைமேல் உட்கார்ந்து கொண்டிருக்கிறார், மாணவர்கள் ஒவ்வொருவராய் வந்து உள்ளே செல்கிறார்கள்.]

சுப்பன் :— (வாத்தியாரிடம் மெள்ளப் போய்) ஐயா ! வாத்தியார் ஐயா ! யாரோ ஒரு பயல் சொல்லுகிறான், அது உண்மையா சொல்லுங்கள் ! நம்ம இராஜா கள் விற்கிறாராமே! அதற்காகத்தான் குளத்திக்காடு பழனிக்கவுண்டனை ஜெயிலில் போட்டிருக்கிறார்களாமே. இது பொய்தானே ?

வாத்தியார் :— இதென்ன பைத்தியக்காரக் கேள்வி? யார் உனக்கு இப்படிக் கதை சொன்னது? அறியாத பயல்! இராஜாவாவது சாராயம் கள் விற்கவாவது! இராஜா ஒருவிதக்கடையும் வைத்திருப்பது கிடையாது. இராஜாக்கள் வியாபாரமா செய்வார்கள்? இல்லவேயில்லை. பழனிக்கவுண்டன் லைஸென்ஸில்லாமல் சாராயம் காய்ச்சி விற்றான். சர்க்கார் வருமானம் அதனால் கெட்டதற்காக அவன் தண்டனை யடைந்தான்.

சுப்பன் :— அதெப்படி? சாராயம் இவன் விற்றதால், சர்க்கார் வரும்படி ஏன் குறைந்து போகும்? எல்லாரும் கந்தாயம் சரியாய்க்கட்டுகிறார்களே !

வாத்தியார் :— சாராயத்துக்கு ஒரு வரியுண்டு. ஒரு பீப்பாய் சாராயம் காய்ச்ச என்ன செலவு பிடிக்குமோ அதற்குமேல் ஒரு வரி சர்க்காருக்கும் கொடுக்கவேண்டும். அதைக் கொடுத்துவிட்டு அந்த வரியையும் சாராயத்தின் மேல் போட்டு விற்பார்கள். கள்ளுக்கும் அப்படியே ஒரு வரி உண்டு. இந்த வரி சர்க்காருக்கு ஒரு பெரிய வருமானம். பூமிக்குக் கந்தாயம் போட்டு வசூல் செய்கிற மாதிரி இதுவும் ஒரு வருமானம். நம்முடைய சர்க்காருக்குக் கள் சாராயம் அபினி இவைகளின் மேல் கோடிகோடி ரூபாய் வருமானம் வருகிறது.

சுப்பன் :— (தன் சித்தப்பனை நினைத்துக் கொண்டு) அப்படியானால் ஜனங்கள் குடிக்கக் குடிக்க, சர்க்காருக்கு அதிக வருமானமா ?

வாத்தியார் :— ஆமாம். இந்தக்கள் சாராய வருமானம் சர்க்காருக்கு இல்லாவிட்டால் பட்டாளம், போலீஸ், உத்தியோகஸ்தர்களுக்குச் சம்பளங்கள், பள்ளிக்கூடங்கள், ஆஸ்பத்திரிகள் ஒன்றும் சர்க்கார் நடத்தமுடியாது.

சுப்பன் :— இதெல்லாம் அவசியமானால் ஏன் அவைகளுக்காக நேராய் வரி கொடுக்கச் சொல்லக்கூடாது ? கள் குடிக்கச்சொல்லி அதில் ஒரு பாகம் ஏன் எடுத்துக் கொள்ளவேண்டும் ? இதென்ன அநியாயம் !

வாத்தியார் :— (சிரித்துக்கொண்டு) அநியாயமா ! அதுதான் சட்டம். உனக்கு இதெல்லாம் இப்போது தெரியமாட்டாது. நீ உள்ளே போ, எல்லாப்பிள்ளைகளும் வந்து விட்டார்கள். பாடங்கள் ஆரம்பிக்கலாம்.

1926

ஒரு பிரெஞ்சுமாதின் ஜோஸ்யம்

மாடம் தீபி என்ற பாரிஸ் ஜோதிட மாது 1926-ல் பின்கண்ட சம்பவங்கள் நிகழுமென்று தெரிவித்திருக்கிறார்:—

கிரேட் பிரிட்டனுடைய பலமான அஸ்திவாரம் இன்னும் ஆடப்போகிறது. வேலையில்லாத் திண்டாட்டம் குறைந்தாலும், ஏற்கெனவே சந்தேகிக்கப்பட்ட ஓர் அன்னிய கவர்ன்மெண்டின்மூலமாகஅடங்கும் கிளர்ச்சி நடக்கும். சுரங்கவிபத்தொன்று பிரமாதமாக ஏற்பட்டுப்பெருங்கிளர்ச்சிநடக்கும். குடியேற்ற நாடுகளிலும், முக்கியமாக தென்னாப்பிரிக்காவிலும் இந்தியாவிலும் கவலை யுண்பெண்ணத்தக்க உபத்திரவங்கள் ஏற்படும். தேவாலயங்கள் எரியும். சாந்தமாக வாழும் நகரவாசிகளின் மத்தியில் பீரங்கிகள் அலறும். லண்டனிலேயே ஒரு மானக்கேடானசம்பவம் நடக்கும். சில பெரிய இடத்துப் பெயர்வழிகள் அதில் சம்பந்தப்பட்டிருப்பார்கள். இங்கிலாந்தின் தென்பாகத்தில் ரயில்வண்டி விபத்து ஏற்படும். அதில் ஒரு பிரெஞ்சுக்காரரும் அகப்பட்டுக் கொள்வார். பவுன் மதிப்புக் குறைவுமாகையால், கையில் பவுன் உள்ளவர்கள் அவைகளை முன்னதாகவே மாற்றிக்கொண்டு விடுதல் நலம்.

நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம் நரகத்தி லிடர்ப்படோம் நடலையில்லோம், ஏமாப்போம் பிணியறியோம் பணிவோமல்லோம் இன்பமே யெந்நாளுந் துன்பமில்லை, தாமார்க்குங் குடியல்லாத் தன்மையான சங்கரனற் சங்கவெண் குழையோர் காதிற், கோமாற்கே நாமென்றும் மீளாவாளாய்க் கொய்ம்மலர்ச்சே வடியிணையே குறுகினோமே.—(அப்பர்.)

சென்னை 1926ஞு பிப்ரவரிமீ 5உ

தொழிலாளர் சங்க மசோதா

தொழிலாளர் சங்க மசோதா ஒன்று தலைகாட்டி, இதுபோழ்து இந்திய சட்டசபையின் முடிவான அங்கீகாரம்பெறும் நிலையிலிருக்கிறது. சென்ற புதன் கிழமை வரை கிடைத்த நிகழ்ச்சி முறைச் செய்தியே நமக்குக் கிடைத்திருக்கிறது. முழு விவரம் கிடைத்த பின்னர் அம்மசோதாவைப்பற்றி விரிவாக எழுதுவோம். இதுபோழ்து நான்கு குறிப்புகளை எடுத்துக் கொள்வோம். (க) பதிவு (உ) நிதி (ங) வெளியார் (ச) அங்கம்.

பதிவைப்பற்றியசட்டம் போற்றத் தகுவதாயில்லை. சங்கத்தை ஒழுங்குபடுத்திப் பதிவிற்கென விண்ணப்பஞ் செய்யப்படின் அச்சங்கத்தை எவ்விதத் தடையுமின்றிப் பதிவோர் ஏற்று அங்கீகரிப்பது சங்க வளர்ச்சியைக் கருதுவதாகும். அதைத் தவிர்க்கும் உரிமை அவர்க்கிருத்தல் நலந்தருவதாகாது. அதற்குமேல் நியாயாஸ்தலமேறிப் பதிவுக்கு விண்ணப்பஞ் செய்து, நீதிபதி தீர்ப்பின்படி நடக்கும் முறையும் அறமாகத் தோன்றவில்லை. பதிவு எத்தடையுமின்றிச் செய்யப்பட வேண்டும் என்னும் நியதியிருத்தல் வேண்டும்.

நிதியைப்பற்றிய வாதம் சட்டசபையில் பெருமிதமாக நடந்தது. தொழிலாளர் நிதிக்குத் தொழிலாளர் உரிமைபெறல் வேண்டும். அதன்கண் நியதி விதித்தல் நியாயமாகத் தோன்றவில்லை. நிதி துர்விநியோக மாகாதிருக்குமாறு சில முறைகள் செய்பஞ் செய்வது நலம். தொழிலாளர் சங்க நிதியினின்றும் தொழிலாளர் அரசியல் காரியங்கட்குச் செலவழிக்கக் கூடாதாம். அதற்கெனத் தொழிலாளர் சங்கச் சார்பின்றி நிதி திரட்டிக்கொள்ள வேண்டுமாம். இவ்விதி தொழிலாளர் அரசியல் உரிமையைக் கட்டுப்படுத்துவதாகும். தொழிலாளரோ தொழிலாளர் சார்பாக எவரோ தேர்தலில் நின்றால் அவர்க்குதவி சங்க நிதியினின்றும் பெறுதல் கூடாது என்னும் நியதி, தொழிலாளர் கட்சியென்றொரு கட்சி தோன்றுதிருக்கச் செய்யுமா செய்யாதா என்பது கவனிக்கத்தக்கது. சங்கத்துக்கும் சந்தா செலுத்தி, அதற்குமேல் அரசியல் வேலைக்குத் தனி நிதி செலுத்துவதெனில், அது தொழிலாளரால் இயலாத காரியம்.

வெளியாரே இருத்தல் கூடாது என்னும் உருவோடு மசோதா தோன்றிற்று. தனிக்கூட்டத்தில் மூன்றில் ஒரு பங்கினராவது தொழில் புரிவோராயிருத்தல் வேண்டும் என்னும் நிபந்தனை சேர்க்கப்பட்டது. இப்பொழுது பாதி பேர் தொழில் புரிவோராக விருத்தல் வேண்டும் என்று நிறைவேறியிருக்கிறது. எந்நோக்கோடு இது நிறைவேற்றப்பட்டிருக்கிறது? வெளியாரெனில் முதலாளிகளுக்கும் அரசாங்கத்துக்கும் அச்சம் போலும்! வெளியார் என்று பழி சுமத்தும் அரசாங்கம் வெளியார் தலையிடா முன்னம் தொழிலாளர்க்காக என்ன செய்து விட்டது? வெளியார் தலையிட்டுக் கிளர்ச்சி செய்த பின்னரன்றோ அரசாங்கம் மூச்சுவிடத் தொடங்கிற்று? சர்வதேசத் தொழிலாளர் மகாநாடும், வெளியார் தலையிட்டால் ஏற்பட்ட தொழிலாளர் சங்கங்களுமல்லவோ இம்மசோதா கொணர அரசாங்கத்தைத் தூண்டின? தொழிலாளர் நலனை நாடுவதில் அரசாங்கத்தைப் பார்க்கினும், முதலாளிகளைப் பார்க்கினும் வெளியார்க்கு அதிக பொறுப்புண்டு என்பதை அவ்விரு சாராரும் அறிவாராக.

தொழிலாளர் சங்க நிருவாக அவையைப்பற்றிய உரிமையில் சட்டமேன் தலையிட வேண்டும்? வெளியாரை நிருவாகத்தில் - அமர்த்துவதோ அமர்த்தாததோ - அப் பொறுப்புத் தொழிலாளர் பால் இருத்தல்வேண்டும். தொழிலாளர் வெளியாரைக் கொள்ளினுங் கொள்க; தள்ளினுந் தள்ளுக. முற்றிலும் வெளியார்உதவிபெற்று நடக்குஞ் சங்கங்களுமுண்டு; முற்றும் வெளியார் உதவியின்றி நடக்குஞ் சங்கங்களுமுண்டு. ஒரு சிறிது வெளியார் உதவி நாடும் சங்கங்களுமுண்டு. நிலைமைக் கேற்றவாறு தொழிலாளர் தஞ்சங்கநிருவாகசபையை அமைத்துக் கொள்ளும் உரிமை அவர்க்கே யிருத்தல்வேண்டும்.

பல சங்கங்கள் பதிவுபெறும் முறையில் மசோதா நிறைவேறவில்லை. எங்ஙனமாயினும் சங்கங்களை ஒழுங்குபடுத்திப் பதிவுசெய்து, நாளடைவில் குறைகளைக் களைய முயற்சிசெய்யலாம். தொழிலாளர்கள் சங்கங்களை ஒழுங்குபெற நடாத்த முயல்வதற்கு மசோதாவை ஒரு கருவியாகக் கொள்ளலாம். மசோதாவிலுள்ள குறைகள் பல. பிறந்தது குருட்டுப்பிள்ளை. என் செய்வது?

நோயுளார்க்கு வைத்தியம்

“நோயுளார்க்கே வைத்தியன் வேண்டும்” என்பது கிறிஸ்து நாதர் திருமொழி. இவ்வுலகில் நோயுளார்பலருளர். நோய்களோ பற்பல விதம். உடல் நோய்கள் ஒருபால் கிடக்க, உடல் வளத்துக்கும் உயிர் நலத்துக்கும் உரித்தாய ஒழுக்கத்துக்கு ஊறுநிகழ்த்தும் நோயே பெருநோயாகும். அந்நோய்வாய்ப்பட்டு இடர்ப்படுவோர் பலர்.

நமது நாட்டில் அந்நோய்க்கென வழிவழியாக ஒரு கூட்டத்தார் வந்துகொண்டிருக்கிறார். அவர் பொது மகளிரென அழைக்கப்படுகிறார். அவ்வினம் பெண்ணினப் பழிக்கே நிலைக்களனாக நின்று கொண்டிருக்கிறது. சில நாட்களுக்கு முன்னர் “பெண்ணினம்” என்னுந் தலைப்பீந்து நாம் எழுதிய கட்டுரையில் இவ்வினத்தைப்பற்றிக் கூறியுள்ளோம். மானம் விற்றலுக்கென ஓரினத்தார் நாட்டில் வாழ்ந்து வருவது இழிவென்று சொல்ல வேண்டுவதில்லை. ஆண்மக்கள் அறியாமையால் கொடுமையால், இரக்கமின்மையால், அவ்வினம் தோன்றி விட்டது. அவ்வினத்தாரை வழுக்கி வீழ்ந்த சகோதரிகள் (Fallen Sisters) என்று காந்தியடிகள் உருகும் உளத்தோடு அழைக்கிறார்; அவர் நலன்காடி உழைக்கிறார்; இவ்வேளையில் அவ்வினத்தாரைக் கைதூக்கிவிட வேண்டுவது ஒவ்வோர் அருளாளர் கடமையாகும். அத்தகைய கூட்டத்தார் நலங்கருதி உழைப்பது சிறந்த தொண்டு. வைத்தியன் எவர்க்கு வேண்டும்? நோயுளோர்க்கல்லவோ வேண்டும்? மானம்விற்றலையே வாழ்வாகக் கொண்டுள்ள சகோதரிகள் எத்தகைப் பிறவி நோயாளிகள்! சகோதரிகளே! சகோதரர்களே! கவனியுங்கள்.

அந்நோயாளிகள் நோய் போக்க வைத்தியசாலைகள் வேண்டும். வைத்தியர்கள் வேண்டும். சென்னைக் கீழ்ப்பாக்கத்தில் ஒரு வைத்தியசாலை காணப்பட் டிருக்கிறது. ஆங்கொரு பெரிய வைத்தியரிருக்கிறார். அவ்வைத்தியசாலை எது? அவ்வைத்தியர் யாவர்? அவ்வைத்தியசாலை “யுவதி சரணாலயம்” என்பது. வைத்தியர் ஸ்ரீமதி யாமினி பூரணதிலகம்மா அவர்கள். இவ்வம்மையார் தெலுங்குமொழியில் புலமைவாய்ந்தவர்; ஒத்துழையா இயக்கத்திற் சேர்ந்து ஆந்தரதேசத்தில் பெருந்தொண்டு செய்தவர்; தெய்வபக்தர். இவ்வம்மையார் இச்சரணாலயம் அமைத்து வழுக்கிய சகோதரிகளைத் தங்கள் பரம்பரைத் தொழிலில் புகாதவாறு காக்க அவர்கட்குக் கல்வி அறிவு ஒழுக்கமும் தொழில்முறைகளும் போதித்து வருங்காட்சி கண்டு நாம் வரம்பிலா இறும்பூதெய்துகிறோம். வழுக்கி வீழ்ந்துள்ள சகோதரிகளை முன்னேற்றப் பேசுவதைப் பார்க்கினும், எழுதுவதைப் பார்க்கினும், மகாநாடுகளில் தீர்மானங்கள் நிறைவேற்றுவதைப் பார்க்கினும் ஸ்ரீமதி யாமினி பூரணதிலகம்மா அவர்களைப்போல் ஒரு பாடசாலை அமைத்து அதன் வாயிலாகத் தொண்டு செய்வது பயனளிப்பதாகும்.

ஸ்ரீமதி திலகம்மா அவர்களால் நடத்தப்பட்டு வரும் சென்னை ஹிந்து யுவதி சரணாலயத்துக்கு எவ்வளவு பொருளுதவி வேண்டுமென்று அன்பர்கள் சிந்திப்பார்களாக. அவ்வம்மையார் அச்சரணாலயத்தை நடாத்தப் படும்பாடு நமக்குத் தெரியும். பெண் பாலர் செய்யும் முயற்சிக்கு, ஆண்களுஞ் செயற்கரும் முயற்சி? அன்பர்கள் தங்களாலியன்ற உதவி செய்ய வேண்டுமென்பது சொல்லாமலே விளங்கும். “தானத்தில் சிறந்த தானம் வித்தியாதானம்” என்று அறிவு நூல்கள் கூறுகின்றன. அதினும் பரம்பரையாக ஓர் இழிதொழிலில் இறங்கியுள்ள சகோதரிகளைப் பண்படுத்தச் செய்யும் வித்தியாதானம் மிக விழுமியது. இச்சரணாலயத்துக்குதவி புரிவதற்கு எத்தனையோ கோடி கோடி ஆலயங்கள் கட்டுவதும் ஈடாகாது.

யுவதி சரணாலயம் நன்முறையில் ஒழுங்காக நடைபெற்று வருகிறது. இதுபோழ்து பதினாறு பெண்மணிகள் ஆங்கே பயின்று வருகிறார்கள். நான்கு ஆசிரியன்மாரிருக்கிறார். பார்வைக்கினியதும் பரந்த வெளியுடையதுமான கட்டிடத்தில் சரணாலயம் அமைக்கப்பட்டிருக்கிறது. ஓரிடத்தில் சிறு நெய்தற்சாலையும் அமைக்கப்பட் டிருக்கிறது. அச்சரணாலயப் படத்தைப் பார்க்க. ஒவ்வொரு பெண்ணிற்கு ஆண்டொன்றிற்கு இருநூறு ரூபா பிடிக்கும். ஒவ்வொரு பெண்ணிற்குரிய செலவை ஒவ்வொருசெல்வரேற்றுக்கொண்டால்சரணாலயத்தில் இன்னும் பலர் சேரக்கூடும். செல்வர்கள் தங்கள்கடனாற்றுவார்களாக. சென்னைக் கீழ்ப்பாக்கம், மண்டபம் ரோட், இரண்டாவது எண்ணுள்ள நிலயத்தில் நடைபெற்று வரும் ஹிந்து யுவதி சரணாலயத்தை மனமார வாழ்த்தி அதன் தலைவர் ஸ்ரீமதி யாமினி பூரணதிலகம்மா அவர்கட்கு எமது நன்றியறிதலான வணக்கத்தைச் செலுத்துகிறோம்.



உணவு

‘தனு கரணம் புவனம் போகம்’ என்று நமது ஞான நூல்களிலிருப்பதை நாம் காண்கிறோம். இந்நான்கும் கடவுளால் உயிர்கட்கு நல்கப்பட்ட உடைமைகள். இந்நான்கனுள் தலையாயது தனு அதாவது உடல். உடல் வளமாயிருந்தாலன்றிக் கரணம் உரம்பெற்றிராது. இப்புவனத்தில் வாழ்ந்து போகந் துய்ப்பதற்கு உடல் நலமும் கரண உரமும் வேண்டற்பாலன.

உடலை நல்வழியில்ஓம்பாதொருவன் இவ்வுலக இன்பத்தையும், அதன் வாயிலாக இறைவின்பத்தையும் நுகரும் பேற்றை யிழந்தவனாகிறான். உயிர் விளக்கத்துக்கெனக்கடவுளால் கொடுக்கப்பட்ட உடலை யோம்பாது கிடப்பவன் கடவுள் ஆணை மீறிய பாவியு மாகிறான். ஆதலால் மக்கள் உடலோம்பலில் பெருங் கவலை செலுத்தல் வேண்டும்.

உடலை எவ்வழியில் ஓம்புவது? கண்டதைத் தின்று, ஆறு வேளை ஏழு வேளை உண்டா, பற்பல மருந்துகளைக் கொண்டா உடலை வளர்த்தல்வேண்டும்? இத்துறை நின்று உடலை யோம்புவோர் பலதிற நோய்வாய்ப்பட்டு விரைவில் முதுமை யெய்தி இவ்வுலக வாழ்வைத் துறப்போராவர். பின்னை என்செயல் வேண்டும்? பட்டினி கிடப்பதா? பட்டினியினாலும் பல துன்பங்கள் நேரும். வேறு வழி என்னை? இயற்கைக்கு மாறா வாழ்வை நடாத்தினால், உலகில் இன்ப வாழ்வு பெறலாம்.

உயிர்கட்கு உடலையளித்த ஆண்டவன் அதன் காப்புக்கென ஞாயிறு, காற்று,நீர்முதலிய இயற்கைப் பொருளை வழங்கியிருக்கிறான். இவைகளைப்பெறுதற்குப் பெரு முயற்சி வேண்டுவதில்லை. இவை மனிதனுக்கு உணவாகவுந் துணை புரிகின்றன. விரிவு சுகாதார நூல்களிற்காண்க. இவைகளின் கூட்டுறவால் விளையும் இயற்கைக் கனிகள் தானியங்கள் கீரைகள் முதலியனவும் மனிதனுக்குரிய உணவுப்பொருள்களாகும். ஞாயிற்றொளியிலுங் காற்றிலும் நன்னீரிலும் மூழ்கியாடி இயற்கை உணவுகளை ஒருபோது அல்லது இருபோது கொண்டு வாழ்வோன் எவ்வித நோயினாலும் பீடிக்கப்பெறாது இவ்வுலகில் நீண்டநாள் வாழ்ந்து இன்பந்துய்ப்பன்.

நமது நாட்டில் மக்கள் கொள்ளும் உணவுகளில் சிறந்தது சோறு. எல்லாப் பொருள்களினும் சோற்றையே நம்மவர்கள் பெரிதும் உண்கிறார்கள். ஆதலால் அச்சோற்றின்மீது மனிதன் எவ்வளவு கருத்துச் செலுத்தல் வேண்டுமென்பதை விரித்துக் கூறல் அநாவசியம். அச்சோறு எதனால் ஆக்கப்படுகிறது. அரிசியினால் என்று எவருஞ் சொல்வர். அவ்வரிசிக்குரிய நெல் விளையாத இடம் நமது நாட்டிலுண்டோ? பயிர் என்று பொதுப்படக் கூறுவது நமது நாட்டில்நெற்பயிரையேகுறிக்கும். நமது நாடளிக்கும் பலதிறக்காட்சிகளுள், நெற்பயிரின் பசுமைக்காட்சியே பெரிதும் மனதைக் கவர்தல் காணலாம். நமது நாட்டை நெல்நாடென்றும், நமது வீட்டை அரிசி வீடென்றும், நமது நாட்டு மனிதனைச் சோற்று மனிதனென்றுஞ் சொல்லலாம். மனித வாழ்விற்குரிய உணவுப் பொருள்களில் தலைசிறந்து விளங்கும் அரிசி நம்மனோர்க்கு உயிர் போன்றது.

அத்தகைய அரிசியை நம்முன்னோர்கள் எப்படிப்பெற்று வந்தார்கள்? நாம் இதுபோழ்து எப்படிப் பெறுகிறோம்? நம் முன்னோர்கள் உலக்கையால் குத்தப்பெற்ற அரிசி பெற்று வந்தார்கள். நாமோ இயந்திரங்களால் உடைக்கப்படும் அரிசிபெற்று வருகிறோம். இரண்டுக்கும் வேற்றுமை என்னை? முன்னையதில் அரிசிமீதுள்ள பசைநீங்குவதில்லை. பின்னையதில் அப்பசை அறவே களையப்படுகிறது. அப்பசை ஜீரண சக்திக்கு இன்றியமையாது வேண்டற்பாலது. அப்பசையற்ற மில்லரிசி- மனிதனது ஜீரண சக்தியைக்குலைத்து அவனை நோய் வாய்ப்படச் செய்கிறது. உமியின் வாயிலாகவும், தவிட்டின் வாயிலாகவும், பசையின் வாயிலாகவும் ஆண்டவன் அளித்த ஒரு பெருங்குணத்தை அறவே போக்கும் (அரிசி) மில்கள் நாட்டில் யாண்டும் மலிவது கண்கூடு. ‘யமதூதர்கள் கூட்டமோ இவைகள்’ என்றும்ஐயுறுகின்றோம். இவ்வியந்திரங்கள் எவ்வளவு பொருளை நமது நாட்டினின்றும் இழுத்துக் கொள்கின்றன? எத்துணைத் தொழிலாளர்கள் வாயில் மண்ணைப் போட்டன? நேயர்களே! கவனியுங்கள். இவைகளோடு அவை பிணியையும் தருகின்றன.

இந்தப் பொல்லாத இயந்திரங்கள் வருதற்குமுன் நம் பெண்மக்கள் ஆனந்தப் பாடல்கள் பாடி நெல்குத்திப் புடைத்தளித்த அரிசி நம்மை வளர்த்த அருமையை என்னென்று கூறுவது? அந்தோ! இயந்திர அரிசியால் நம்மவர்கள் மெலிகிறார்கள்; நலிகிறார்கள். அம்மெலிவையும் நலிவையும் காணும்போது உள்ளம் உருகுகிறது. நாளுக்கு நாள் நாட்டில் நகர பரிபாலன சங்கங்கள் பெருகுகின்றன. அவைகளில் அங்கம் பெற முயற்சியும், கூச்சலும், வழக்கும் மலிகின்றன. இப்பார்க்குப் பெருவழக்கிடும் பெரியோர்கள் கருத்து மில்லரிசியின்மீது செல்லலாகாதா? மக்களை இவ்வரிசி உண்ணச் செய்து வேறு பல சுகாதார முறைகளை அமைப்பதால் என்ன பயன் விளையும்? நமது நாட்டார் மேல் நாட்டு இயந்திர இயக்கத்துக்கு அடிமைப்பட்டு நிகழ்த்திய பிழைகளுள் தலையாயது மில்லரிசி பெறுவது. முன்பின் ஓராது ஒன்றில் விழுங் குணம் நம்மவரை விடுத்து என்று நீங்குமோ?

மில்லரிசியிலுள்ள தீமைகளை அறிவினும் ஆராய்ச்சியினும் மிக்க நிபுணர்கள் எடுத்துக் காட்டுகிறார்கள். சென்ற வாரம் சென்னையில் உணவைப்பற்றி டாக்டர் முத்து என்பார் ஓர் அரிய சொற்பொழிவு நிகழ்த்தினார். அதன் கண் பெரிதும் மில்லரிசியினால் விளையுங் கேடுகளை அவர் குறிப்பிட்டார்; கையால் குற்றிப் பெறும் அரிசியே நலந்தருவதென்று உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளக்கிக் காட்டினார். சுகாதாரத்துறையில் கைபோய நிபுணர்கள் அறிவுறுத்தலை அரசினரும், நகரசபையாரும், பொதுஜன ஊழியரும் உடனே ஏற்று வேண்டுவ செய்வாராக. ஆருயிர் மக்காள்! உங்கள் உயிர் அரிசியைப் பொறுத்து நிற்கிறது! நல்லரிசி பெற வேண்டுவது உங்கள் கடமை. மில்லரிசி கொள்ளாதேயுங்கள்! அஃது உங்கள் ஜீவாதாரத்தை நசிக்கும் யமன். எச்சரிக்கை! எச்சரிக்கை!

இடியேறு

மகாயுத்தத்தில் உயிர் நஷ்டம்

சென்ற மகாயுத்தத்தைப்பற்றி மிஸ்டர் பேஜ் என்பார் எழுதியுள்ள ஒரு புத்தகத்திலிருந்து சில பகுதிகள் “எங் இந்தியா”வில் வெளியிடப்பட்டு வருகின்றன. அந்த யுத்தத்தின் பயனாக விளைந்த உயிர்நஷ்டத்தையும், மற்றும் பலருக்குப் பலவகையில் ஏற்பட்ட கஷ்டங்களையும் பின்வருமாறு தொகுத்துக் கூறியிருக்கிறார். இறந்தவர் என்று நிச்சயமாய்த் தெரிந்துபோன யுத்தவீரர் ஒரு கோடி பேர். இறந்தவர்கள் என்று ஊகிக்கப்படும் யுத்தவீரர் 30 லட்சம் பேர். நேராகச் சண்டையில் ஈடுபடாதவர்களில், யுத்த நோய்கள், ஆகாய விமானங்கள், நீர்மூழ்கிக் கப்பல்கள் இவைகளாலும், நாடு கடத்தப்பட்டும், தங்க இடமில்லாமலும், பட்டினியினாலும் மாண்டு போனவர் 1 கோடி 30 லட்சம் பேர். யுத்தத்தில் காயமடைந்தவர்கள் 2 கோடி பேர். யுத்தக் கைதிகள் 30 லட்சம் பேர். யுத்தத்தில் பெற்றோரை இழந்த அநாதைக் குழந்தைகள் 90 லட்சம் பேர். யுத்தத்தில் கணவனையிழந்த மாதர் 50 லட்சம் பேர். பிறநாடுகளில் அடைக்கலம் புகுந்தவர் ஒரு கோடி பேர். இதன்மீது மிஸ்டர் பேஜ் கூறுவதாவது:—“லூஸிடானா என்னும் கப்பல் ஓராயிரம் பிரயாணிகளுடன் கடலில் மூழ்கிய செய்தி கேட்டதும் உலகம் முழுவதும் திடுக்கிட்டுத் திகைத்துப் போயிற்று. நான்கு வருஷங்களில் மகாயுத்தத்தில் மாண்ட 2 கோடி 60 லட்சம் உயிர் நஷ்டத்துக்கு ஈடாவதற்குத் தினம் ஒரு லூஸிடானா கப்பல் வீதம் 70 வருஷங்களுக்குஇடைவிடாமல்கப்பல்களைக் கடலில் அமிழ்த்திவர வேண்டும்!” மேனாட்டு நாகரிகத்தின் இத்தகைய விளைவுகளைக் கண்டன்றோ மேனாட்டு அறிஞர் பலர் சமாதான வழிகாட்டக் காந்தியடிகளை எதிர் நோக்குகின்றனர்?

வெளிநாடுகளில் பிரிட்டிஷ் மூலதனம்

இங்கிலாந்திலிருந்து சென்ற ஆண்டில் ஏற்றுமதியான சரக்குகளின் பெறுமானத்தை விட 20 கோடி பவுன் அதிக பெறுமானமுள்ள சரக்குகள் இறக்குமதியாயின. ஆனால் இந்த அதிக இறக்குமதிக்கு ஈடாக 20 கோடி பவுன் நாட்டிலிருந்து வெளியே அனுப்பப்படவில்லை. பின்னர் இப்பெருந்தொகை எவ்வாறு அடைபட்டது என்ற வினவுக்கு “டெயிலிஹிரால்டு” பத்திரிகை விடையிறுத்திருக்கிறது. பிரிட்டிஷ் முதலாளிகள் வெளிநாடுகளில் போடும் மூலதனம் நாளுக்குநாள் அதிகமாகி வருகிறதென்றும், இவ்வாறு வெளிநாட்டில் போடப்பட்ட மூலதனத்தினால் கிடைக்கும் ஆதாயமே இந்த 20 கோடி பவுன் ஆகுமென்றும் அது கூறுகிறது. சென்ற நான்கு ஆண்டுகளில் மட்டும் பிரிட்டிஷ் முதலாளிகள் புதிதாக 50 கோடி பவுன் வெளிநாடுகளில் போட்டிருக்கிறார்களாம். ஆசியா, ஆப்பிரிக்கா, அமெரிக்கா முதலிய கண்டங்களிலுள்ள நாடுகளில் தொழிலாளர் குறைந்த சம்பளத்துக்குக் கிடைப்பதால், பணத்தாசை பிடித்த முதலாளிகள் இவ்வாறு வெளிநாடுகளுக்கு மூலதனத்தை அனுப்பி வருகிறார்களென்று “டெயிலி ஹிரால்டு” கூறுகிறது. ஏழை இந்தியராகிய நாம் இவ்விடயத்தில் பெரிதும் கவனம் செலுத்தவேண்டும்,

சணல் தொழிற்சாலைகளில் லாபம்

நம் நாட்டிலிருந்து பலவழிகளிலும் பொருள் போய்க் கொண்டிருக்கிறது. இவற்றுள் மேலே குறிப்பிட்ட பிரிட்டிஷ் மூலதனம் போட்ட தொழில்கள் ஒரு பெருவழியாகும். உதாரணமாக, கல்கத்தாவிலுள்ள சணற் தொழிற்சாலைகளை மட்டும் எடுத்துக் கொள்வோம். இவை பெரும்பாலும் பிரிட்டிஷ் மூலதனத்தைக் கொண்டு பிரிட்டிஷாரால் நடாத்தப்படுகின்றன. தொழிலாளர் மட்டும் இந்தியர். இத்தொழிலாளரின் நிலைமையைப்பற்றி விசாரித்தறியச் சமீபத்தில் இந்தியா போந்திருந்த மிஸ்டர் ஜான்ஸ்டன், மிஸ்டர் ஸைம் என்னும் தொழிற்கட்சித் தலைவர்கள், இவ்வாலைகளில் வேலைசெய்யும் 3 லட்சம் தொழிலாளர்களின் நிலை மிகக் கேவலமா யிருக்கிறதென்றும், சராசரி வருஷத்துக்கு 12½ பவுன் வீதமே அவர்கள் சம்பளம் பெறுகிறார்களென்றும் கூறுகிறார்கள். ஆனால் முதலாளிகள் மட்டும் கொள்ளை லாபம் பெற்று வருகின்றனர். 1924-ம் ஆண்டுடன் முடியும் பத்து வருஷத்தில் முதலாளிகளுக்கு மொத்தம் 30 கோடி பவுன் லாபம் கிடைத்திருக்கிறதாம். அதாவது வருஷந்தோறும் சராசரி போட்டிருக்கும் மூலதனத்தில் 100-க்கு 90 வீதம் ஆதாயம் கிடைத்திருக்கிறது. இந்நிலைமையில் பிரிட்டிஷ் முதலாளிகள் தங்கள் மூலதனத்தை இந்தியாவைப்போன்ற நாடுகளில் போட விரும்புவது வியப்பன்றே! பம்பாயிலுள்ள பருத்தி ஆலைகளில் சிலவற்றைப் பிரிட்டிஷ் முதலாளிகள் வாங்கிவிடப் போவதாயும் வதந்தி உலாவுகிறது. எனவே ஏழை இந்தியர் தலைமீது ஒன்றின்மீது ஒன்றாய் விபத்துகள் சுமந்து வருகின்றன.

மகாகனம் சாஸ்திரியார்

இராஜப்பிரதிநிதியின் சொற்பொழிவின்மீது மகாகனம் பொருந்திய ஸ்ரீமான் வி. எஸ். சீனிவாச சாஸ்திரியார் எழுதியுள்ள கட்டுரையின் ஒரு பகுதியை மற்றொரு பத்தியில் வெளியிட்டிருக்கிறோம். அதைப்படித்து வருகையில் நமது உள்ளத்தில் உவகை பொங்கிற்று. ஏது? ஸ்ரீமான் சாஸ்திரியார் ஒத்துழையாதாராகி விட்டாராஎன்ன? என்றுஇறும்பூது எய்தினோம். ஆனால் நமது மகிழ்ச்சி நீடித்திருக்கவில்லை. மொழிகள் கடுமையாயிருப்பினும், ஊடுருவி நிற்பது மிதவாத மனப்பான்மையே என்பது முடிவில் நன்கு விளங்கிவிட்டது. ஒத்துழையாமை இயக்கம் வீறுகொண்டு நின்றகாலத்தில் அரசாங்கத்தார் ஜனங்களிடம் உறவு கொண்டாடினார்களென்றும், நமது இலட்சியம் நிறைவேறுந் தறுவாயிலிருந்ததென்றும், ஒத்துழையாமை அடங்கியதும் அதிகாரவர்க்கத்தார் மீண்டும் பழையபடி ஜனங்களின் கோரிக்கைகளை அலட்சியம் செய்யலாயினர் என்றும் அவர் கூறுகிறார். எனவே, அத்தகைய ஒத்துழையாமையை ஒடுக்குவதற்குத் தாமும் தமது மிதவாத நண்பர்களும் துணை செய்ததின் பொருட்டு அவர் கழிவிரக்கங்காட்டி ஒத்துழையாமையே உறுதியான மார்க்கம் என்று வலியுறுத்துவாரென நாம் எதிர் பார்த்தோம். ஆனால் பேரறிவினராகிய ஸ்ரீமான் சீநிவாச சாஸ்திரியார் இதற்கு நேர்மாறான முடிவுக்கு வந்துள்ளார். “ஒத்துழையாமை இயக்கத்தினால் அரசாங்கத்தார் பணிந்து வந்தனர். அவ்வியக்கம் நின்றதும் அவர்கள் மீண்டும் இறுமாந்தனர். சுயராஜ்யக் கட்சியின் முறை அறிவீனமானது; பயனற்றது. ஆதலின்சட்ட அமைப்புக்குட்பட்ட முறையில் அரசாங்கத்தை எதிர்க்கவேண்டும்” என்பது சாஸ்திரியாரின்நேர்மையான வாதம்! கண்ணிருந்தும் குருடர்களாயிருப்போரின் கூட்டத்தில் ஸ்ரீமான் சாஸ்திரியாரைச் சேர்க்க வேண்டியிருப்பது குறித்துப் பெரிதும் வருந்துகிறோம்.

நம்பிக்கையான நிலைமை

இறுதியாக வந்த செய்தியின்படி, ஸ்ரீமான் ஆண்ட்ரூஸ் தென்னாப்பிரிக்கா நிலைமையில் குறிப்பிடத்தக்க மாறுதல் தோன்றியிருக்கிறதென்றும், ஆசியாக்காரரை ஒதுக்கும் மசோதா முழுதும் புனராலோசனை செய்யப்படும் பொருட்டு ஒத்திவைக்கப்படலாமென்றும் கூறியதாகத்தெரிகிறது. பாடிஸன் தூதுக்கூட்டத்தின் வேலையைப்பற்றியும் அவர் ஒரு நன்மொழி கூறியிருக்கிறார். தென்னாப்பிரிக்கா தொழிற் கட்சியின் பொதுச்சபையார் இம்மசோதா விஷயமாக ஸ்ரீமான் ஆண்ட்ரூஸுடன் கலந்து ஆலோசிக்கத் தீர்மானித்திருப்பது ஒரு நற்சகுனமாகும். அகிலஇந்திய தொழிலாளர் காங்கிரஸின் பிரதிநிதி என்ற முறையில் ஸ்ரீமான் ஆண்ட்ரூஸுடன் கலந்து ஆலோசிக்க அவர்கள் இசைந்தனர். எனவே, இந்தியத் தொழிலாளரின் தீர்மானம் இவ்வளவேனும் பயன் பட்டிருப்பது குறித்துமகிழ்ச்சியடைகிறோம். இந்தியா முழுவதிலுமுள்ள புரோடஸ்டண்டு கிறிஸ்துவர்களின் தலைமைக்குருவான கல்கத்தா பிஷப் இம்மாதம் 3உ நடந்த ஒரு பொதுக்கூட்டத்தில் தென்னாப்பிரிக்கா இந்தியர்கட்சியைப் பலமாக ஆதரித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. இக்காலத்தில் மேனாட்டாரிடம் உண்மைக் கிறிஸ்துவச் செயல்களைக்காண்பது அரிதாயிருத்தலின், இவரைப் போன்றாரின் செயல்கள் நமக்குப்பெரும் ஆறுதல் தருகின்றன.

இந்திய சட்டசபை

இராஜப்பிரதிநிதியின் விவசாயச்சொற்பொழிவுடன் ஆரம்பமான இந்திய சட்டசபையின் கூட்டம்நடைபெற்று வருகிறது. வழக்கம்போல் கேள்விகள் ஏராளமாகக் கேட்கப்படுகின்றன. முறையான விடைகள் மட்டும் கிடைப்பதில்லை. லோகார்னோ உடன்படிக்கையைப் பற்றி எழுப்பப்பட்ட வினாக்களுக்கு, இவ்விஷயம் அந்நியநாட்டுச் சம்பந்தத்தைப் பொறுத்தது என்று பதில் சொல்லப்பட்டது. ரயில்வே வரவுசெலவு கமிஷனர் வேலைக்கும், விளம்பர இலாகாத்தலைவர் வேலைக்கும், வெள்ளைக்காரர்கள் நியமிக்கப்பட்டதைப்பற்றிப் பல கேள்விகள் பிறந்தன. இப்பதவிகளுக்கு இந்தியர் நியமிக்கப்பட்டு விட்டால் பெரும்பயன்விளைந்து விடுமென்று நாம் கருதவில்லை. எனினும், “இப்பதவிகளுக்குத் தகுதிவாய்ந்த இந்தியர்கள் கிடைக்கவில்லை!” என்ற விடையை அரசாங்கத்தாரிடமிருந்து பறிக்கச் சாதனமாயிருந்தவளவுக்கு இக்கேள்விகள் பயனுடையனவே.

பாதிச்சம்பளம்

அரசாங்கத்தாரால் கொண்டு வரப்பட்ட மசோதாக்களில் தொழிற்சங்க மசோதாவையும், தீர்மானங்களுள் இங்கிலாந்திலுள்ள பிரிவி கௌன்சில் நீதிபதிகள் இருவருக்குப் பாதிச்சம்பளம் இந்தியா பொறுக்கவேண்டுமென்ற தீர்மானத்தையும் சிறப்பாகக் குறிப்பிடவேண்டும். தொழிற்சங்க மசோதாவைப் பற்றி மற்றொரு பத்தியில் எழுதியிருக்கிறோம். தீர்மானத்தை இந்திய சட்டசபை பெரும்பான்மைவாக்குகளால் நிராகரித்தது பாராட்டத்தக்கதாகும். இந்தியாவிலுள்ள ஹைகோர்ட்டுகளின் தீர்ப்பின்மீது இங்கிலாந்திலுள்ள பிரிவிகௌன்சிலுக்கு அப்பீல் செய்து கொள்ளலாமென்பது நேயர்கள் அறிந்ததே. இவ்வாறு நாடு கடந்து நீதிக்காகச் செல்வது தகுந்த முறையன்றென்றும், இதனால், ஏராளமான பணச்செலவு நேரிடுகிறதென்றும், இந்தியாவிலேயே ஒரு ஸுப்ரீம் கோர்ட் நிறுவப் பெறுதல் வேண்டுமென்றும் தேசத்தில் பலமான அபிப்பிராயம் ஒன்று இருந்து வருகிறது. இந்நிலைமையில் இந்திய அநுபவம் படைத்த இரண்டு நீதிபதிகளுக்குப் பாதிச் சம்பளம் கொடுப்பதற்காக வருஷத்துக்கு 4000 பவுன் கேட்க அரசாங்கத்தார் முன் வந்தனர். இந்தியாவினால் கிரேட்பிரிட்டன் பல வழிகளிலும் நலம்பெற்று வருவது ஒருபுறமிருக்க, பிரிவி கௌன்சில் அப்பீல்களுக்காகவும் இந்தியாவின் பணம் இங்கிலாந்தில் ஏராளமாகச் செலவுசெய்யப்பட்டு வருகிறது. இங்ஙனமிருந்தும், இந்திய வழக்குகளை விசாரிப்பதற்காக, இந்தியர் பாதிச் சம்பளம் கொடுக்க வேண்டுமென்று பிரிட்டிஷ் அரசாங்கத்தார் கேட்க முன்வந்தது நமக்கே அவமானமாயிருக்கிறது. இத்தீர்மானத்தைநிராகரித்ததில்,இந்தியரின் நலத்தையும்,பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கௌரவத்தையும் ஒருங்கே காக்க இந்தியா சட்டசபை முயன்றிருக்கிறது.

இரு தீர்மானங்கள்

ஜனப்பிரதிநிதிகளால் கொண்டுவரப்பட்ட தீர்மானங்களில் இரண்டு குறிப்பிடத்தக்கவை. ஒன்று அரசியல்கைதிகளின் விடுதலையைப்பற்றியது. இத்தகைய தீர்மானம் வருஷந்தோறும் நிறைவேறுவது ஒரு சம்பிரதாயமாகி விட்டது. ஆனால் இம்முறை அரசியல் கைதிகள் எல்லாரையும்என்பதற்குப் பதிலாக, விசாரணையின்றிச் சிறையில் வைக்கப்பட்டிருப்பவர்களை விடுதலை செய்யவேண்டுமென்றே கேட்கப்பட்டது. இஃது ஒரு மிதவாதத் தீர்மானம் என்பது நமது கருத்து. பிப்ரவரி மாத இறுதியில் சட்டசபையை விட்டு வெளிவருமுன் “கிடைத்தவரை பார்க்கலாமே” என்று சுயராஜ்யக்கட்சி அங்கத்தினர் கருதுகின்றனர் போலும்! இந்த மிதவாதத்தீர்மானத்துக்கும் அரசாங்கம் இணங்காதது குறிப்பிடத்தக்கது.மற்றொரு தீர்மானம் வேலையில்லாத்தொல்லையைப் பற்றியது.படித்தவகுப்பினரின் வேலையில்லாத் திண்டாட்டத்தைப்பற்றி ஸ்ரீமான் அரங்கசுவாமி ஐயங்கார் கொண்டுவந்த தீர்மானத்தின்மீது, படித்தவர் படியாதவர் எல்லாரிடையேயும்உள்ள வேலையில்லாத் தொல்லையைப்பற்றி விசாரிக்க ஒரு கமிட்டி நியமிக்கவேண்டுமென்று லாலாலஜபதிராய் கொண்டுவந்த திருத்தப்பிரேரபணை நிறைவேறியது. இத்தீர்மானத்துக்கிணங்க ஒரு கமிட்டி நியமிக்கப்படுமாவென்பது ஐயத்துக்கிடமானது. அவ்வாறு நியமிக்கப்படினும் பயன் எதுவும் விளையாதென்பதுநமது கருத்து. வேலையில்லாத் தொல்லை நீங்கச் சுயராஜ்யம் ஒன்றே வழி.

மகாத்மாவின் ஆசி

தமிழ்நாட்டார் பூரண மதுவிலக்குத் திட்டத்தை ஏற்றுக்கொண்டது குறித்து மகாத்மா காந்தி மகிழ்ச்சியுடன் ஆசிகூறியுள்ளார். “சென்னை சுயராஜ்யக் கட்சியார் தங்கள் திட்டத்தில் பூரண மதுவிலக்கை ஏற்றுக்கொண்டிருப்பதுகுறித்து ஏழைகளின் நண்பர்கள் அனைவரும் அவர்களுக்கு வாழ்த்துக் கூறக்கடமைப் பட்டிருக்கிறார்கள்.” என்று அடிகள் இவ்வாரம் வெளிப்போந்த “எங் இந்தியா”வில் எழுதியுள்ளார். சுயராஜ்யக்கட்சி இதுபோழ்து காங்கிரஸில் ஒன்றி விட்டபடியால் இரண்டுக்கும் வேற்றுமை பாராட்டாது “சுயராஜ்யக் கட்சி”க்கு அடிகள் ஆசி கூறினர் போலும்! உண்மையில், சென்னைச் சுயராஜ்யக்கட்சிக் கூட்டத்தில் மதுவிலக்கு விஷயம் ஆலோசனைக்கு வந்ததாகவே தெரியவில்லை. தமிழ்நாட்டுக் காங்கிரஸ் காரியக் கமிட்டியாரே பூரண மதுவிலக்குத் திட்டத்தை ஏற்றுத் தங்கள் தேர்தல் விண்ணப்பத்திலும் உறுதி கூறியிருக்கிறார்கள். இக்கமிட்டியில் சுயராஜ்யக் கட்சியின ரல்லாதவர்களும் இருக்கிறார்கள் என்று நாம் சொல்லவேண்டுவதில்லை.

யுத்தமும் பாமர ஜனங்களும்

அட்லாண்டிக் சமுத்திரத்தில் சமீபத்தில் ஏற்பட்ட பெரும் புயற்காற்றில் அகப்பட்டு இரண்டு பிரிட்டிஷ் கப்பல்கள் முழ்கிப் போயின. இவற்றுள் ''லாரிஸ்டான்'' என்னுங் கப்பலின் மாலுமிகளைக் காப்பாற்ற ''பிரிமன்'' என்னும் ஜெர்மானியக் கப்பல் அரும்பாடுபட்டுக் கடைசியில் ஆறு பேரை மட்டும் காப்பாற்றியது. ''ஆண்டினே'' என்னும் மற்ருெரு கப்பலின் மாலுமிகள் எல்லாரையும் ''ரூஸ்வெல்ட்'' என்னும் அமெரிக்கக் கப்பல் காப்பாற்றியது. ''ரூஸ்வெல்ட்'' கப்பலின் திரச்செயலைப்பற்றிப் பத்திபத்தியாக விவரங்கள் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. இக்கப்பல் ''ஆண்டினே''வின் மாலுமிகளைக் காப்பாற்றுவதற்காக மூன்றரை நாட்கள் 70 அடி உயரம்வரை எழும்பிய அலைகளுக்கிடையே ஊசலாடிக்கொண்டு காத்திருந்ததாம். இக்கப்பல்களின் மாலுமிகளில் இருவர் ''ஆண்டினே'' மாலுமிகளை மீட்கும் முயற்சியில் உயிர் துறந்தனர். இவ்விருவரில் கிட்மான் என்பவர் ஜெர்மனியர் என்றும், மீட்கும் தோண்டுக்கு முதன் முதலாக முன்வந்தவர் அவரே என்றும் தெரியவருகிறது. இவ்வாறு ஒரு ஜெர்மானியக் கப்பலும், ஜெர்மானியர் ஒருவரும் பிரிட்டிஷ் மாலுமிகளைக் காக்க முன்வந்த செய்தி, சிலவாண்டுகளுக்கு முன் மகாயுத்தத்தின்போது பிரிட்டிஷாருக்கும் ஜெர்மானியருக்குமிடையே யிருந்த பகைமையையும், ஒருவருக்கொருவர் செய்த கொடுமைகளையும் நமக்கு நினைவூட்டுகிறது. மக்கள் ஒருவரோடொருவர் அன்புபூண்டு இன்புறுவதும், ஆபத்தில் துணைபுரிந்து மகிழ்வதுமே இயற்கைவாழ்க்கை. இறைவனின் திருவுள்ளம் அதுவே. மக்களில் பெரும்பான்மையோரும் இத்தகைய வாழ்க்கை நடாத்தவே விரும்புகின்றனர். ஆனால் உலகில் இராஜதந்திரிகள் என்று சொல்லப்படுவோர் சிலர் சேர்ந்து, யுத்தங்களையும், கொலைகளையும், மற்றும் பல கொடுமைகளையும் விளைத்தும் மக்களைப் பேய்களாக்கி, உலக வாழ்வை நரகவாழ்வாக்கி விடுகின்றனர். இராஜதந்திரிகளின் கூட்டம் அழியுங்காலமே உலகுக்கு நற்காலமெனக் கூறலாம்.

ஆசிரியர் ஹோம்ஸின் விஜயம்

கான்பூர் காங்கிரஸுக்கு விஜயம் செய்திருந்த ஆசிரியர் ஹோம்ஸ் என்னும் அமெரிக்கர் இவ்வாரத்தில் சென்னை போந்திருந்தார். இவர் அமெரிக்காவின் கலாசாலை யொன்றில் தத்துவ போதகாசிரியர். ''யூனிடி'' பத்திரிகையின் கூட்டுப் பத்திராதிபருமாவார். உலக சமாதான இயக்கத்துக்காக உழைக்கும் பிரபல அமெரிக்கர்களில் இவரும் ஒருவர். சென்னையில் அஸோஸியேடட்பிரஸ் நிருபர் இவரைக் கண்டு பேசியபோது, காங்கிரஸ் மகாசபை அத்தனை அமைதியாகவும், ஒழுங்குடனும் நடைபெற்றது தமக்கு வியப்பை யளித்ததென்றும், அமெரிக்காவில் இத்துணைப் பெரிய கூட்டம், பலமான போலீஸ் படையின் உதவியின்றி நடைபெறுதென்றும் தெரிவித்தாராம். வாக்குவன்மை, விவாத சாமர்த்தியம், பெருங் கூட்டங்களை அமைதியாகவும் ஒழுங்காகவும் நடத்தும் திறன் ஆகிய இவை சுயராஜ்யத்துக்கு ஒரு நாட்டின் தகுதியை நிர்ணயிக்க வல்லனவாயின், இந்தியர் சுயராஜ்யத்துக்கு முற்றிலும் தகுதிபடைத்தவர் என்பதில் ஐயமில்லை. மேற்சொன்ன திறமைகள் இந்தியரிடம் உண்டென்பதற்கு இவருக்கு முன் இன்னும் பல ஐரோப்பியரும் அத்தாட்சி கூறியுள்ளார்.

வறுமையும் செல்வமும்

மற்றும், ஆசிரியர் ஹோம்ஸ் காந்தியடிகளைப் பார்க்கும் பேறு கிடைத்தது குறித்து மகிழ்ச்சி தெரிவித்திருக்கிறார். இந்தியாவின் வறுமை நிலையைக் குறித்து அவர் கூறும் மொழிகள் நம்மால் ஊன்றிக் கவனிக்கப்படற்பாலன.

''இந்தியாவில் அமெரிக்கர் ஒருவருக்கு முதன்மையாகப் புலப்படுவது யாதெனில் இந்நாட்டில் எங்கும் குடிகொண்டிருக்கும் வறுமையே. அதிலும், வெளிநாட்டார் உள்ளிட்ட செல்வர் சிலர் மட்டும் மிதமிஞ்சிய சுகபோகத்தில் புரள்வதால், பெரும்பான்மையோரின் வறுமைக் கொடுமை நன்கு எடுத்துக் காட்டப் பெறுகிறது''

என்று அவர் சொன்னார். வெளி நாட்டிலிருந்து அதிகாரவர்க்க விருந்தினராய் இந்நாட்டுக்கு வருவோர் காணும் காட்சிக்கும், ஜனங்களின் விருந்தினராய் வந்து செல்வோருக்குப் புலப்படும் தோற்றத்துக்கும் உள்ள வேற்றுமை இதிலிருந்து நேயர்களுக்கு நன்கு புலனாகும். சமீபத்தில் பெல்ஜியம் மன்னர் அதிகாரவர்க்கத்தினரின் விருந்தினராக இந்தியா போந்திருந்தார். இவருடைய உபசரணைக்காக அரசாங்கத்தார் ரூ 90,000 செலவு செய்தனர். இவ்வாறு தமக்கு இராஜோபசாரம் நடக்கும் நாட்டில் ஜனங்கள் சோறின்றிப் பட்டினி கிடக்கிருர்கள் என்பதை அம்மன்னர் எவ்வாறு நம்புவார்? எனவே, இந்தியாவில் வளம் கொழிக்கிறதென்றும், அதிகாரவர்க்க ஆட்சி செவ்வனே நடைபெறுகிற தென்றும் அத்தாட்சிப் பத்திரம் கொடுத்துவிட்டு அவர் போய்ச் சேர்ந்தார். ஆனால் ஆசிரியர் ஹோம்ஸ், பாவம், அதிகாரவர்க்கத்தவரின் விருந்தினராக வரும் பேறு பெற்ருரில்லை. அப்பேற்றை அவர் விழையவும் இல்லை. ஆதலின், கோடிக் கணக்கான மக்கள் கொடிய வறுமைக்குழியில் விழ்ந்து அல்லலுறுவதும், வெளிநாட்டார் உள்ளிட்ட ஒரு சில செல்வர் களியாட்டயர்ந்து கிடப்பதும் அவரது கண்களுக்குப் புலனுகின்றன.

கலம்பகம்

ஜப்பான் பிரதம மந்திரி வைகவுண்ட்காடோ காலஞ்சென்ருர்.

* * *

மகாத்மா உடல் நலம்பெற அடுத்தமாதம் மலைவாசம் செய்யப் போகிருராம்.

* * *

வயித்தியசாலைத் தாதிகள் அமைப்புக்குக் கல்கத்தா நகரசபை 18,000 ரூபா அநுமதித்திருக்கிறது.

* * *

பார்லிமெண்டின் லிபரல் கட்சித் தலைவராக மீண்டும் லாயிட்ஜார்ஜ் தெரிந்தெடுக்கப் பட்டிருக்கிருர்.

* * *

ஹைதராபாத்தில் பிளேக் நோய் கடுமையாகப் பரவிவருகிறதாம். இம்முறை இதனுல் இதுவரை 1,127 பேர் இறந்தனராம்.

* * *

இரங்கூனில் ஓர் எண்ணெய் ஆலையில் தீ மூண்டு அது இருந்தகட்டடமும்சாமான்களும் சாம்பராயின. ஐந்து லட்சரூபா நட்டமாம்.

* * *

சென்ற வாரம் பெருமழை பெய்து கெடில நதியில் வெள்ளம் புரண்டோடியது ; இது திருப்பாப்புலியூர் செல்ல வழியில்லாமலும் செய்துவிட்டது.

* * *

சீனாவில் மீண்டும் உள்நாட்டுக் குழப்பமுண்டா யிருக்கிறது. ஊபெய் பூவுக்கும் ஹோனுன் ராணுவ கவர்னருக்கும் கடும் போர் நிகழ்ந்து வருகிறது.

* * *

சென்னைக்கும் செங்கற்பட்டுக்கும் இரட்டை ரயில்பாதை போடும் முயற்சி துரிதப்படுத்தப் படுத்தப் பட்டு வருகிறது. 1927-ல் வேலை முடிவு பெறலாமாம்.

* * *

மௌலானு ஷவுகதலியும் மௌலானு அபுல் கலாம் அஸாத்தும் இரங்கூன், பர்மா முதலிய விடங்களில் யாத்திரை புரிந்து பிரசாரஞ் செய்து வருகின்றனர்.

* * *

சென்னைச் சட்டசபைக்குத் தென்கன்னடம் ஜில்லாவில் நடந்த உபதேர்தலில் சுயராஜ்யக்கட்சியைச்சேர்ந்த ஸ்ரீமான் நாகண்ண ஹெக்டே தெரிந்தெடுக்கப்பட்டார்.

* * *

மத்திய மாகாணத்தில் மாறுதல் வேண்டாக் கட்சியைச் சார்ந்த சேத்ஜம்னுலால் பஜாஜ் தேர்தலில் சுயராஜ்யக் கட்சி அபேட்சகர்களுக்குப் பேராதரவு கொடுத்து வருகிருர்.

* * *

கள்ளிக்கோட்டையில் கல்லூரி வேலைசெய்திருந்த நான்குபேர்மீது ஒருபெரும் பாறை சரிந்துவிழுந்து ஒருவர் உடனே உயிர் துறந்தார்; மூவர் கடுமையான காயமுற்றனர்.

* * *

லாகூரில் ''ரியாஸத்'' எனும் பத்திரிகையில் விரும்பத் தகாத இழிந்த விளம்பரம் வெளிவந்தமைக்காக அதைப் பதிப்பித்த அச்சுக்கூடத்தார்க்கு ரூபா 200 அபராதம் விதிக்கப்பட்டது.

* * *

பிஜித்தீவிலிருந்து ஒரு கப்பலில் 1,187 இந்தியக் கூலிகள் புறப்பட்டு வருகிருர்கள். இவர்களில் 487 பேர் சென்னை மாகாணத்தவர். இக்கப்பல் இம்மாதம் 17-ந்தேதி கல்கத்தா வந்து சேரும்.

* * *

யுத்தத்தில் வேலைசெய்த 10,50,000 பேர் இங்கிலாந்தில் உபகாரசம்பளம் பெற்று வருகிருர்கள். இதற்காக வருடத்தில் 7 கோடி பவுன் செலவழிகிறது. 1917 முதல்இதுவரை இதற்காக 60 கோடிபவுன் செலவழிந்திருக்கிறது.

* * *

இங்கிலாந்தில் மிடில்ஸ்பரோவில் நடந்த பாதிரிமார் கூட்டத்தில், பர்ஹாம்பிஷப், ஆசியாவிலும், ஆப்ரிக்காவிலும் இஸ்லாம் மதம் மேலோங்கி வருகிறதென்றும், ஆங்கு கிறிஸ்துவ மதப் பிரசாரம் பலமாகச் செய்யப்பட வேண்டுமென்றும் கூறினர்.

* * *

வேல்ஸ் இளவரசர் ஜனவரி 28உ ஓரிடத்தில் வேட்டையாடுகையில் குதிரைமீதிருந்து கீழே விழுந்தார். கழுத்தெலும்பு முறிந்துவிட்டது. இவ்வாறு இளவரசருக்கு வேட்டையாடும் போது அபாயம் நேரிட்டது இது பதின்மூன்ருவது முறையாம்.

* * *

மகாத்மா காந்தி எழுதிவரும் சுயசரிதை மிகவும் சுவை யுள்ளதாயிருக்கிற தென்றும், அவருடைய அரசியல் செல்வாக்குப் போய் விட்டதாயினும், அவருடைய குணப்பெருமை எப்போதும் மதிக்கப்படுமென்றும் ''மான்செஸ்டர் கார்டியன்'' கூறுகிறது.

* * *

பம்பாய் நகரசபை அங்கத்தவர்தேர்தல் மும்முரமாக நடைபெற்றது. 76 பதவிக்கு 136 அபேட்சகர் நிற்கின்றனர். தேசியக் கட்சிக்கு 45 பேர் நின்றதில் 27 பேர் தெரிந்தெடுக்கப் பட்டனர். ஸ்ரீ ஹாரினிமானும், ஸ்ரீ சரோஜனி தேவியும் தேர்ந்தெடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

* * *

சில பட்டாணியர்கள் பம்பாய் மாதுங்காவிலிருந்து 20வயதுள்ள ஓர் இந்துவைபலிகொடுக்கும் நோக்கத்தோடு பரோடாவுக்குக் களவாடிச் சென்று ஒரு பெரும் மாடி வீட்டில் வைத்தார்களாம். அவர் மாடியிலிருந்து கீழே யிருந்த கோணி மூட்டைகள் மீது குதித்து ஓடி விட்டாராம்.

* * *

கோவை நகர காங்கிரஸ் சபை ஆதரவில் மாணவர் கல்விச் சங்கத்தில் சென்ற 30-ந் தேதி மாலை ஸ்ரீமான் சி. வி. வேங்கடரமண ஐயங்கார் அவர்கள் தலைமையில் ஸ்ரீமான் என். சுப்பிரமணிய அய்யர் அவர்கள் ''கைராட்டினத்தின் கற்பனை'' என்பதைப்பற்றிப் பேசினுர் என ஒரு நிருபர் எழுதுகிருர்.

* * *

விலிங்ஹெத்ஜில்லா மாதப்பூர் தேயிலைத் தோட்ட மானேஜர் அதில் வேலை செய்திருந்தகூலி தாசரதியை உதைத்துக்கொன்ற வழக்கு முன்னம் 200ரூபா அபராத அளவோடு தள்ளப்பட்டது அதுமீண்டும் கல்கத்தா ஹைகோர்ட்டு அப்பீலுக்கு வந்தது. மனேஜர் கைது செய்யப்பட்டு ஜாமீனில் விடப்பட்டிருக்கிருர்.

* * *

ஹாலக்து காட்டிலுள்ள ஒருபாதிரியார் விவிலிய நூல்பழைய ஏற்பாட்டில், ஈடன் தோட்டத்தில் ஈவாளிடம் பாம்பு உண்மையாகவே பேசிற்றுஎன்பதில் சந்தேகங்கொண்டதைப்பற்றி ஒருபெரும் பாதிரிக்கழகத்தில் பலவான விவாதம் நடந்ததாம். அப்போது அக்கழகத்தில் அக்கிராசனம் வகித்தவர் உணர்ச்சி மேலீட்டினுல் கீழேவிழுந்து உயிர் துறந்தாராம்.

* * *

இங்கிலாந்தில் கள், சாராயம்விற்றுப் பெரும் பொருள் படைத்திருந்த மிஸ்டர் எப். என் சாரிங்டன் என்பார், உணவுக்குப் பொருள் கேட்ட தன் மனைவியையும் குழந்தையையும் ஒருகுடியன் தம் கடைமுன்னிருந்த சாக்கடையில் உதைத்துத் தள்ளியதை நேரில் கண்டபிறகு தமது மதுக்கடைகளை எடுத்துவிட்டு அதனுல் சம்பாதித்த பெரும் பொருளையும் தியாகம் செய்துவிட்டாராம்.

* * *

சென்ற 25-26-27 தேதிகளில் பெய்த மழை (கடிலம்) கருடாநதி உற்பத்தி ஸ்தானமாகிய—மையனூர் ஏரியிலிருந்து அதற்கு நேர் எதிரிலுள்ள இரண்டு மூன்று ஏரிகள் ஒவ்வொன்றும் நாலைந்து இடங்களில் உடைத்துக்கொண்டு நெற்பயிர் விளைச்சல் முதலியவைகளை மண்ணுல் மறைத்தும் தண்ணீரால் குத்திப்பெயர்த்தும் பலவித நஷ்டங்கள் செய்திருக்கிறது என ஸ்ரீ ஈ. ஹரிசிங் எழுதுகிருர்.

* * *

பாவ்லா கொலை வழக்கில் இந்தூர் மகாராஜாவின் சம்பந்தத்தைப்பற்றி விசாரிப்பதற்காக இராஜப்பிரதிநிதி ஒரு தனிக்கமிஷன் நியமித்து விசாரணைபுரிய ஏற்பாடு செய்திருக்கிருர். இது இந்தூர் சமஸ்தானத்து ஜனங்களிடைப் பெரும் கொதிப்பையும் பரபரப்பையும் உண்டாக்கியிருக்கிறது. விசாரணை தொடங்குவதற்கு முன் மகாராஜா தம் பதவியைவிட்டு நீங்கிவிடலாமென்றும் வதந்தி உலாவுகிறது.

* * *

காஞ்சிபுரம் ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமி உற்சவப் பொருள் சகாயத்தின் பொருட்டு 1926ஹு பிப்ரவரிமீ 7உ ஞாயிற்றுக்கிழமை மாலை 4-25 மணிக்கு கோகலே ஹாலில் சங்கீதக் கச்சேரி நடைபெறும். ஸ்ரீமான்கள் காஞ்சிபுரம் நாயனு என வழங்கும் சுப்பிரமண்ய பிள்ளை—பாட்டு, திருச்சி கோவிந்தசாமி பிள்ளை—பிடில், புதுக்கோட்டை தக்ஷிணமூர்த்தி பிள்ளை—கஞ்சீரா, கும்பகோணம் அளகநம்பி பிள்ளை—மிருதங்கம், உமையாள்புரம் சுந்தரய்யர்—கடம்.

* * *

மோகனூர் ஸ்ரீ பாரத புத்ர சன்மார்க்க சமரஸ தமிழ்ச் சங்கத்து 10-வது வாராந்தக் கூட்டம் 31-1-26-ல் கூட்டப்பட்டது. ஸ்ரீமான் காபா. மீனுட்சி சுந்தரம் செட்டியார் அவர்களின் தலைமையின்கீழ் ஸ்ரீமான்கள் P. இராஜ மாணிக்கம் செட்டியார், B. வேங்கடேச செட்டியார், கௌஸ மைதீன் சாகிப் ஆகியவர்கள் ''இஸ்லாம்'' என்ற விஷயத்தைப் பற்றிப் பேசினுர்கள். தலைவர் ''இல்லறம்'' என்பது பற்றிப் பேசினுர் என ஒருவர் எழுதுகிருர்.

* * *

நாகை தேசபக்த சமாஜம்:— சென்ற 26-1-26 மாலை 6-மணிக்கு ஷிசமாஜ புதுக்கட்டடத்தில் நடைபெற்ற சமாஜ அங்கத்தினர்களின் பொதுக் கூட்டத்தில் நாளது குரோதனஹு மாசிமீ 23,24உ களுக்குச் சரியான 6,7-3-26 சனி ஞாயிறு தினங்களில் ஷிசமாஜ ஐந்தாம் ஆண்டு நிறைவு விழாவை ஸ்ரீமான் டாக்டர் வரதராஜுலு நாயுடு அவர்கள் தலைமையின் கீழ் நடத்துவதாகத்தீர்மானிக்கப் பட்டதென ஷி சமாஜக்காரியதரிசி அறிவிக்கிருர்.

* * *

பார்க்கவர் மகாநாடு :—மாகாணபார்க்கவர் பன்னிரண்டாவது மஹாநாடு கும்பகோணத்தில் அக்ஷய ஆண்டு சித்திரைத்திங்கள் நடைபெறும். குலமுன்னேற்றத்தில் ஆர்வங்கொண்டஅபிமானிகள் எனது விலாசத்திற்கேனும் திருவாளர். சா. முத்துக்குமார உடையார் அவர்கள், பார்க்கவர் மகாநாட்டு உபசரணைச்சபைக் காரியதரிசி வில்வாரணல்லூர் கும்பகோணம் என்ற விலாசத்திற்கேனும் உடனே எழுதி விவரமறிந்து கொள்ளலாம் என்று திருச்சி, பொன்மலை ''தெய்வீகன்'' ஆசிரியர் மே. வே. துரைசாமி உடையார் எழுதுகிருர்.

* * *

ஸ்ரீ சிதம்பர பொன்னம்பல சுவாமிகள் மடம்:—சிதம்பரம் ஸ்ரீ பொன்னம்பலஸ்வாமிகள் மடத்தில் அதிபதியாயிருந்து காலஞ்சென்ற ஸ்ரீ காசிவாசி சிதம்பரஸ்வாமிகட்கு நாளது தைமீ 13உ வருடக்குரு பூஜை விழா நிறைவேறியது. அநேக சாதுக்களும் மடாதிபதிகளும் வந்திருந்தனர். அன்றிரவு மேற்படி மடத்தில் தலைமை வஹிக்கும் ஸ்ரீபரஞ்ஜோதி சுவாமிகளால் சம்பிரதாயப்படி சிவவண்ண போதம் என்னும் வேதாந்த நூல்பாட்டுஞ் சொல்லப்பெற்று, வந்திருந்த அனைவர்க்கும் ''ததாராடை'' யுதவப் பெற்றதென ஒரு நிருபர் தெரிவிக்கிருர்.

* * *

தமிழ் என்பதுபற்றி, சுருதி, யுக்தி அநுபவங்கட்கேற்ப, தெளிவாய், மைகொண்டு ஒரே பக்கத்தில் ஒரு கட்டுரை எழுதி அனுப்புவோர்க்கு ஒரு பொற்காசு (பவுன்) இனம். குரோதன வருடம் மாசித்திங்கள் 15உ க்குள் கட்டுரைகள் சங்கத்திற்கு வந்து சேர்தலிடுமாறு செய்யவேண்டும். கட்டுரைகளின் சகல உரிமையும் சங்கத்திற்கே உரித்தாகும். திரு. வீ. மு. பொன்னையா, ''கற்போதக சங்க''த் தலைவர், அழகாடி, மதுரை என்ற விலாசத்திற்கு அனுப்பப்பெறல் வேண்டும். கட்டுரையுடன் இரண்டணு தபால்தலைஅனுப்பிச் சங்க உறுப்பினராகிக் கொள்ளல் வேண்டும் என்று மேற்படி சங்கக் காரியதரிசி எழுதுகிருர்.

* * *

இராயப்பேட்டை வரிசெலுத்துவோர் சங்கம்:— இச்சங்கத்தின் ஆதரவில் பிப்ரவரி 3உ புதன்கிழமை மாலை இராயப்பேட்டை முத்துமுதலிதெருவில் ஸ்ரீமான் துரைசாமி முதலியாரின் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. இராயப்பேட்டை கடைக்காரர்கள் செய்விற்பதற்காக அவர்களுக்கு நகரசபையார் நோடீஸ் கொடுத்திருப்பதைக் கண்டித்தும், அம்மன்கோயில் தெருவின் தெற்குப் பாகத்தைச்சரியாகச் செப்பனிட வேண்டுமென்றும், சென்னைக்கு வரும் பிரயாணிகளுக்கு வரி விதிக்கவேண்டுமென்ற நகரசபைத் தீர்மானத்தைக் கண்டித்தும், கமிஷனரிடத்தில் நம்பிக்கை தெரிவித்தும் தீர்மானங்கள் நிறைவேறின.

* * *

நாடக கண்டிராக்டர்களும் நடிகர்களும்:— நாடக நடிகர் ஸ்ரீமான் V. V. பக்கிரிசாமி பிள்ளை டிசம்பர் மாதம் 4-ந் தேதி திங்கட்கிழமை பரலோக பிராப்தி யடைந்தார். தெரிவிக்கவேண்டிய ஜனங்களுக்கும் விசேஷமாய் அவரை இலங்கைக்கு அழைத்துக்கொண்டு வந்த முன், பின், அவருக்குப் பணங் கொடுக்கவேண்டிய ஏஜண்டுகளுக்கும் தெரிவித்தோம். ஆனால் இந்தக் கடன்காரர்களில் ஒரு வாரிலும் முன்னுக்கு வந்து அந்திக்கிரியை செய்வோம் என்ருவது, பணங் கொடுக்கவாவது இல்லை; சாவுக்கும் வரவில்லை. தேசத்தொண்டரும் காந்தி அடிகளின் பக்தருமாகிய ஸ்ரீமான் எஸ். எஸ். விஸ்நாத தாஸ் அவர்கள் நன்முயற்சியால் மாதம்பிட்டி என்ற கல்லறைப்பூங்காவனத்தில் அடக்கம் பண்ணப்பட்டது. நமதுஇந்தியநாடக சகோதரர்கள் இலங்கைக்குவருமுன்எச்சரிக்கை செய்துவிட்டு வரவேண்டுமென்று வற்புறுத்துகிறேன். ஸ்ரீ பக்கிரிசாமியைப்போல் எத்தனை பேர் உழைத்த ஊதியம் பெருமல் போயிருப்பார்களென்பதை ஊகித்துப்பாருங்கள். பிழைக்க வந்த விடத்தில் ஏமாற்றும் கண்டிராக்டர்களின் சூழ்ச்சியில் இனியேனும் நடிகர்கள் அகப்பட்டுக் கொள்ளாமலிருக்கவேண்டும் என்று காந்தி சங்கக் காரியதரிசி ஜே. பி. கிறிஸ்டியன் எழுதுகிருர்.

ரயில்வே வரவுசெலவு கமிஷனராயிருந்து விலகிய மிஸ்டர் விம் என்பவரின் ஸ்தானத்துக்கு, மிஸ்டர் பார்ஸன்ஸ் என்னும் ஆங்கிலேயரையும், விளம்பர இலாகாத்தலைவராயிருந்த டாக்டர் ரஷ்புருக் வில்லியம் வின் பதவிக்கு, பஞ்சாபில் சி. ஐ. டி உத்தியோகஸ்தராயிருந்த மிஸ்டர் கோட்மானையும் அரசாங்கத்தார் நியமித்திருக்கிருர்கள்.

* * *

இங்கிலாந்தில் ஒரு மாது தமது மரண சாசனத்தில் தம்மால் வளர்க்கப்பட்ட பூனைகளின் வளர்ச்சிக்கு 500 பவுனும் ஆதரவற்ற பூனைகளுக்கு 500 பவுனும் ஒதுக்கி வைத்தாள்.

தீண்டாமை

மயிலை ஸ்ரீமான் இரத்தின சபாபதி முதலியார் எழுதுவது

எந்நாட்டிலும் சிறந்த நன்னுகரிகம் நம்முடைய பழைய பாரத நாடு, ஜப்பான், அமெரிக்கா, ஐரோப்பா முதலிய தேசங்களைப் போல் தலைநிமிர்ந்து, உயிருடன்வாழ வேண்டுமாயின் தீண்டாமை யென்னும் கொடிய வியாதியை அறவே ஒழிக்க முயல்வது சிறந்த பணியும் கற்ருேர் கடமையுமாகும். ஆசாரங்களும், பழக்க வழக்கங்களும் காலத்திற்கேற்றவாறு மாறவதியல்பு. வடமொழியிலுள்ள தர்ம சாஸ்திரங்களை ஆழ்ந்து ஆராய்ந்து பார்க்கில், எண்ணில் வித்தியாசங்களும், அபிப்பிராய பேதங்களும் காணப்படுவதோடு, காலதர்மத்தை அனுசரித்து, ஆசாரங்களும், பழக்க வழக்கங்களும் மாறுபாடுற்றிருப்பது விளங்கும். இது நிற்க. குறித்த ஒரு வகுப்பினரைத் தீண்டாதாரென்று பாகுபாடு செய்து முத்திரையிட்டுத்தனியாய் எல்லைக்கல் நாட்டியிருப்பதாகவும் தெரியவில்லை. பயமும், தண்டனையும் பாவத்தைப் போக்குவதாகத் தெரியவில்லை. வடமொழி, தென்மொழி, ஆரியன், திராவிடனென்னும் வீண் வாதத்தை மறந்து ''ஒழுக்கம் உயர்குலத்தினன்று'' என்பதைஉள்ளபடி உணர்ந்து,நல்லறிவும்,உண்மை ஞானமும், சிறந்த நடையும், அன்பும், மேலான பழக்கங்களும் ஜனங்களுக் குண்டாமாறு போதித்து அறியாமையை அகற்றி, அறிவை வளரச் செய்வதே கற்றவர்களின் செயற்கரிய செய்கையாகும். உலக விவகாரங்கள் சரிவர நடைபெறும் பொருட்டு நான்கு வர்ணங்கள் ஏற்பட்டிருக்க வேண்டுமேயல்லாது, பிறப்பினுல் உயர்வு தாழ்வு ஊகத்திற்கு ஒவ்வாது. ''பிறப்பொக்கு மெல்லாவுயிர்க்குஞ் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான்'' என்றபொய்யில் புலவரும், ''சாதிகுலம் பிறப் பென்னுஞ் சுழிப்பட்டுத் தடுமாறுமாதமிலி நாயேனையல்ல லறுத்தாட்கொண்டு, பேதை குணம்பிறருருவம்யானெனதென் னுரைமாய்த்துக், கோதிலமுதா னேக்குலாவு தில்லைகண்டேனே'' என்ற மாணிக்கவாசகரும் கூறியது கவனிக்கற்பாலது.

நாஸ்திகம் நீங்கலாக, சமயங்களனைத்தும் எல்லாம்வல்ல இறைவனைக் கருணைநிதி யென்றும், அன்பு வடிவினனென்றும், பரிபூரணனென்றும், சர்வ சாட்சியினனென்றும், அந்தர்யாமியாய், உயிர்கள்தோறும் எள்ளினுள் நெய்போல் வியாபித்திருப்பவன் என்றும் முழங்குகின்றன. அப்படி யிருக்க ஏழரைகோடி தீண்டாதவரென்னும் மக்களிடத்தில் கடவுள் வியாபித்திருக்கவில்லை யென்ருல், இறைவனை அபாரகுண மகிமையுடையவனென்றும், பாரபட்சமில்லாதவனென்றும், பரிபூரணனென்றும் சாஸ்திரங்கள் சாற்றுவது பொய்யாகுமன்ருே? மக்களின் ஆக்கையை ஆராயில், ஐம்பெருதிவியப் பொருளினுலும், சோற்றினுலும், இறைச்சி, எலும்பு, தோலினுலும், சுக்கில சோணிதத்தினுலும் புறவுடல் ஆக்கப்பட்டிருக்கின்றது. அறிவு மயமாயும் ஆனந்தமயமாயுமுள்ள ஆன்மா எங்கும் நிறைந்திருக்கத்தீண்டாமை யென்னும் வகுப்பினரைத் தோன்றச் செய்தவர்யார்? தீண்டாமையைப்படி, யாரால், எக்காலத்தில் ஏற்பட்டதென்று ஆராய்ச்சி செய்வதை விட்டு அதை ஒழிப்பதற்கு வேண்டிய பணிகளைச் செய்வதுதான் விவேகிகளின்செய்கை. தலையில் தீப்பிடித்துக் கொண்ட ஒருவன் எங்கு தீப் பிடித்தது, எப்படிப் பிடித்தது, எவரால் பிடித்ததென்று அச்சமயம் ஆராயின் துன்பமும் கஷ்டமும் மேலிடும். அதுபோல நாமும் வீண்வாதங்களை நீக்கி நமது சமயத்திற்கும், நாட்டிற்கும் ஏற்பட்டிருக்கும் அவமானத்தை அறவே ஒழிக்க வேண்டும். எவ்வுயிர்க்கும் இன்பஞ்செய்தலே புண்ணியம், அவைகட்குத் துன்பஞ் செய்தலே பாவம் எனவும் நீதி நூல்கள் கூறுகின்றன.

''அந்தண ரென்போ ரறவோர் மற்றெவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுகலான்'' என்று திருவள்ளுவர் கூறுகிறது ''கல்வியும் ஒழுக்கமுமுள்ள பிராமணனிடத்திலும், ஆவினிடத்திலும், யானையினிடத்திலும் ஒன்றையே காண்பவர்கள் ஞானிகள்'' என்று கீதை ஐந்தாம்அத்தியாயம் பத்தாம் சுலோகம் பறையடிக்கின்றது. சிலந்தி,யானை, பசு, சருக்குருவி, செடி,கொடி முத்தியின்பத்தை யடைந்ததாகப் பழைய புராணங்கள் பட்டப்பகற்போற் சாற்றியும், மக்கட்பிறப்பைத் தாங்கி அரிய ஆக்கையையும் பொறிகளையும் உடையவர்களைத் தீண்டாதவர்களென்றும், பார்க்கப்படாதவர்களென்றும், மற்றவர்களைப்போல உலாவக் கூடாதென்றும் சொல்வது என்ன கொடுமை! அந்தோ! இதென்ன பாவம்! இவர்களுடையும்கதி தான்யாது? தீண்டப்படாதவர்களென்கிற ஏழரைகோடி மக்களுக்குநாம் செய்திருக்கும் அறக்கொடிய பெரும்பாவத்தை எவ்வித பிராயச்சித்தத்தினுலும் போக்கமுடியாது. நம்முடைய பாவத்தை உண்மையில் உணர்ந்து ஊழியம் செய்து, நம்முடைய எல்லாப் பிறப்புரிமைகளும் அவர்களும் பெறப்பாடுபடுவது பெரியார்கடமை. ''எவ்வுயிரும் என்னுயிர்போ லெண்ணியிரங்கவும் நின்தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே'' என்று தாயுமானவரும் ''எவ்வுயிரும் பராபரன் சந்நிதியதாகுமிலங்கு முயிருடலனைத்து மீசன்கோயில்'' என்று சிவஞான தீபமும் கூறுவது பொய்யோ? அசோகர் காலத்தில் மிருகங்களுக்கும் வடிகட்டின தண்ணீர் கொடுத்ததாகச் சரிதங்களால் அறிகின்ருேம். புத்தர், திருவள்ளுவர், இராமானுஜர், இராமகிருஷ்ணர், அப்பர், இராமலிங்கசுவாமிகள், தாயுமானவர், காந்தி அடிகள் தோன்றிய நாட்டிலே தீண்டாமை தாண்டவமாடி வருவது ஆச்சரியத்திலும் ஆச்சரியம். முப்பத்திரண்டு கோடி ஜனங்களும்பாஷாபிமானம் தேசாபிமானம், மானம், ஆண்மைகுன்றி, பிறர் நம்மைப்பார்த்து அடிமைகளென்றும், ஆண்மையற்றவர்களென்றும், தீண்டப்படாதவர்களென்றும் பரிகசிக்க, நம்முடைய நாட்டில் பிறந்து, நம்முடைய சந்தோஷத்தில் சந்தோஷித்தும் துக்கத்தில் துக்கித்தும், நம்முடைய கடவுளைப்போற்றியும், பூசித்தும், வழிபட்டும் இறுதியில் ஆன்மசுகயை நம்முடைய நாட்டிலேயே விடும் ஏழரை கோடி ஏழை மக்களைக் கவனியாதிருப்பது கடவுள் சம்மதமும் பெரியோர் சம்மதமுமாகாது.

தீண்டாதவர்களைப் படிவோர், புலால் புசித்தலாலும், கட் குடித்தலாலும், ஆசாரமின்மையாலும், தேவாலய தரிசனம் செய்யக் கூடாதென்ருல், நம்மவர்களில் மதுமாமிசங்களுண்ணவில்லையா, பெண் பித்துக் கொண்டவர்கள், சட்டுகயர்கள், பணப்பேயர்கள், சித்தத்தில் சிறிதும், அருள், கருணை, தயை, இரக்கம் இல்லாதவர்கள் தேவாலயத் திற்குப் போவதில்லையா? ''கடையவனேனைக் கருணையினுற் கலந்தாண்டு கொண்ட, விடையவனே விட்டிடுதி கண்டாய்'' என்று மாணிக்கவாசகர் கூறியபடி நம்மிடமுள்ள அற்ப குணமும், கோரமான பாவச்செயல்களும், அழுக்காறு, அவா, வெகுளி, இன்னுச்சொல் முதலிய இழிய குணங்களும் நம்மை விட்டு ஒழிந்து, அந்தக் கரணம் சுத்தமாகி மனம் ஒருமுகப்பட்டு, அன்பே வடிவாயுள்ள இறைவனின் அருளால் புனிதராகி வீடுபெற வேண்டியன்ருே தேவாலய தரிசனம் செய்வது? எல்லா நற்குணங்களையும் நிறையப் பெற்றவன் கோயிலுக்குப் போவது யாதுபற்றியோ அறியேன்.

மனிதனின் பொது உரிமைகளான தெருக்களில் நடத்தல், பள்ளிக்கூடங்களில் மற்றவரோடு வாசித்தல், கிணறுகளில் தண்ணீர் எடுத்தல், தேவாலய தரிசனம் செய்தல் முதலியவைகளில் சுதந்திர மில்லாதவர்கள் காதில், சுயஆட்சி வேண்டுமென்ற கூக்குரலிடுவது கேளாது.

தீண்டாமையை ஒழிக்காமலும், விவசாயிகள், தொழிலாளர்கள் இவர்களின் கஷ்டங்களைக் கவனியாமலும் பெரிய மேடைகளில் ஏறி இடி இடித்ததுபோல் பிறர் வியக்கப் பேசினுலும், சட்ட சபைகளில் ஆண் சிங்கத்தைப்போல் கர்ஜித்தாலும், கப்பலேறிக் கடல் கடந்து கன்னெஞ்சம் உருகும்படி பேசினுலும் சுதந்திரம் கிடைப்பது அசாத்தியமான காரியம்.

''தன்னுடைய சகோதரன்மீது அன்பில்லாதவன் கடவுள்மீது அன்பில்லாதவன்'' என்ற ஏசுநாதர் சொன்னதைச் செய்கையில் காட்டுவதே கடன். தீண்டாதவர்களும் கடவுள் சிருஷ்டியே யென்றும், அவர்களுக்கும், பொறிபுலன்களுண்டு, அறிவுண்டு, ஆசை உண்டு, சுதந்திரமுண்டு, தெய்வமுண்டு, அடையும்கதி உண்டு என்று உண்மை ஊழியம் செய்யில் சுய ஆட்சி பெற்று சுகம் பெறலாம். அன்றேல் அன்னியரால் அவமானத்தையும், நம்முடைய சந்ததியாரால் அபகீர்த்தியையும், அபவாதத்தையும் அடைந்து ஆதோ கதியை அடைவோம்.

எல்லாருள்ளத்திலும் நிஷ்காமியமாய் ஆனந்த நடனம் செய்யும் நடராஜப் பெருமான், மனோதிடத்தையும்,தைரியத்தையும் பெருகச்செய்து பணிசெய்யும்படி செய்யப் பிரார்த்திக்கிறேன்.

இனும்! இனும்!!

புஸ்தக விஷயங்களடங்கிய பத்திரிகையும், நூறு வருஷத்திய காலண்டரும் தங்கள் விலாசம் தெரியப்படுத்தினுல் தபால் செலவின்றி அனுப்புவோம்

ஸ்ரீசாது ரத்தின சற்குரு புத்தகசாலை,
பார்க்டவுன், (P. O.) சென்னை.

ஒரே ரூபாய்

வாசனைகளிற் சிறந்தது எது?
பிரெஞ்சு சென்டுகளே!

ஜாஸ்மின், சில்லா, ரோஸ்
பெரிய புட்டி விலை ரூபா 2.
சிறிய புட்டி விலை ரூபா 1.
3-மாதிரி புட்டிகளின் விலை ரூபா 1—0—0
தபாற் செலவு அணு 12 பிரத்தியேகம்.
நம்முடைய கேட்லாக்கிற்கு எழுதவும்.
லக்ஷ்மண பிரசாத் அண்டு கோ,
(ஈ) புதுச்சேரி.

காமத்வஜம்

இது சரீரமெலிவு, ஆயாசம், பலவீனம், கை கால் ஓய்ச்சல், கண் எரிவு, ஞாபக மறதி, நடக்க முடியாமை, சத்துவ நஷ்டம், ரத்தக் குறைவு முதலிய வியாதிகளை ஒழித்துவிடும். இதைப் புசித்தவர்கள் ஒவ்வொருவரும் நல்ல திடகாத்திர முள்ளவர்களாயும், தத்துவ புஷ்டி யுள்ளவர்களாகவும், பாலிய சேஷ்டையால் சுக்கில நஷ்டமுண்டானவர் யாவரும் மிக வாலிபத் தசையை அடைந்தவர்களாகவு மிருக்கிருர்கள்.

ஆகையால் நல்ல பலமும், ஆரோக்கியமும், பாலிய பருவமும் அடைய விருப்புகின்றவர்கள் தவருமல் இதைச் சாப்பிட்டு உண்மையைத் தெரிந்து கொள்ளலாம். இது சாதாரண வைத்தியர்களாலும், மற்றவர்களாலும் செய்யத் தக்கவையல்ல. எவ்விதமான தாதுவிர்த்தி லேஹியங்களும் இதற்குச் சமானமல்ல. இதில் விலையுயர்ந்த முத்து, பவளம், கஸ்தூரி, கல்மதம், தங்கம், வெள்ளி பஸ்பங்களால் சாஸ்திர முறைப்படி தயாரானது.

இதன் விலை டின் ஒன்றுக்கு ரூபா 3. தபாற் கூலி அணு 8.
ஒரே காலத்தில் 2-டின் வாங்குபவர்கட்கு தபால் செலவு இனும்.

ஆனந்த ராமாயணம். 16 ஆப்டோன் படங்களுடன்
உயர்ந்த காலிகோ தங்க கிலிட் பயிண்டு ரூபா 6 0 0
விஷ்ணு புராணம். வசனம் படங்களுடன் ,, 3 0 0
பட்டினத்தார்பாடல் மூலமும், நவசக்தி ஆசிரியர்
திரு. வி. கலியாணசுந்தர முதலியார் விருத்தியுரையும் ,, 2 0 0
எஸ். பி. சுந்தரம் கம்பெனி, பார்க் டவுன், சென்னை.

இங்கோ எஸ்ஸென்ஸ்

இது குறுகிய மசியின் சத்து. இது 2 அவுன்ஸ் புட்டிகளில் தயார் செய்யப்பட்டிருக்கிறது. இத்துடன் 12 பங்கு ஜலம் சேர்க்க எழுதுவதற்கு மிகவும் சேர்த்தியான மசியாகிறது. பௌண்டன் பேனுக்களுக்கும் உபயோகப்படும். இது பேனுவில் ஒட்டிக்கொள்கிறதில்லை. இம்மசியினுல் எழுதிய காகிதத்தை உலர்ந்த பிறகு தண்ணீரில் நனைத்துக் காயவைத்தாலும் மசியில் கொஞ்சமாகிலும் கெடுதல் இராது. புளுபிளாக் அல்லது சிகப்பு 2 அவுன்ஸ் புட்டி 1-க்கு ரூ. 1—0—0.

சோல் ஏஜெண்டுகள்:—எஸ். வைத்தியா அண்டு கோ,
201, தேவராஜ முதலிதெரு, பார்க்டவுன், மதராஸ்.
கிளை ஆபீஸ்:—சைனு பஜார், திருச்சி.

ஸ்திரீகளுக்கு
கேஸரியின்
லோத்ரா

இந்த திவ்விய அவுஷதமானது ஸ்திரீகளுக்குள்ள சகல கஷ்டங்களையும் நிவர்த்திக்கும். கர்பாசய ரோகங்களாகிய பஹிஷ்டை காலத்தில் வரும் வயிற்றுவலி, அகால பஹிஷ்டை, சந்தானமில்லாமலிருத்தல் மூர்ச்சை முதலிய சமஸ்த வியாதிகளும் சூரியனைக்கண்ட பனி போல் இந்த லோத்ராவினுபயோகத்தால் பறந்தோடும். ஸ்திரீகளிடத்திலபிமானமுள்ள ஒவ்வொருவரும் இதை கைக்காவலாய் வைத்திருத்தலவசியம்.

விலை 12 அவுன்ஸ்புட்டி 3 0 6 அவுன்ஸ் புட்டி 1 10
முழுகியாட்லாக் கோரியவர்களுக்கு அனுப்பப்படும்

கேஸரிகுடீரம்,
ஆயுர்வேத அவுஷதசாலை,
33, போலீஸ் கமிஷனர் ஆபீஸ்ரோட், எழும்பூர், மதருஸ்.

பாணபுரத்து வீரன்
தேசபக்தி நிறைந்த ஒரு நூல்
பண்டிதை அசலாம்பிகை அம்மையார் முகவுரையுடன் கூடியது
உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டது
சிறந்த பையிண்டு : : படத்துடன் மிளிர்வது

இதுகாறும் இத்தகைய நூல் தமிழ்மொழியில் வெளிவந்ததே யில்லை. ''நவசக்தி'' யில் சிறிது சிறிதாக வெளிவந்ததை ஒருங்கு சேர்த்துப் புத்தக ரூபமாக அச்சிடப்பட்டுள்ளது. இவ்வழகிய நூலில் பாணபுரத்தார் எங்ஙனம் சுதந்தரம்பெற முயன்றனர் என்பதும், அந்நாட்டின் விடுதலைக்காக வாலீசன் புரோசன் என்ற இரண்டுவீரர் எங்ஙனம் தங்கள் உடல், பொருள், ஆவி, மூன்றையும் அர்ப்பணம் செய்தனர் என்பதும், வீரத்தின் மாண்பும், தேசாபிமானத்தின் பெருமையும், தியாகத்தின் மேன்மையும் வெகு அழகாக விளக்கப்பட்டிருக்கின்றன. தமிழர் ஒவ்வொருவர் கையிலும் இந்நூல் இருக்கவேண்டியது மிகவும் அவசியம்.

விலை ரூபாய் 1.

முருகவேள் புத்தகசாலை,
இராயப்பேட்டை, சென்னை.

குறைவற்ற செல்வம் யாது?

பண்டிதர். ஸ்ரீமான் அ. கிருஷ்ணசாமி நாயுடு எழுதுவது

குவலயத்தில் யாவரும் குறைவற்ற செல்வத்தையே குறிக்கொண்டுள்ளார். செல்வமென்று சொல்லத்தக்கது உலகிற் பல வேறு வகைப்படும். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வகைச் செல்வத்தில் பற்றுண்டு. அவையனைத்தையும் ஒரு படித்தாக "உடைமை" அல்லது "பொருள்" என்னும் ஒரு மொழியில் குறித்து விடலாம். இவ்வுடைமையனைத்தும் புறப்பொருளவே. அப்புறப் பொருட்செல்வம் எத்துணை எத்துணை எய்தினும் ஒருவர் மனம் அமைதியுறுகின்றதோ? பின்னரும் வேண்டும் வேண்டும் என்னும் அவாவன்றோ மென்மேலும் எழும்புகின்றது? அவாவிய பொருள் நிரம்பப்பெறினும் ஒவ்வொரு கால் பெரிதும் சிறிதும் குறைவுறுகின்றதன்றோ? ஆகையால் குறைவற்ற செல்வம் யாது? இவ்வினாவிற்குப் பன்னூறாண்டுகளுக்கு முன்னரே விடையிறுக்கப் பெற்றுளது. அவ்விடையை எல்லா ஆண்மக்களுமே ஓதி வருகின்றனர்; உரைத்து வருகின்றனர். அவ்விடை "நோயற்றவாழ்வே குறைவற்ற செல்வம்" என்பதாம். இக்குறைவற்ற செல்வத்தைத் தெரிவித்தவர், பழந்தமிழ்க் கன்னி - செந்தமிழ்க் கிழவி - முண்டமிழ்த் தாய் - ஒளவைப்பெருமாட்டி என்பவர். இப்பெண் பெருமாளின் பேருரையைப் பெண்ணுலகம் அன்று - ஆணுலகமும் அமைதியுடன் தலைதாழ்ந்து கேட்டு வருகின்றது.

* * *

செல்வம் இன்னதென்பதனைச் செவ்வனே தெரியாதார் யாவர்? இயங்கு திணையும் நிலைத்திணையும் ஆகத் தம்மாட்டுளவனைத்தும் செல்வங்களென்பன கண்கூடே. இவற்றினைத்தவிர்த்து வேறு செல்வங்களும் உள. "கேடில் விழுச்செல்வம் கல்வி" "செல்வத்துட்செல்வம் செவிச்செல்வம்" எனக்கல்வியையும், கேள்வியையும் செல்வங்களாகவே நம் பெரியோர் பேசினர். கல்வியும், செல்வமும் எங்ஙனே பொருட்செல்வம் ஆகும் என்பதன் காரணங்களை வாக்கிற்பெருகும். இதுகாறும் பொருளாகப் போற்றப்பட்டு வந்தன செல்வம், கல்வி, கேள்வி என்னும் மூன்றுமே யாம். "நுண்ணுணர்வு இன்மை வறுமை, அஃதுடைமை பண்ணப்பணைத்த பெருஞ்செல்வம்" என நாலடி நவின்றுங்கு, அறிவுடைமையும் செல்வமேயாகும். இதனையே நம் ஆசிரியர் பெருமானும் "அறிவுடையார் எல்லாம் உடையர்" என உரைத்தருளினர். ஆகவே, செல்வம், கல்வி, கேள்வி, அறிவு என்பன நான்கும் செல்வங்களேயாம். எனினும் இவற்றோடு ஒருங்கு வைத்தெண்ணப் பெறுவதாய், இவையனைத்தும் தோன்றுவதற்கு நிலைக்களனாய், இவையனைத்திற்கும் மேன்மையுற்றதாய் உள்ள செல்வம் ஒன்றுண்டு. அஃதே நோயற்ற வாழ்வு; நோயற்ற வாழ்வு. அஃதே குறைவற்ற செல்வம்; குறைவற்ற செல்வம்.

* * *

வாழ்வு செல்வம் ஆவது எங்ஙன்? என்று வினவலாம். ஈண்டு வாழ்வு என்பது வாழ்வு நுகர்தற்குநிலைக்களனான உடம்பு. நோய்வாய்ப்பட்டு வைகும் உடம்புள்ளோர் செல்வம் ஆக்குமாறு எங்ஙன்? அளிக்குமாறு எங்ஙன்? நோயற்ற உடம்பினைப் பெறினன்றோ திரைகடலோடியும் திரவியம் தேடலாம்? நண்ணிய உடம்பினைச் சோராதா திரைகடல் ஓடிமாறெங்ஙன்; திரவியம் தேடுமாறு எங்ஙன்? ஆகையால், செல்வம் தேடுவதற்குக் காரணமான நோயற்ற உடம்பினையே செல்வமாக உரைத்தனர்; குறைவற்ற செல்வமாகக் கூறினர். "அருள், அல்லது யாதெனில் கொல்லாமை, கோறல்" எனத் திருக்குறளில் காரணங்களைக் காரியங்களாகக் கூறினாற்போல "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என வாழ்வு என்னும் காரணத்தையே செல்வம் என்னும் காரியமாக உபசரித்தார். வாழ்வு காரணம், செல்வம் காரியம். நோயற்றவாழ்வாம் செல்வத்தை ஏனைய பொருட்செல்வத்தினின்றும், குறையும் செல்வத்தினின்றும், வேறு பிரித்துக் காட்டுவதற்கே "குறைவற்ற செல்வம்" என அடைமொழி கொடுத்துக் கூறினர். "வாழ்வே" என்னும் தேற்றேகாரமே குறைவற்ற செல்வத்தின் பெருமையைக் குறிக்கும். இன்னும் "அருட்செல்வம் செல்வத்துள் செல்வம்" எனச் செல்வங்கள் பலவாறாகக் கூறப்பெறினும், அச்செல்வங்க ளெல்லாவற்றினும் தலையாயது- தாயாயது நோயற்ற வாழ்வேயாம். இதனாலே அச்செல்வங்கள் பெருந் தேற்றேகாரம், இவ்வாழ்வு எனும் செல்வத்திற்கு வழங்கப்பட்டது போலும். நோயுற்ற வாழ்வுள்ளோர் கல்வியைக் கற்க ஒண்ணுமோ? கேள்வியைக் கேட்க ஒண்ணுமோ? அறிவை அடைய ஒண்ணுமோ? அருளை ஆக்க ஒண்ணுமோ? ஒண்ணாது; ஒண்ணாது. நோயற்ற வாழ்வாம் சேயுற்றதாயின் மடியினே செல்வத் தெரிவை செழிக்கும்; கல்விக் காரிகை களிக்கும்; அறிவு அரிவை அடையும்; அருள் அம்மையும் அரும்பும். நோயற்ற வாழ்வின் நோன்பு என்னே! என்னே!! "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" எனப் பழந்தமிழ்க்கன்னி பகர்ந்தனள். ஒரு புதுத் தமிழ்க்கன்னி நன்னலம் பெற்றுத் தோன்றலாளேல், "நோயற்ற வாழ்வே குறைவற்ற கல்வி; நோயற்ற வாழ்வே குறைவற்ற கேள்வி; நோயற்ற வாழ்வே குறைவற்ற அறிவு; நோயற்ற வாழ்வே குறைவற்ற அருள்" எனப் பல படப் புனைந்தன்றோ நோயற்ற வாழ்வின் இன்பத்தை இயம்புவள்?

* * *

நோய்க்குக் காரணங்கள் பலப்பல; அவற்றின் பெயர்களும் பலப்பல. இதுகாலை, புதிது புதிதாக நோய்களும் தோன்றுகின்றன; பெயர்களும் தோன்றுகின்றன. மருத்துவங்களும் தோன்றுகின்றன. மருத்துவர்களும் தோன்றுகின்றனர். எவை தோன்றினும் நோய்கள் குறைந்தனவோ? நோய் வாய்ப்பட்டோர் குறைந்தனரோ? இல்லை; இல்லை. மருத்துவச் சாலைகள் எத்துணை பெருகுகின்றனவோ, அத்துணை நோயாளிகளும் பெருகுகின்றனர். இதுகாலை நடை முறையினை எண்ணி ஆராயின், ஒருகால் நம் நாடு மேல்நாட்டு மருத்துவச் சாலை மயமாகுமோவென் றஞ்சுகின்றேன். சுருங்கக் கூறின் நோயின் காரணங்களைக் களைவதற்காகக் கோலும் வழிகளின் ஊடே நோய்களும் பெருகுகின்றன வென்று கூறலாம். நோயின் மூலத்திற்கு எவரெவர் எவ்வெக் காரணங்கள் கழறினும், அனைவராலும் ஒப்பத்தகும் காரணங்கள் எக்காலமும் உள. அவை, உடை, உணவு, நீர், காற்று, இடம் முதலியனவாம். இவை மக்கள் சுகவாழ்க்கைக்கு இன்றியமையாதன வென்பதை அறியாதார் அறியாதாரல்லரோ? ஒவ்வொரு நீதிநூலாரும், மருத்துவநூலாரும் இவற்றினைப்பற்றி எழுதியே யுள்ளார். தமிழ் மக்களின் பெரும்பண்டசாலையாம் திருக்குறளின்கண், "மருந்து" என்னும் ஓர் அதிகாரம் கூறப்பட்டுள்ளது. அப் பத்துப் பாக்களையும் பயின்று, செய்கையிற் பழகியுள்ளோர்மாட்டு, நோய்க்கும் இடமின்று; மருத்துவர்க்கும் இடமின்று. உலகினை உய்விப்பான் வேண்டி, திருமாலும் திருவள்ளுவரும் வகுத்துக்கொண்ட அவதாரமும் பத்து; பாடலும் பத்து. அவற்றுள் குறளவதாரப் பாடலொன்று பார்க்க.

"இழிவு அறிந்து உண்பான் கண் இன்பம் [போல் நிற்கும்
கழிபேர் இரையான்கண் நோய்"

இத்திருக்குறளை எத்துணையர் பயின்றுள்ளார்? பழகியுள்ளார்? பயின்றோர் பலர்; பழகியோர் சிலர்.

* * *

இதுகாலை நோய்வாய்ப்பட்டுக் கிடந்துழலும் பெரும்பான்மையோர் யாவர்? வறிஞரா? செல்வரா? செல்வரே என்பதைப் பெரிதும் கருத்தில் வைத்தல் வேண்டும். இழிவு அறிந்து குறைய உண்பான்மாட்டு நோயேது? தின்பம் ஏது? கழிபேர் இரையை எடுப்பான் மாட்டே நோயும் உண்டு; துன்பமும் உண்டு. அறிந்தோ அறியாமலோ குறைய உண்போர் வறிஞரேயாவர். தெரிந்தோ தெரியாமலோ நிறைய உண்போர் செல்வரேயாவர். ஆகையால், உலகிற் பிணிகள் பெரும்பாலனவும் வறியவர் வாழ்க்கையில் அஞ்சுகின்றன; செல்வர் வாழ்க்கையில் மிஞ்சுகின்றன. காரணம் என்ன? கழறவும் வேண்டுமோ? வறியவர் குறைவாக உண்பதும் செல்வர் மிகுதியாக உண்பதுமேயாம். வறிஞரும் செல்வரும் பசியோ பசி என்று அலைகின்றனர்; அழுகின்றனர்; முன்னவர் பசிக்கு வேண்டுவது உணவு; பின்னவர் பசிக்கு வேண்டுவது மருந்து. ஆகையால், வறிஞர் பசிக்குத்தொழிற்சாலையை நாடுகின்றனர். செல்வர் பசியால் மருத்துவச் சாலையைத் தேடுகின்றனர். வறுமையின் கொடுமையால் வறிஞர்கள் எப்பொழுதும் தவரப்பசித்துக் குறைவாகவே உண்பதனுனே, அவர்கள் மாட்டு இன்பம் இலங்குகின்றது. செல்வச் செழிப்பினால் செல்வர்கள் எப்பொழுதும் பசி என்பதறியாது, நிறைய உண்பதனுனே அவர்கள் மாட்டுத் துன்பம் துலங்குகின்றது. ஒரு செல்வன்-வயிறு நிரப்புவ தொன்றனையே குறிக்கொண்டவன்-நாவின் சுவை தணித்தலையே குறிக்கொண்டவன் - ஒருகால் உண்ணும் உணவால் ஓர் ஏழை ஒருநாள் உயிர்வாழ்வனே. இதனைக் கற்றோரும் அறிந்திலர்; கல்லாரும் அறிந்திலர் நாவினுக் கடிமையாயினர்; நோயினுக் கடிமையாயினர். வயிறும் நிரப்பினர்; துன்பமும் நிரப்பினர். "பசித்தால் உண்; அதுவும் உழைத்தபின் உண்" என்னும் மகாத்மா காந்தியடிகளின் வாக்கு வளர்வுறும் நாள் எந்நாள். அந்நாளே திருவள்ளுவரின் திருவுரை நிலவும் நாள். அதுவே நன்னாள்.

* * *

நோய்க்குக் காரணங்கள் உணவும் பிறவும் ஆயினவேனும் மற்றையனவும் உள்ளன. ஒன்று புறத்திருந்து வருவது; ஒன்று அகத்திருந்து வருவது. புறத்திருந்து வரும் நோய்களின் காரணங்களே பெரிதும் ஆராயப் பெறுகின்றன. நோயின் காரணங்கள் அகத்தேயும் உள்ளன என்பதை ஆராய்வோர் அருகிவிட்டனர். உளத்திலிருக்கும் தீக்குணங்களனைத்தும் நோய்க்குக் காரணங்கள் என்பதும் நற்குணங்களனைத்தும் நலத்திற்குக் காரணங்கள் என்பதும், நுணுகி நோக்குவோர்க்கு நன்கு புலனுகும். ஆசிரியர் திருவள்ளுவனாரும்

"அழுக்காறு அவாவெகுளி இன்னாச் சொல் [நான்கும்
இழுக்கா வியன்றது அறம்."

என்று கூறியதன் மாண்மை உற்று நோக்கல் வேண்டும். அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் என்னும் நான்கு தீக்குணங்களுக்குச் சித்தை இரையாகி யிருக்குமேல், அவற்றினும் வேறென்ன நோய் வேண்டும்? அவை நான்கும் அகத்தினைப் பிடுங்கிப் பிடுங்கி யன்றோ தின்னும்? வெகுண்டவன் மருண்ட மேனியையும், அழுக்காறுற்றோன் அழிந்த உடலத்தையும் உற்று நோக்குவோர் யார்? அவிநயங்களைப்பற்றிக் கூறும் அடியார்க்கு நல்லார் இத் தீக்குணங்களின் அவிநயத்தையும் அறைகின்றார்.

"வெகுண்டோன் அவிநயம் விளம்புங்காலை
மடித்தவாயும், மலர்ந்த மார்பும்,
தடித்த புருவமும், சுட்டிய விரலும்,
கன்றின உள்ளமொடு, கைபுடைத்திடுதலும்
அன்ன நோக்கமோ டாய்ந்தனர் கொளலே"

"அழுக்காறுடையோன் அவிநயம் உரைப்பின்,
இழுக்கொடு புணர்ந்த விசைபொருளுடை- [மையும்,
கூம்பிய வாயும், கோடிய உரையும்,
ஓம்பாது விதிர்க்கும் கைவகை யுடைமையும்,
ஆரணங்காகிய வெகுளி யுடைமையும்,
காரணமின்றி மெலிந்தமுகம் உடைமையும்,
மெலிவொடு புணர்ந்த இடும்பையும், மேவாப்
பொலியும் என்ப பொருந்துமொழிப் புலவர்"

* * *

வெகுண்டோனையும், அழுக்காறுற்றோனையும் கூர்ந்து நோக்குவோர்க்கு இச்செய்யுளிற் காட்டிய மெய்ப்பாடுகள் அனைத்தும் தோன்றுவன கண்கூடு. வெகுளியுற்றால் உதிரம் கொதிக்கின்றது; வாய் வறளுகின்றது; நெஞ்சம் துடிக்கின்றது. உதிரக் கொதிப்பே நோய்களனைத்திற்கும் பிறப்பிடமாகும். அடக்க முடியாத வெகுளி யுறினும், பிற எத்துயரம் உறினும் பெரும்பிணியுண்டாகும்; சாக்காடு முண்டாகும். வெகுளியால் உயிர் துறந்தார் தமிழ்ச்சங்கத் தலைவர் பாண்டித்துரை அவர்கள். பிரிவாற்றுமையால் உயிர் நீத்தோர் ஸ்ரீராமன் தந்தை தசரதன் ஆவார். முன்னவர் இறந்தமை கண்கூடாகக்கண்டது. பின்னர் இறந்தமை கேள்வியூடே கேட்டது. வெகுளி முதலியன உயிர் நீக்கத்திற்கே காரணமாயின், அவற்றைப் பெரும்பிணிகள் என்னுது வேறென்னென்று புகல்வது? உயிர் நீக்கத்திற்கே காரணமாயின் வெகுளிப்பிணியின் கொடுமையைக் கூறவும் வேண்டுமோ?

"காமம் வெகுளிமயக்கம் இவைமூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய்"

என்னும் தமிழ்மறையில்நோய்க்கு மூலங்களாக மொழியப்பட்டன யாவை? காமம், வெகுளி, மயக்கம் என்னும் இவற்றை அந்நோய் என்று அறைகுவர். அந்நோயே புறநோய்க்குக் காரணம் என்பதை அவர் அறிந்திலர். புறநோய்க்குக் காரணங்களானவை உடம்பினையன்றோ ஊறுபடுத்தும். அந்நோய்க்குக் காரணங்களானவையோ உளத்தையும் ஊறுபடுத்தும்; உடலத்தையும் ஊறுபடுத்தும். காமக்கங்கனலால் உள்ளம் வெம்புமாயின் உடலம் கொதிக்குமன்றோ? அக்கொதிப்பு எப்பிணியைத்தான் தராது?

"காமத்தாலிறந்தார் களிவண்டுறை
தாமத்தாரினர் எண்ணினும் சாலரோ"

என்னும் கம்பநாடர் வாக்குக் கருதத்தக்கது.

* * *

உடலத்தின் நோய்க்கு மருந்துண்ணல் போன்றே அகநோய்க்கும் மருந்துண்ணல் வேண்டும்? அம்மருந்துகள் யாவை? அடக்கம், பொறுமை, மகிழ்ச்சி முதலிய நற்குணங்களன்றோ? நிறை நெஞ்சம், அவாவின்மையும் உடையார்க்கு நோயேது? தமிழ்மறை ஆசிரியர், உடலத்துறும் நோயை நீக்கற்கு "மருந்து" என்னும் ஓரே அதிகாரம் உரைத்தனர். அகத்தை அழிக்கும் நோயை நீக்கற்கே, அறத்துப்பாலில் பலவும் பொருட்பாலில் சிலவுமான பல அதிகார மருந்துகள் அதிகாரமாயுள்ளன. அவற்றினையும், அவற்றால் நோயுறாஉம் காரணங்களையும் ஈண்டுரைக்கின் விரியுமென்று விடுக்கின்றேன்.

"சார்பு உணர்ந்து சார்புகெட ஒழுகின் மக்களைச்
சார்தரா சார்தரும் நோய்."— தமிழ்மறை

வெள்ளி பஸ்மம்

வெள்ளை, வெட்டை, மூலங்கள், எலும்புருக்கி, நீரிழிவு, ஷெ சம்பந்த குன்மம் எல்லாம் தீரும். தளர்ந்த தாது வலுக்கும். மற்ற நோய்களுக்கும் மருந்துண்டு. வியாதியின் விபரம் எழுதினுல் தக்க பரிகாரம் மருந்துடன் தெரிவிக்கப்பெறும். 5 நாளில் நிச்சயம் குணம் தெரியும். 45 நாள் மருந்துரூ. 5.

விலாசம் :—
சே. விசுவநாத செட்டியார்,
வைத்யம், வாலுகுடி.

20,000 ஜனங்களால் வாசித்து பிரபலமடைந்தது.

தமிழ் தெரிந்தவர்கள் வெகு சுலபமாக இங்கிலீஷ் கற்றுக்கொள்ளக் கூடியது.

எமது ரிஜிஸ்டர் லேடி டிரேட்மார்க்போட்டிருக்கும் புத்தகத்தை வாங்குங்கள். ஏமாறாதீர்கள்.

இப்புத்தகத்தில் சொல்லியபடி இல்லாவிட்டால் பணம் திருப்பிக் கொடுக்கப்படும்.

ஆங்கில ஆசான்

60 நாளையில் இங்கிலீஷ் கற்றுக் கொள்ளலாம்.

இங்கிலீஷ்பேசவும், படிக்கவும் எழுதவும் கற்றுக்கொள்ளக்கூடிய சுலபமான தமிழில் சுமார் 600-பக்கங்கொண்டது. 6-ம் பதிப்பு.

அழகான கலிகோ பயிண்டு விலை ரூ. 2. தபால்செலவு அணு. 8.

தி. இராஜகோபால் முதலியார்,
302, தங்கசாலை தெரு, மதராஸ்.

இனம்! முற்றிலும் இனம்!!

வைத்திய வித்யா

வாசிப்பதற்கு இனிமையாயும் நற்புத்தி புகட்டக் கூடியதுமான இப்புத்தகம் லக்ஷக்கணக்கில் முற்றிலும் இனமாய் இதுவரையில் அனுப்பப் பட்டிருக்கின்றது. இனிமேலும் அப்படியே அனுப்பப்படும். தேவையுள்ளவர்கள் இன்றைக்கே தருவித்து வாசியுங்கள்.

ராஜவைத்திய நாராயணஜீ கேசவஜீ,
57, சைனாபஜார் ரோட், மதராஸ்.

உயர்ந்த இலை!
குறைந்த விலை!!

சிவபுரி - - - புகையிலை

உலகு புகழ்வது எது? உற்சாகத்தில் ஊற்று எது? மணம் மிகுந்தது எது? குணம் சிறந்தது எது? சிதம்பரத்திற்கு அடுத்த சிவபுரி புகையிலையே! தேவைக் கெழுதுங்கள்! ஒரு முறை பரீக்ஷித்தால் உண்மை விளங்கும்.

கத்தை ஒன்றுக்கு
40 இலைகள் கொண்டது

1 நெ.	கத்தை விலை	ரூபா	5-0
2 நெ.	,,	,,	4-4
3 நெ.	,,	,,	3-12
4 நெ.	,,	,,	3-0

வி. பி. தபால் பாக்கிங் சார்ஜ் வேறு.

வி. கே. எஸ். ஐயர் & கோ,
ஆணிக்காரன் தெரு, சிதம்பரம்.

கார்நாற்பது
மூலமும் உரையும்

இந்நூல் சங்கநூலாராய்ச்சி செய்வோருக்குப் பெருந்துணைபுரிவது. முகவுரையில் எல்லாச் சங்கநூற் கருத்துக்களையும் காணலாம்.

விலை ரூபா 1 4 0

முருகவேள் புத்தகசாலை,
இராயப்பேட்டை, சென்னை.

தொழிலாளர் இயக்கம்

ருஷியப் புரட்சி

(சென்ற இதழ் தொடர்ச்சி)

போல்ஷிவிக் கட்சியின் தலைவர்களான லெனின், ஸொகோனியோகாப், லிகோரியப் முதலியோர் ஸ்விட்ஜர்லந்து நாட்டில் வசித்தனர். 1917-ம் ஆண்டில் முதன் முதலாக ருஷியாவில் புரட்சி ஏற்பட்டது. புரட்சியின் காரணங்கள் மூன்று. ருஷியப் படைகள் யுத்தத்தில் தோல்வியுற்றது ஒரு காரணம். ஜனங்களுக்கு யுத்தத்தில் ஏற்பட்ட வெறுப்பும், ஏராளமான பொருட் செலவினுல் விளைந்த தகுழப்பமும் மற்ற காரணங்கள். ஜெர்மனியுடன் தனியாகச் சமாதானம் செய்துகொள்ள ஸார் சக்கரவர்த்தி ஏற்பாடு செய்துகொண்டிருக்கையில், இம்முயற்சிபலன்படாமல்செய்யும் பொருட்டுப் பிரிட்டிஷ் தூதர்கள் இம்முதல் புரட்சியை உண்டு பண்ணினுர்கள் என்று அக்காலத்தில் வதந்தி பரவியிருந்தது. நான் சில போல்ஷிவிக்கர்களை இவ்வதந்தியைப் பற்றிக் கேட்டபோது, அவ்வதந்தி உண்மைதான் என்று நிரூபிக்க முடியாதெனக் கூறினுர்கள்.

கெரென்ஸ்கி ஆட்சி

முதற்புரட்சியை மத்திய வகுப்பினரின் புரட்சி என்று கூறலாம். டூமா என்னும் ருஷியப் பார்லிமெண்டில் செல்வாக்குப் பெற்றிருந்த ஆசிரியர் மிலியுகாப் என்பவர் தமது கட்சியின் துணைகொண்டு ஸார் சக்ரவர்த்தியைத் தமது புதல்வனுக்குப் பட்டங்கட்டி விட்டுத் தாம் சிம்மாசனத்தினின்று விலகும்படி சட்டாயப்படுத்தினுர். அவர் இங்கிலாந்தில் இருப்பதுபோன்ற, சட்ட அமைக்குட்பட்ட கோனுட்சியை நிறுவ விரும்பினுர். ஸார் சக்ரவர்த்தி பட்டத்தினின்று விலகியதும் முதலாவது கூட்டுக்கட்சி அரசாங்கம் ஏற்பட்டது. இவர்கள் யுத்தத்தைத் தொடர்ந்துநடத்தினுர்கள். ஆனல் இவர்கள் நீண்டகாலம் நீடித்திருக்கவில்லை. இரண்டாவது கூட்டுக்கட்சி அரசாங்கத்தில் கெரன்ஸ்கி என்பவர் முன்னணியில் வந்தார். இவர் முன்னம் ஜனக்கட்சி என்று பெயர்பெற்றிருந்த அரசியல் புரட்சிக்காரரின் தலைவர். இப்போது இவர் சர்வாதிகாரியானுர்.

இதற்கிடையே, வெளிநாடுகளில் அடைக்கலம் புகுந்திருந்த புரட்சிக்காரர்கள் எல்லாப் பக்கங்களிலிருந்தும் திரும்பிவர ஆரம்பித்தனர். லெனினுடைய கூட்டத்துக்கு ஜெர்மனி வழியாக ருஷியாவுக்குப் போக ஜெர்மனி அரசாங்கத்தார் அநுமதி தந்தனர். இது காரணமாகவே, கெரன்ஸ்கி அரசாங்கத்தைத் தொலைக்கப் போல்ஷிவிக்கர்களுக்கு ஜெர்மனி பணங் கொடுத்ததாக வதந்தி உண்டாயிற்று! போல்ஷிவிக்கர் ஜெர்மனியின் கையாட்களாகவே அப்போது கருதப்பட்டனர். அவர்கள் ருஷியாவில் புகுந்ததும் கெரன்ஸ்கி அரசாங்கம் அவர்களைத் துன்புறுத்தத் தொடங்கியது. முதலாவது அகில ருஷிய சோவியத் காங்கிரஸில், போல்ஷிவிக் பிரதிநிதிகள் சிலரே இடம்பெற்றனர். "பசித்தவர்களுக்கு ரொட்டியும், குடியானவர்களுக்கு நிலமும், நாட்டுக்குச் சமாதானமும்" தங்கள் கொள்கையென்று போல்ஷிவிக்கர் பிரசித்தப் படுத்தினர்.

போல்ஷிவிக்கரின் வெற்றி

பற்பல கட்சியாராலும் அமைக்கப்பட்ட பலப்பலக் கூட்டு அரசாங்கங்களும் நிலையில்லாது போயின. ஜனங்களின் நலத்துக்கான திட்டமொன்றை இவைகள் அளிக்கவில்லை. இக்கட்சியினர் ஓயாமல் தங்கள் கொள்கைகளை விட்டுக்கொடுத்து வந்தார்கள். ஜனங்களுக்கு உழைப்பதாகப் பாசாங்கு செய்தார்கள். நேச தேச வல்லரசுகளின் கருவிகள் ஆனுர்கள். அவர்களைக் கட்டுப்படுத்தி நின்றது ஸார் ஆட்சியின் மீது பகைமை ஒன்றே. போல்ஷிவிக்கர்களோ நாட்டுப்புறங்களுக்கும், தொழிற்சாலைகளுக்கும் சென்று தங்கள் கொள்கைகளைப் பரப்பலானுர்கள். சமுதாயத்தையும், பொருள் நிலையையும் திருத்தி அமைக்க அவர்கள் ஒரு குறிப்பான திட்டம் வகுத்திருந்தனர். முடிவில் அடுத்த ஆண்டு சோவியத் காங்கிரஸிற்குப் போல்ஷிவிக் பிரதிநிதிகள் ஏராளமாக அனுப்பப்பட்டனர். அரசாங்கத்தார் இராணுவத்தின் துணை கொண்டு இவர்களை யொழிக்க முயன்றனர். காலெடின், டார்னிலவ் என்னும் போல்ஷிவிக் தலைவர்கள் விசாரணைசெய்யப்பட்டுத் தண்டிக்கப்பட்டனர். இதனுல் பயன் எதுவும் விளையவில்லை. கெரன்ஸ்கி நேச வல்லரசுகளின் கையாளா யிருப்பதாகப் பாமர ஜனங்கள் கண்டதும் அவரிடம் கடுங் கோபங் கொண்டனர். மற்றொரு புரட்சிக்குக் காலம் ஏற்றதா யிருந்தது. கெரன்ஸ்கி கட்சியாரிலும் ஒரு வகுப்பார் போல்ஷிவிக் கட்சியைத் தழுவினர். கப்பற் படையைச் சேர்ந்த மாலுமிகளின் ஆதரவும் இவர்களுக்குக் கிடைத்தது. இவ்வாறு லெனின் புதிய சமுதாய, பொருளாதார திட்டத்துடனும், பீரங்கி பலத்துணையுடனும் முன்னணிக்கு வந்தார்.

1917-ம் வருஷம் செப்டம்பரில் லெனினின் புரட்சி வெற்றி யடைந்தது. கெரன்ஸ்கி நாட்டை விட்டு ஓடினுர். வக்கீல்கள், மத்திய வகுப்பார் இவர்களின் ஆதிக்கம் ஒழிந்தது. ருஷியப் புரட்சியின் உண்மைத் தலைவர் வந்து சேர்ந்தார். சொத்துரிமை நீக்கப்பட்டது. தொழிலாளர் குடியானவர்களின் ஆட்சி நிலை பெறுத்தப்பட்டது. இவர்களுடைய பிரதிநிதித்வம் வாய்ந்த சபை சோவியத் ஆயிற்று. சோவியத் அரசாங்கத்தார் உடனே ஜர்மானியருடன் சமாதானத்தை நாடினர். பிரெஸ்ட் லிடாவ்ஸ்க் என்னுமிடத்தில் நடந்த மகாநாடு உலகமறிந்த தொன்று. அம்மகா நாட்டில் டிராட்ஸ்கி உலகில் துன்புறுத்தப்படும் எல்லா நாடுகளையும் ஆதரித்துப் பேசிய பேச்சு மிக அற்புதமானது. முடிவில் சமாதான உடன்படிக்கை நிகழ்ந்தது. இது பெரிதும் ஜெர்மனியின் விருப்பத்தின்படி அமைக்கப்பட்டது. ருஷியாவுக்குப் பெரிதும் பிரதிகூலமானது. ஆனுல்ஜெர்மனி, ஆஸ்திரியாவிலுள்ள பாமர ஜனங்களின் மனப்பான்மையை லெனின்நன்கு அறிந்திருந்தார். பசி, பசி என்று கதறிக்கொண்டிருக்கும் அச்சனங்கள் விரைவில் கிளம்பிப் புரட்சி விளைக்கப் போகிறுர்களென அவர் எதிர்பார்த்தார். எனவே ஜெர்மனியின் கொடிய நிபந்தனைகளுக்கு அவர் இணங்கினுர். இதனுல் கெரன்ஸ்கி கட்சியிலிருந்து போல்ஷிவிக்கர் பக்கம் வந்த சிலர் அதிருப்திகொண்டு கலகம் விளைத்தனர். அவர்கள் இதில் தோல்வியுற்றதன் பயனுக ருஷிய அரசியலிலிருந்து அறவே மறைந்தனர்.

புனர் நிர்மாணம்

தொந்திரவுகள் எல்லாம் நீங்கப் பெற்ற போல்ஷிவிக்கர் கார்ல்மார்க்ஸின் திட்டத்தை யொட்டித் தேசத்தைப் புனர் நிர்மாணம் செய்யலாயினர். சொத்துரிமைக்காரர்கள் அழிக்கப்பட்டனர் நிலம் தேசத்துக்குப் பொதுவாக்கப்பட்டது. பொருள் உற்பத்தி விநியோக சாதனங்கள் எல்லாம் சமுதாயத்தின் பொது உடைமைகளாக்கப்பட்டன. சமுதாயமோ பொருளாதார சமத்வம் என்னும் அடிப்படையின்மீது நிர்மாணிக்கப்பட்டது. இப்பெரிய புதிய மாறுதல் மற்ற எல்லா வகுப்பாரையும் உலகம் முழுவதையுமே போல்ஷிவிக்கர்களின் விரோதிகள் ஆக்கிற்று. போல்ஷிவிக்கர் ஆதிக்கத்தை யொழிக்கப் பல கலகங்களும் யுத்தங்களும் தோன்றின. இவ்வளவுக்கும் ஈடுகொடுத்து முடிவில் சோவியத் அரசாங்கத்தார் வெற்றிபெற்று வெளிக்கிளம்பினர்.

போல்ஷிவிக்கர் அதிகாரத்துக்கு வந்ததும் உலகம் முழுவதும் புரட்சித்தீயைப் பரப்ப விரும்பினர். ருஷியாவில் தோன்றிய புரட்சி அலை ஜெர்மனியையும், ஆஸ்திரியாவையும் மூழ்க அடித்தது. மற்ற எல்லா நாடுகளிலும் தொழிலாளர் தைரியம்பெற்றுத் தனிக் கட்சிகள் அமைத்துக் கொண்டனர். சனத்திரள் இயக்கம், தெளிவான அரசியல், சமுதாய, பொருளாதாரத் திட்டங்கள், தீவிரப் புரட்சி முறைகள் இவைகளே போல்ஷிவிக்கர் வெற்றியின் இரகசியங்கள். இவர்கள் தேசத்திலுள்ள எல்லா வகுப்பாரையும் சமாதானப்படுத்திக் கொண்டு முன்னேற முயல்வதில்லை. இஃது இயலாத காரியம் என்பது அவர்களின் கட்சி. அதற்குப் பதிலாக அவர்கள் புரட்சி இயக்கத்தில் எளிதில் சேரக்கூடிய வகுப்பாரிடையே தீவிரமாக வேலைசெய்து அவர்களுடைய உணர்ச்சியைக் கிளப்பும் முறையைக் கைக்கொள்கிறார்கள், சமுதாயப்புரட்சி எதிலும் வேலை செய்து வெற்றிபெறுவோர் சிறு பான்மையோரேயாவர்.

போல்ஷி விக்கர் தாங்கள் ஆதிக்கத்துக்கு வரச்செய்த முயற்சியில் ருஷியாவின் திறமையுள்ள பொது உடைமைக்கட்சியாகத் தங்களை அமைத்துக்கொண்டனர். தொழிலாளரின் சர்வாதிகாரத்தை அவர்கள் ஸ்தாபித்தனர். அதாவது தொழிலாளர் அரசாங்கத்தை மேற்கொண்டது பொருளாதார சமத்வம் என்னும் அடிப்படையின் மீது சமுதாயத்தை மாற்றி அமைக்கும் அதிகாரத்தை உறுதிப்படுத்தினர். அவ்வாறே அவர்கள் சமுதாய அரசாங்கத்தை ஸ்தாபிக்கவும் செய்தனர். ஆனல் பொது உடைமைக்கொள்கை தற்போது ருஷியாவில் முற்றிலும் வெற்றி பெற்றிருப்பதாகச் சொல்ல முடியாது. இதற்குக் காரணம் தங்களுக்குத்தகுந்த சந்தர்ப்பம் கொடுக்கப்படாததே என்று போல்ஷிவிக்கர் கூறுகின்றனர். அவர்கள் ருஷியாவில் அதிகாரத்துக்கு வந்தபோது நாடு நாலுபுறங்களிலும் முற்றுகை விடப்பட்டது. எல்லாப் பக்கங்களிலிருந்தும்சைன்யங்கள் படையெடுத்து வந்தன. உள்நாட்டுக் குழப்பங்கள் வேறு. சொத்துரிமைக் காரர்களும், பழைய அதிகார வர்க்கத்தைச் சேர்ந்தவர்களும், மற்றும் படித்த வகுப்பாரும் போல்ஷிவிக்கர்களுக்குத் தொந்தரவு கொடுத்துவந்தனர். இவைகள் எல்லாவற்றிற்கும் மேலாகப் பயங்கரமான பஞ்சம் தோன்றி நாட்டை வருத்திற்று. இந்தத்தடைகள் எல்லாம் சேர்ந்து பரிபூரண பொது உடைமைக் கொள்கையின் மீது சமுதாயத்தைப் புனர் நிர்மாணம் செய்வதை இயலாமற் செய்தன.

(தொடரும்)

சுசீந்திரம் சத்தியாக்கிரஹம்

சுசீந்திரம் சத்தியாக் கிரஹக் கமிட்டியார் நமக்கு அனுப்பியுள்ள அறிக்கையின் சாரம் பின் வருமாறு:— மேற்படி கமிட்டியின் இரண்டாவது கூட்டம் 26-1-26 ல் கோட்டாறு சத்தியாக்கிரக விடுதியில் ஸ்ரீமான் பி. சுப்பிரமணிய ஐயர் B. A. B. L. அவர்களின் தலைமையில் நடைபெற்றது பலரைவான்கள் அங்கத்தினராகச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். அன்றையதினத்திலிருந்து தொண்டர்களுக்கு உணவு அளிக்கவும் ஜனவரிமீ 29உயன்று சத்தியாக் கிரஹத் தொடங்கவும் தீர்மானிக்கப்பட்டது. அவ்வாறே 29உயன்று இருபது சத்தியாக் கிரஹத் தொண்டர்கள் விபூதி, சந்தனம் அணிந்து, தூய வெள்ளைக் கதர்ச்சட்டைகளும், குல்லாக்களும் தரித்து, தேசியக் கொடிதாங்கிச் சுசீந்திரத்துக்குப் புறப்பட்டார்கள். வழிநெடுக தேசிய கீதங்கள் பாடிக் கொண்டு சென்றுர்கள். விடுதியிலிருந்து தடுக்கப்பட்ட சாலைகள் இரண்டு மைல் தூரத்தில் இருக்கின்றன. அங்கு நின்றிருந்த எதிர்க் கட்சியினரில் பெரும் பாலோர் 15 வயதுக்குட்பட்ட சிறுவர்களாயிருந்தது வருந்தத்தக்க காட்சியாயிருந்தது. இரண்டொரு கிழவர்களும் இருந்தனர். மிகச்சில பிராமணர்கள்தான் காணப்பட்டனர். முதலில் இருந்த வயதான பிராமண நல்லார் சிலர் நேரமாக ஆகப் போய்விட்டனர். தொண்டர்களின் தலைவர் சவர்ண ஹிந்துவாயிருந்தபோதிலும் அவர் தொண்டர் உடை தரித்திருந்தபடியால் கோவிலுக்குப் போகும் சாலைக்குள் விடப்படவில்லை. எதிர்க்கட்சியினர் சிலர் ஆபாச மொழிகளை உபயோகித்தனர். மற்றப்படி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த பெருங் கூட்டம் முழுதும் சத்தியாக்கிரஹிகளிடம் அநுதாபங்கொண்டதாயிருந்தது. சத்தியாக்கிரஹம் செய்யவேண்டிய இடத்திலிருந்து இரண்டு மைல் தூரத்திலுள்ள சத்தியாக்கிரஹ விடுதி ஒரு விசாலமான தென்னந் தோப்பில் அமைக்கப்பட்டிருக்கிறது. சைவ உணவு மட்டுமே அளிக்கப்படுகிறது. பறையர் பிராமணர் முதலிய அனைவரும் சேர்ந்து உணவு கொள்வதுடன், சமையல் வேலையிலும், பரிமாறும் வேலையிலும் கலந்து கொள்கின்றனர்.

"ஊழியன்" அவதூறு வழக்கு

(ஒரு நிருபரிடமிருந்து)

"ஊழியன்" ஆசிரியர் ராய. சொக்கலிங்கன் மீது காரைக்குடி ராவ்பகதூர் ஆவி. பழ. சிதம்பரச் செட்டியார் தேவகோட்டை சப்டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட்டிடம் தொடுத்திருந்த அவதூறு வழக்கை வேறு கோர்ட்டுக்கு மாற்ற வேண்டுமென்று சில காரணம் காட்டி எதிரியால் இராமனுதபுரம் ஜில்லாமாஜிஸ்ட்ரேட்டிடம் செய்து கொள்ளப் பட்டிருந்த மனுவின் பேரில் பிப்ரவரிமீ ௧௨ வாயிதா ஏற்பட்டிருந்தது ஜனவரி முப்பதாந் தேதிக்கு மாற்றப் பட்டு, அன்று மதுரையில் அவ்வழக்கை இராமனுதபுரம் சப்டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுக்கு மாற்றப் பட்டுவிட்டது.

தித்திக்கும் நாவல்கள்!

சரோஜனி	2-0	மாணிக்கவல்லி	1-0
வசந்தமல்லிகா	1-8	ஏமகாதகன்	0-8
விலாசவதி	3-0	அம்பலவாணன்	1-4
மேனகா	8-0	திருக்கழுக்குன்றம்	1-8
கனகாம்புஜம்	2-12	அமிர்தகுமாரி	1-4
காதல்மயல்	1-8	ரங்கநாயகி	1-4

எம். எஸ். ராமுலு & கம்பெனி,
(4) ராயபுரம், மதராஸ்.

முதல் இரண்டு சஞ்சிகைகள் தயாராய்விட்டன

அருணகிரிநாதர் அருளிச்செய்த
திருப்புகழ்
விருத்தி உரை

(உரை ஆசிரியர் :—பி. எஸ். சுப்பிரமணியர், எ.எ.,)

முதல்தொகுதி :: 6-படைவீடுகள்

டெமி அளவில் **64**-பக்கங்கள்கொண்ட **12**சஞ்சிகைகளாக வெளிவருகிறது

வருஷ சந்தா (தபாற்செலவுடன்)

		வெளியூர்	உள்ளூர்
பெதர் வெயிட் எனும் உயர்ந்த காகிதப் பதிப்பு	ரூ.	6—0—0	5—4—0
,, தனிச் சஞ்சிகை	,,	0—9—0	0—8—0
சாதாரண கனமான கிளேஸ் காகிதப் பதிப்பு	,,	4-12-0	4—0—0
,, தனிச் சஞ்சிகை	,,	0—7—0	0—6—0

விலாசம் :— அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.

இனும் ! இனும் ! முற்றிலும் இனும் !

'C' ரிஜிஸ்டர் டைம்பீஸ் இனும்



'C' Regd. டைம்பீஸ் இனும்

எங்களின் "தாராலீவர் 8-காரட்டு ரோல்டுகோல்டு பாக்கட் கடியாரம் வாங்கு கிறவர்களுக்கு "C" டைம்பீஸ் இனுமாக அனுப்பப்படும். விலை பாக்கட் கடியாரம் 1-க்கு இனுமுடன் ரூ 5. இக்கடியாரத்தில் உள்ள டையலின்பேரில் ஐந்து வருஷம் உத்திரவாதம் என்று அச்சிடப்பட்டிருக்கிறது முக்கியங்கள்.

காட்டன் வாச் கம்பெனி, தபாற்பெட்டி நெ. 265, மதராஸ்,

ஓர் ஆச்சரியம்! ஓர் விநோதம்!!

பாக்கெட்டி டிடக்டிவ் என்னும் (துப்பு அறியும் இரகசியக் கருவி)

இந்தக் கருவியின் மூலமாக ஒருவர் பிற்காலத்தில் நிகழக்கூடிய விஷயங்களையும், விரோதிகளின் செய்கைகளையும், காதலிகள் அந்தரங்கத்தில் செய்யும் காரியங்களையும், அதிக ஸுலபமாக இதன் மூலமாய் அறிந்துகொள்ளலாம். இதுவோர் சிறிய கருவியாதலால் இதை சட்டப்பையில் வைத்துக்கொண்டு எந்த இடத்திற்கும் எடுத்துச் செல்லக்கூடும்.

இதன் விலை ரூபா 1—8—0 3-க்கு விலை ரூபா 4—0—0

THE EAST INDIA NOVELTY STORES, 19-th Beet, Madras.

வரகவி - திரு. அ. சுப்ரமண்ய பாரதியார் எழுதிய நூல்கள்

ஜடாவல்லவர்

அல்லது

இல்லற இன்ப ரகசியம்

இப்புத்தகத்தைப் படிக்கும் ஆண், பெண், சிறுவர், சிறுமியர் முதலிய அனைவரும் தம்தம் குடும்பங்களிலும் வாழ்நாட்களிலும் கண்கூடாகக் கண்டு அநுபவிக்கும் அநேக இல்லற வாழ்க்கையின் இரகசியங்களை இதன் கண் காணக்கூடும்.

கிரௌன் 600 பக்கம்] விலை ரூபா **2—8**

பரதன் அல்லது உத்தம சகோதரன் விலை அணு 0 12

ஆண், பெண், சிறுவர், சிறுமியர் முதல் யாவரும் பாரதத்தை எளிதில் வாங்கிப் படித்துப் பயனடையும் பொருட்டு, மூன்று புத்தகங்களாகப் பிரித்துத் தெளிய நடையில் எழுதிக் குறைந்த விலையும் வைக்கப்பட்டிருக்கிறது.

பாண்டவர் பாலலீலை (படங்களுடன்)	ரூ 0 10
பாண்டவர் வனவாசம்	ரூ 0 12
பாண்டவ விஜயம்	ரூ 1 0

(ஒரே தடவையில் மூன்று புத்தகங்களையும் ஆர்டர் செய்கிறவர்களுக்கு ரூ 2)

பச்சையப்பன் காலேஜ் தமிழ்ப்புலவர் மணி. திருநாவுக்கரசு முதலியாரின் நூல்கள்

பாமணிக்கோவை மூன்று பாகம்	ரூ. 1—10—0
உரைமணிக் கோவை (மூன்று பாகம்)	ரூ. 1—8—0
புலவர் கதை (இரண்டு பாகம்)	ரூ. 1—8—0
திருக்கண்ணப்பன் (படங்களுடன்)	ரூ. 0—5—0

K. பழனியாண்டிப் பிள்ளை கம்பெனி,
புத்தக வியாபாரிகள், 583, டைகிராப்ட்ஸ் ரோடு,
திருவல்லிக்கேணி, சென்னை.

"I FIND IT CERTAINLY SUPERIOR TO ORDINARY SILK SARI"

ஸ்ரீமதி கமலாதேவி, எழுதுவது :—"தினசரி உபயோகித்து வரும் புடவைகளில் 'முத்தையாஸ்' கிளாவர் கரை பட்டுப்புடவையை நெடுநாளாக உபயோகித்து வந்திருக்கிறேன். இப்புடவை மற்ற விடங்களில் தற்சமயம் குறைந்த விலைக்கு கிடைக்கும் போலி கிளாவர் கரை புடவையைவிட பதின் மடங்கு மேலானது என்பது நிதர்சனமாயிற்று. இனி 'முத்தையாஸ்' கிளாவர் கரை புடவையையே சாதாரண உடைக்குப் பதிலாக தினசரி உபயோகிக்க உத்தேசித்திருக்கிறேன்"

12 முழம் X 44	புடவை 2-க்கு	ரூ	35	0	0
16 முழம் X 44	ஷை	ரூ	48	0	0
18 முழம் X 44	ஷை	ரூ	55	0	0

கே. எஸ. முத்தையா & கம்பெனி,
ஸில்க் ஹவுஸ், ஸ்ரீ காசி.

கோட்டாறு, தமிழ்ச்சித்த வைத்தியம், வைத்தியபதி
S. S. சுந்தரம் பிள்ளை
அவர்களால் தயார் செய்யப்பட்ட திவ்விய

ஔஷதங்கள்.

1. இரும்பு லேகியம்.

இது சாஸ்திர முறைப்படி தயாரிக்கப்பட்டதும் இரத்த விருத்திக்கும், இரத்த சுத்திக்கும், தாதுபுஷ்டிக்கும் கைகண்டதுமான ஓர் விசேஷ லேகியம். இது பித்தம், சோகை, காமாலை, பெருவயிறு, சத்திகுன்மம், மூச்சு முட்டல், கைகால் அசதி, தலைச்சுற்று, வாய்ப்புண் முதலிய நோய்களைக் கண்டிப்பதோடு தேகத்திற்கு நல்ல ஆரோக்கியத்தையும் ஊக்கத்தையும் அளிக்கிறது. சிலரிடத்து வழக்கமாக இருந்து வருகிற மண் சாம்பல் முதலியன தின்னும் வழக்கத்தை அதே நிமிஷத்தில் அடியோடு நிறுத்துவதோடு உடம்பைப் போஷித்து திடப்படுத்தி தேக காந்தியையும் கொடுக்கிறது. இதுவரையிலும் தனக்கு ஒப்புவமையில்லாது உயர்வு பெற்றுள்ளது. ஒரு முறை பரீட்சித்துப் பார்த்து அதன் உண்மையை உணருக.

12 நாள், 24 நேர மருந்து விலை நபா 3—8—0
6. ,, 12 ,, ,, ,, 2—0—0

2. சுகபேதி நெய்

இது மலக்கட்டை மாற்றுவதற்கு சிறந்த ஓர் மருந்தாகும். குழந்தைகள் முதற்கொண்டு வயோதிகர்கள் வரையில் யாவராலும் உபயோகிக்கக் கூடியது. முக்கியமாக மூலரோகிகட்கு அடிக்கடி மூலத்தில் உண்டாகிற கிருமியரிச்சல், மேகம், வாய்வு முதலியவற்றைத் தீர்த்து மலபந்தத்தை யறுத்து சுகபேதியை யளிக்கிறது. அவுன்ஸ் ஒன்றுக்கு விலை நபா 1—0—0

3. கரைப்பன் நெய்

குழந்தைகளுக்குண்டாகிற சகலவிதமான கரைப்பன்களையும் சொறி சிரங்குகளையும் மூன்றே நாட்களில் சுகப்படுத்தக் கூடிய ஓர் நிகரற்ற நெய்யாகும். குழந்தைகளைத் தவிர மற்றுள்ளோர்களாலும் உபயோகிக்கத் தக்கது. இதனை உள்ளும் புறமும் உபயோகிக்கலாம் அவுன்ஸ் ஒன்றுக்கு விலை நபா 0—8—0

மேற்கண்ட மருந்துகள் நேரிலும், வி. பி. மூலமாகவும் அனுப்பித் தரப்படும். மற்றுள்ள விவரங்களுக்கும் மருந்துகளுக்கும் நேரில் எழுதி யறிந்து கொள்ளலாம்.

ரிஜிஸ்டர் செய்தது.

பொன் வெள்ளி மெடல்கள்பெற்ற மெடிகேடட் No. 1. ஏ.ஜே

பரிமள மூக்குத்தூள்

இந்த பெயர்பெற்ற No. 1 ஏ. ஜே. பரிமள மூக்குத்தூள் நூதனமாய் கண்டுபிடிக்கப்பட்டது. இது வெகுபேர்களால் வாங்கி உபயோகித்து ஆயிரக்கணக்கான நற்சாட்சிப் பத்திரம் பெற்றிருக்கிறது. இந்த மேலான தூளினால் தீரும் வியாதிகளாவன :—ஜலதோஷம், பீனிசம், ஒற்றைத்தலைநோய், மண்டைகுத்தல் எல்லா வியாதிகளையும் சொஸ்தப்படுத்திவைக்கும். இதை உபயோகித்துப் பாருங்கள்.

புட்டி 1-க்கு 0-4-0 டஜன் 1-க்கு 2-4-0 சேர் 1-க்கு (24 தோலா) 1-9-0

கனதனவான்களுக்குத் தெரிவிப்பது

No. 1 A j. சாயபு பட்டணம்பொடியை வாங்கி உபயோகியுங்கள். இந்தப்பொடி கம்பெனியானது 30 வருஷ காலமாக மதராஸ் சவுகார்பேட்டையில் நடந்துவருகிறது. கனதனவான்களுக்குத் தெரிந்திருக்கும். ஆகையால் பலவாறு கூறுவதில் பிரயோசனமில்லை. ஒரு தடவை தருவித்து பார்த்தால் உண்மை விளங்கும்.

சாதாபொடி வீசை 1-க்கு 3-4-0. மேற்படி ½ வீசை 60 தோலா 1—11—0
மேற்படி சேர் 1-க்கு 0—11—0

இந்த விலைக்கு அகப்படும். மொத்தமாய் தருவிக்கும் வியாபாரிகளுக்கு தக்க கமிஷன் கொடுக்கப்படும். தபால் மூலம் எழுதி தெரிந்துகொள்ளலாம்.

சீ. ஜெயினுலாப்தின் சாயபு,
நெ. 104. 105, சங்குசாலை வீதி, சௌகார்பேட்டை, சென்னை

இனும் ! இனும் !!

வெகுநாள் உழைக்கக்கூடியது
பார்ப்பவர்கள்

150ரூ. மதிப்பிடக்கூடியது

5 வருஷம் உத்தரவாதம் தரப்படும்



8 மூலையுள்ளதும் ஓரத்தில் அரும்புள்ளதும் அசல் பொன்முலாம் போட்ட மூடியுடன் கடியாரத்தின் மேல் சுற்றிலும் வெகு அழகாக அமைக்கப் பெற்றது.

கடியாரத்துடன் கையில் அணியும் உயர்ந்த தோல் பட்டையும் அழகான பெட்டியும் இனுமாக அனுப்பப்படும்.

கடியாரத்தின் விலை ரூ. 7-8-0
தபால் செலவு வேறு.

ஜலால் அண்டு ஸன்ஸ்,
61, ராட்டன்பஜார் ரோட், பார்க்டவுன் மதராஸ்.

மின்சார ரசம் பஞ்சாங்கம்

1926-வருஷத்திய காலண்டரும், குரோதன—அக்ஷய வருஷங்களின் பஞ்சாங்கமும் ஒருங்கே அமைத்து அச்சிடப்பட்டுள்ள காலண்டர்—பஞ்சாங்கம் வெளியாகிவிட்டது

இவ்வருஷம் கான்பூரில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் அக்கிராசனராகிய ஸ்ரீமதி சரோஜனி தேவியின் சமீபத்தில் எடுத்த ஆப்டோன்படம் கிளேஸ் காகிதத்தில் அழகாக முதல் பக்கத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. 12-மாதங்களின் பஞ்சாங்கமும், வாரம், திதி, நக்ஷத்திரம், யோகம், கௌரி பஞ்சாங்கம் முதலிய முக்கிய பல விஷயங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. சுவற்றில் மாட்டும் 9-தாள்கள் அதாவது 18-பக்கங்கள் கொண்டது. எல்லோரும் இதை வாங்கக்கூடிய வகையில் வெகு சகாயமான விலைக்கு விற்று வருகிறோம்.

அடியில் கண்டவாறு தபால் தலைகள் அனுப்பியோ அல்லது முன்பணமாக மணியார்டர் செய்தோ ஆர்டர் செய்பவர்களுக்கு அடியில் காட்டியுள்ள பிரகாரம் காலண்டர்-பஞ்சாங்கம், கம்பெனியாரின் தபால் செலவில், புக் போஸ்டிலாவது, ரயில்வே பார்ஸலிலாவது அனுப்பப்படும். எக்காரணத்தை முன்னிட்டும் பஞ்சாங்கத்தை வி. பி. யில் அனுப்புவது சாத்தியமில்லையாகையால் முன்பணம் அனுப்பாத ஆர்டர்கள் சிறிதும் கவனிக்கப்படமாட்டா. அடியில் கண்டுள்ள விவரங்கள் தவிர காலண்டர் சம்பந்தமாய் வேறு எவ்வித கடிதப்போக்குவரத்துகளும் வைத்துக் கொள்ளப்படமாட்டாது.

தபால் தலைகளோ, மணியார்டரோ அனுப்பவேண்டிய விவரம்

1 காலண்டர்-பஞ்சாங்கம்	0 1 6	12 காலண்டர்-பஞ்சாங்கம்	0 13 0	50 காலண்டர்-பஞ்சாங்கம்	2 8 0
6 ,,	0 7 0	25 ,,	1 8 0	100 ,,	4 8 0

வெளிநாடுகளுக்கு 100-காப்பிகளுக்குக் குறைந்த ஆர்டர்கள் கவனிக்கப்படமாட்டா. ஒவ்வொரு 100-பிரதிகளுக்கும் தபால் சார்ஜுக்காக வென்று ரூ. 3-8-0 பிரத்தியேகமாய் சார்ஜ் செய்யப்படும்.

மின்சார ரசம் ஆர்டர் செய்பவர்கள் தங்களுக்குப் பஞ்சாங்கம் தேவையென்பதையும் இப்பத்திரிகையின் பெயரையும் குறிப்பிட்டெழுதினால் டைரி காலண்டர் இனுமாக அனுப்பப்படும்.

கிடைக்கும் விலாசம் :— **மின்சார ரசம் கம்பெனி லிமிடெட், சேலம். (S.I.)**

அமிர்தாஞ்சன்

எல்லா நோவுகளையும் வலிகளையும் குணப்படுத்துகின்றது.

புட்டி 1-க்கு விலை அ. 10.

எல்லா விடங்களிலும் விற்கப்படும்

அமிர்தாஞ்சன் டிபோ,
மதராஸ், அண்டு பம்பாய்.

ஒரு நாளைக்கு ஒரு அணமட்டும் செலவே

ஆதங்க நிக்ரஹ மாத்திரையை

16 நாளைக்கு உபயோகித்தால், காப்பு தளர்ச்சியுற்றவர்களுக்கும், மூளை பலவீனமாயிருப்பவர்களுக்கும் விந்திரமான ஆரோக்கியத்தை அளிக்கும்.

புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டது .45 வருடங்களாக எல்லோராலும் மதிக்கப்பட்ட டானிக் இதுவாயிருப்பதால் பெருமையும் உத்திரவாதத்தையும் வெளிப்படுத்துகிறது.

ஆதங்கநிக்ரஹ ஔஷதாலயம், 26, பிராட்வே, மதராஸ்.

ஸ்ரீ பார்த்தஸகன் அவர்கள் இயற்றிய

"சத்திய விரதன்".

என்னும் அருமையான தமிழ் நாவல்

வா. வே. ஸு. ஐயர், சேரமாதேவி, எழுதுகிறார் :— இது தற்காலத்தில் வெளிவரும் ரேனால்டு நாகரிகங்களை மறைத்து கம் நாட்டு நாகரிகம்போலக் காட்டும் போலி நாவல்களைப் போன்ற கதையன்று. கதை துவக்கத்தினின்று முடிவுவரை சுவற்சி நிரம்பியதாயிருக்கிறது.

விலை அணு எட்டு. உடனே எழுதுங்கள்

ஸ்ரீனிவாஸ ராகவாசாரி, மிராசிதார், வெங்கரை போஸ்டு, (via) Pugalur, S. I. Ry.

இனும் ! **1926** வருஷத்திய இனும் !!

கியாலண்டர்

1½ அணு தபால் ஸ்டாம்பு அனுப்புகிறவர்களுக்கு கியாலண்டர் இனும்

எஸ். ராதா அண்டு கம்பெனி, 176, தங்கசாலை, மதராஸ்.

Sole Agents:—
S. Vaidya & Co.,
Park Town,
MADRAS.

Try To day!

15-மாத்திரை	0-1-0	100-மாத்திரை	0-4-0
40-மாத்திரை	0-2-0	260-மாத்திரை அழகிய பெட்டியுடன்	1-0-0
65-மாத்திரை பெட்டியுடன்	0-4-0	1000-மாத்திரை	2-0-0

எஸ். வைத்யா அண்டு கம்பெனி,
201, தேவராஜமுதலி தெரு, பார்க்டவுன், மதராஸ்.
கிளை ஆபீஸ்கள் :—சைனபஜார் மதராஸ்.
திரிச்சிக்கோட்டை.

திருமூலர் திருமந்திரம்

பல பிரதிகளைக்கொண்டு பரிசோதித்ததும், இல அரும் பாடல்களை (*) இக்குறியிட்டு விளக்கியும், இறுதியில் செய்யுள் முதற்குறிப்பகராதி சேர்த்தும் நல்ல காகிதத்தில் அழகுபெற அச்சிட்டு கவிகோ பயிண்டு செய்யப்பட்டுள்ளது. விலை ரூபா 2-4-0

முருகவேள் புத்தகசாலை, இராயப்பேட்டை, சென்னை.

விநாயகர்

பனுவல் திரட்டு

விநாயகக்கடவுள் சம்பந்தமாக ஆன்றோர் அருளிச்செய்துள்ள பல நூல்களினின்றும் திரட்டப்பட்டது. பூஜா காலங்களில் ஓதுதற்குரிய சிறந்த நூல். நல்ல காகிதத்தில் அச்சிடப்பட்டது.

விலை அணு 6.

சிவபுண்ணியத்தெளிவு

இதில் சிவபுண்ணியஞ் செய்வோர் அடையும் பலன்கள் இன்ன இன்னவென்று ஓதப்பட்டுள்ளன.

விலை அணு 3.

கந்தரனுபூதி

மூலமும் உரையும்

விலை அணு 8

முருகவேள் புத்தகசாலை,
இராயப்பேட்டை, சென்னை.

சுவயம் கதர்

ச. இராஜகோபாலாச்சாரியார்
நடத்தும் புதுப்பாளையம் காந்தி
ஆசிரமத்தில் உண்டாகும்
கதர் தினுசுகள்.

புதுப்பாளையம் துப்பட்டி: இரட்டையிழை நல்ல உறுதி. 5½ முழ நீளம் 3 முழ அகலம் விலை ரூ. 2—12—0.

புதுப்பாளையம் துண்டு: இரட்டையிழை பின்னல் நெசவு, மிக உறுதியானது.
3½ முழ x 28 அங்குலம் விலை ரூ. 1- 0-3
2½ முழ x 28 அங்குலம் விலை ரூ. 0-12-3

புதுப்பாளையம் சொக்காய்த்துணி: கோர்த்தியான வெள்ளை இரட்டையிழை கதர், தினப்பிரதி உபயோகத்திற்கு நல்ல துணி 2 முழ அகலம் விலை கெஜம் 0-10-6.

சாதா வெள்ளை பீஸ்: ஷர்ட்டுகளுக்கு 1¼ கெஜ அகலம் தினுசுகள் விலை கெஜம் 0-9-3
1⅜ கெஜ அகல தினுசுகள் ,, 0-10-6
1½ கெஜ அகல தினுசுகள் ,, 0-11-6

பர்மா தமிழர்களுக்கு அறிவிப்பு:— இரங்கூன் காங்கிரஸ் கதர் நிலயத்தில் புதுப்பாளையம் ஆசிரம துணிகள் கிடைக்கும். விலைகள் கப்பல்முதலிய சார்ஜுக்காகக் கொஞ்சம் அதிகப்பட்டிருக்கும்.

தபால் விலாசம்:—
காரியஸ்தர், காந்தி ஆசிரமம்,
திருச்செங்கோடு போஸ்டு.

நான்காம் பதிப்பு! வெளியாய் விட்டது!!

சரீர மர்ம சாஸ்திரம்

இந்த அருமையான நூலில் ஸ்திரீ, புருஷர், அனுபவிக்க வேண்டிய சம்சார சுகம், குடும்ப ரஹஸியம், மணவாழ்க்கையின் மர்மங்கள் அனைத்தும் ததும்பிக்கிடக்கின்றன. 54-படங்களுடன் 200- பக்கங்கள் கொண்ட பெரிய புஸ்தகம் 1-க்கு விலை ரூபா 1.

மாணிக்க விலாசம் பிரஸ்,
அருணசல முதலி வீதி, மதராஸ்.

நமது சிங்கப்பூர் ஏஜண்டுகள்

கே. எஸ். ஏ. எஸ். பிரதர்ஸ்,
கமிஷன் ஏஜண்டுகள்,
புஸ்தக வியாபாரிகள்,
176, செலிங்கிரோட், சிங்கப்பூர்

பிரிட்டிஷ் அண்டு
அமெரிக்கன் நியூஸ் கம்பெனி,
புஸ்தக வியாபாரிகள்,
6, பாடரிரோட் சிங்கப்பூர்

இனும்! இனும்!!

"தமிழர்"

ஓர் இனிய
தனித் தமிழ் மாதப்பட்டிகை

முயற்சியுடையார் ஒவ்வொருவரும் மாதம் ரூ. 100-ம் அதற்கு மேலும் சம்பாதிக்கலாம். தமிழ் நாடு முழுதும் ஏஜண்டுகள் தேவை.

அறிவு, ஆற்றல் ஆராய்ச்சித் துறைகளிற் சிறந்த அறிஞர்களால் எழுதப்பெற்ற பல வேறு அருமையான கட்டுரைகளைக்கொண்டு தமிழர்களின் முன்னேற்றத்திற்கான பல்வேறு துறைகளையும் இச்சஞ்சிகையில் ஒருங்கே காணலாம். டெமி ஆக்டவோ பெரிய அளவில்48-பக்கங்களுக்கு மேல் வெளிவருவது

ஒரு ஆண்டுக் கையொப்பம்

இராயல் பதிப்பு உள்நாட்டிற்கு	ரூபா	2-8-0
,, வெநாட்டிற்கு	,,	3-0-0
சாதாரண பதிப்பு	,,	2-0-0
ஆயுட்கால சந்தா	,,	25-0-0
தனிச்சஞ்சிகை	,,	0-4-0

5 சந்தாதாரர்களைச் சேர்த்து முன் பணம் அனுப்புகிறவர்களுக்கு ஒரு ஆண்டுச் சஞ்சிகை இனும். 10 சந்தாதாரர்களைச் சேர்த்துப் பணம் அனுப்புகிறவர்களுக்கு ரூ. 5/-பெறுமானமுள்ள எமது தமிழ் விலைப்பட்டியலிற் கண்ட சாமான்கள் இனும்.

அமைச்சர்,
"தமிழர் நிலையம்"
தெப்பக்குளம், திருச்சிராப்பள்ளி.

பாரதியாரின் கீதங்கள்

முதல் பாகம் ...	ரூ	1 0
இரண்டாம் பாகம்	...	1 0
மூன்றாம் பாகம்	...	0 10
4-ம் பாகம் (ஞானரதம்)	...	0 8
பாஞ்சாலிசபதம் (காவியம்)....		0 12

முருகவேள் புத்தகசாலை
இராயப்பேட்டை சென்னை.

வெளியாகி விட்டது! வெளியாகி விட்டது!!

"பச்சைமோதிரத்தின் மர்மம்"

ஓர் இனிய துப்பறியும் தமிழ் நாவல். இதுவரை இம்மாதிரியான திடுக்கிட்டு, ஆச்சரியப்படக்கூடிய நாவல் வெளிவந்ததே இல்லை.

225 பக்கங்கள் விலை ரூ. 1. நேர்த்தியான அச்சு

லக்ஷ்மிப் புத்தகசாலை, தபால்பெட்டி 99, சென்னை.

கலியாணகாலங்களிலும் பண்டிகைகாலங்களிலும்
மரியாதை முதலியவை செய்வதற்கு

தகுந்த உடைகள் வாங்குமிடம்.

நாங்கள் எல்லாவித ஜவுளி தினுசுகளும், மனதுக்குத் திருப்திகரமாயும், தற்போதைய நாகரீகத்திற்கு ஏற்றதுமான எல்லா தினுசு காசிப்புடவைகள், திப்பட்டாக்கள், வெள்ளைவேஷ்டிகள், உருமால்கள், பட்டு தினுசுகள், பெங்களூர், காஞ்சிபுரம், சுதேசி, பார்சி சேலைகளும், ரவிக்கைகளும், மதுரை புட்டாச்சேலைகளும், கறுப்பு ஹோம்ரூல்சேலை இன்னும் அநேக ரகங்களும் வரவழைத்திருக்கிறோம்.

விலை நயம். ஒருதடவை வந்து பாருங்கள். நம்பிக்கையான இடம்.

வெளியூர் ஆர்டர்கள் உடனுக்குடன் கவனித்து அனுப்பப்படும். கேட்லாக் இனும்.

எஸ். ஆர். பானுசாமி ஐயர் & சன்ஸ்
சில்க் ஹவுஸ், 83, நைனியப்பன் நாய்க்கன் தெரு,
பார்க்டவுன், சென்னை.

ஒரே மாத்திரை! ஒரே மணியில் குணம்!!

ஆயுர்வேத சாஸ்திரி அஷ்டாவதானி மிஸ்டர் K. V. சுப்பராவ் M. D. A.
(ஆல் தயார் செய்யப்பட்ட)

காமாம்ருதம்

இந்த ஔஷதம் தாது புஷ்டிக்காகவே தயார் செய்யப்பட்டது. ஒரு மாத்திரை சாப்பிட்ட 1-மணி நேரத்தில் வீரியசக்தியை விருத்தி செய்து எவ்வளவு பலஹீனமானவர்களையும் பலவான்களாகச் செய்யும். எவ்விதமான நரம்பு தளர்ச்சியையும் போக்கி, உலக சுகத்தை யனுபவிக்கச் செய்யும் ஒரு அருமையான மருந்து, வீரிய சக்தியை இழந்தவர்களுக்கு 15-நாளில் பூர்ண குணம் தரும். மருந்தை வெளிக்கும் பூசலாம். உபயோகிக்கும் விதம், மருந்துடன் அனுப்பப்படும்.

20 மாத்திரைகள் விலை ... ... ரூபா 2 0 0

விலாசம்:— அமிருதாச்சிரமம், நெ. 17, எல்லூர் கிருஷ்ணா ஜில்லா.

இனும் **The New Phonetic Book Rs. 1000**
ஆச்சரியம்! தி நியூ பொனிடிக் புக் ஆச்சரியம்!!

இந்த புஸ்தகத்தினுல் ரகஸ்ய விஷயங்கள் ஒருவருக்கொருவர் எழுதவும், மர்மங்கள் வெளிவராமல் இருக்கவும், அதில் எழுதிய சங்கதிகளை ஒருவராலும் கண்டுபிடிக்க முடியாததும், இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு, மலையாளம் இந்த நான்கு பாஷையிலும் அச்சிடப்பட் டிருக்கிறது. எழுதவும், படிக்கவும், உபாத்தியாயர் இல்லாமலே ஒரே நாளில் கற்றுக்கொள்ளலாம்.

இதுமாதிரியான புஸ்தகம் இதுவரையில் வெளிவந்ததில்லை. உடனே எமது விலாசத்துக்கு ஆர்டர் செய்யுங்கள்.

இனும் ரூபா 1000

விபரம் புஸ்தகத்தில் காணவும். தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

இதன் விலை ரூ. 1-0-0. வெளி நாட்டுக்கு ரூ. 1-8-0

டி. எம். மாணிக்கவேலு அண்டு கம்பெனி,
தபால் பெட்டி நெ. 315, மவுண்ட் ரோடு, மதராஸ்.

"நவசக்தி" ஆசிரியர்

திரு. வி. கலியாணசுந்தர முதலியார்
இயற்றிய நூல்கள்.

சைவத்தின் சமரசம்

இந்நூற்கண் சமயத்தின் இயல்பு இஃது என்பதும், எல்லாச் சமயங்களும் ஒரு கடவுளையே பல பெயரால் பல வழியில் போற்றுகின்றன என்பதும், சமயங்கள் பலவாய்க் கிடப்பினும் அவைகள் யாவும் சமரசத்தையே குறிக்கொண்டு நிற்கின்றன என்பதும், அச் சமரசமே சைவம் என்பதும், பிறப்பை யொட்டி உயர்வு தாழ்வு பாராட்டாமை, கைம்மாறற்ற பணி, பிறர் குற்றம் பொறுத்தல், பாவ மன்னிப்பு முதலியன சைவ சமயத்தில் சிறப்பாக விருக்கின்றன என்பதும், அருள் - கருணை - இரக்கம் - தயை உள்ள விடங்களிலெல்லாம் சைவம் மிளிரும் என்பதும், சைவம் ஒரு சமயம் அன்றென்பதும் பிறவுஞ் சொல்லப்பட்டிருக்கின்றன. நல்ல காகிதத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. விலை அணா 8.

முருகவேள் புத்தகசாலை,
இராயப்பேட்டை, சென்னை.

விவேக - - போதினி

18-வருஷ காலமாக தமிழபிமானிகளுக்கு மதிக்கப்பெற்றது. மிக்க அருமையான விஷயங்களை கொண்டது. எவ்வயதினர்க்கும் உபயோகமான சிறந்த வியாசங்கள் அடங்கியது. வருஷ சந்தா உள்நாட்டுக்கு ரூ. 5-ம், வெளி நாடுகளுக்கு ரூ. 6-ம் 17-ம் தொகுதி முதல் சந்தாதாரர்க்கு 1-8-0 விலையுள்ள புத்தகங்கள் இனுமாய் அளிக்கப்படுகின்றன. 5-அணா தபாற் தலைகள் அனுப்பி மாதிரி சஞ்சிகைபெறலாம். சந்தாதாரராகும் பக்ஷத்தில் இந்த 5 அணாவை கழித்துக் கொண்டு பாக்கி ரூபாயை அனுப்பினால் போதுமானது. இச்சிறந்த பத்திரிகையை ஆதரித்தல் அவசியம்.

மானேஜர்,
விவேக போதினி,
மயிலாப்பூர், சென்னை.

ஸ்ரீ மந்திரகவசங்கள்.

இந்த தாயித்துகளை சகலரும் அணிந்து சுகப்படுங்கள்

உத்தியோக விருத்திக்காக	ரூ.	2-0-0
வியாபார விருத்திக்காக	,,	3-0-0
சந்தான விருத்திக்காக	,,	5-0-0
சகலகாரிய சித்திக்காக	,,	2-0-0
தொழில் பயிர் விருத்திக்கு	,,	3-0-0
கிரகதோஷ நிவர்த்திக்கு	,,	7-0-0
கேசுகளில் ஜயம்பெற	,,	3-0-0
சோதிட பலன்கள் 5 கேள்விகளுக்கு	,,	2-0-0

வி. பி. வேறு. விசேஷ தாயித்துகளும் செய்து கொடுக்கப்படும். பதிலுக்கு ஸ்டாம்பு அனுப்பவும்.

கமலா அண்டு கோ,
பரங்கிமலைவழி.

11-வது வருடம்

தமிழ் மாதாந்த சஞ்சிகைகளில் பெயர் பெற்றதும், பல்லாயிரக் கணக்கான சந்தாதாரர்களை யுடையதுமான "ஆனந்தபோதினிக்கு" 11-வது வருடம் ஆடி மாதம் பிறக்கப்போகிறது. உடனே சந்தாதாரர்களாய்ச் சேருங்கள். மாதிரி காப்பி இனும்.

சந்தா வருடம் ஒன்றுக்கு	ரூ.	1 0
,, வெளி நாடுகளுக்கு	ரூ.	1 4

ஆனந்தபோதினி ஆபீஸ், மதராஸ்.

ஆச்சரியமான ஜோதிடம்

ஜாதகக்குறிப்பாவது, பிறந்தவருடம், மாதம் தேதி, நாழிகையாவது குறித்து அனுப்புகிறவர்களுக்குத் தற்காலம் நடக்கும் திசாபுத்தி ஒன்றுக்கு ரூ. 2. அதேபுத்திக்கு அந்தரம் வாரி எழுத ரூ. 5. ஜாதகம் முழுமைக்கும் பொதுப் பலன் எழுத ரூ. 15. அஷ்டவர்க்கம் வைத்து எழுத ரூ 25. (இதில் பணம், குடும்பம், மாதா, பிதா, கடன், குழந்தைகள், உத்யோகம், லாபம், இன்னும் மற்ற விசேஷ பலன்களின் விஷயங்களைக் குறித்து எழுதி அனுப்பப்படும்) சாதாரண மான 4 கேள்விகளுக்கு பதில் அளிக்க ரூ. 1. மேற்பட்ட கேள்விகள் ஒன்றுக்கு அணா 4. ரூ. 5-க்கு மேற்பட்ட ஆர்டர்களுக்கு முன் பணம் அனுப்பவேண்டும். தபால் சார்ஜு வேறு.

விலாசம்: வள்ளி ஜோதிட சாலை
30, சந்தா சாயபு தெரு,
இராயப்பேட்டை P. O. மதராஸ்.

---

3 வது வருடம்

"கிராம வாழ்க்கை" கிராம வாசிகளின் முன்னேற்றத்தைக் கருதி உழைத்து வரும் தமிழ் மாதப் பத்திரிகை இதில் பல அருமையான வியாசங்கள் வெளிவரும் மாதிரி பிரதி இனும் வருஷ சந்தா உள் நாடு ரூ 2. வெளிநாடு ரூ 2-8-0.

தமிழ் சட்ட புஸ்தகங்கள்

(புதிய பதிப்பு.)

பெரிய ஹிந்து லா ரூ. 2, புதிய விவகார சிந்தாமணி ரூ. 2-8-0, சிவில் புரோஸீஜர் கோட் ரூ. 3, இந்தியன் பீனல் கோட் ரூ. 3, புதிய கிராம பஞ்சாயத்து ஆக்ட் ரூ 1-2-0, புது கிராம முனிசிப் ஆக்ட் ரூ. 1-8-0, கிரிமினல் புரொஸீஜர் கோட் ரூ. 3, இதர சட்ட புஸ்தகங்களும், நாவல்களும், புராணங்களும், எம்மிடம் கிடைக்கும்.

கிராம வாழ்க்கை ஆபீஸ்,
மதராஸ்

Printed and Publis.ed by T. V. Kalyanasundara Mudaliar (Editor) at the Sadhu Press, 12-Ganapathi Mudali St., Royapettah, Madras.

END OF
ISSUE